

கல்கி
உல்லாசப் பயணிகள்
ஆரம்பிக்கும்
KALKI 15-7-79
75 காசு


BUY ME THAT ELEPHANT!
நேயர்களே!
டீ கடை
இன்னுபா, அந்த ஆள் போட்டோ புடிக்கிறான்.... புலி வேஷம் ஆடறான்?
ஹேய்! டைகர் ஜிக் டான்ஸ்!
ஓ.. இண்டியன் ஹிப்பீஸ்!
YOU HAVE GOT SOME BURNING PROBLEMS!
WE SHALL WAIT AND SEE.. HE BREAKS THAT STONE SLAB WITH THAT PIECE OF CLOTH!
OW! POT TRICK.. JUST LIKE ROPE TRICK!
பாருப்பா... என்ன இருந்தாலும் இங்கிலீசுகாரன் இங்கிலீசுகாரன் தான்!...

Kalki Shopping Page



M/s T. V. HOUSE,
61, IVth Avenue, Ashok Nagar,
Madras-600083 Phone: 423561

M/s VELTRONICS,
No. 159, Purasawalkam High Road,
Madras-600007
Phone: 664318 & 34599
Branch: Sydenhams Road,
Madras-600003

M/s RADIO AND ALLIED ENGINEERING COMPANY,
4/17-B, Mount Road,
Madras-600002 Phone: 810237

M/s ARUNA AND COMPANY,
No. 340, T. H. Road,
Madras-600021
Phone: 552728 & 553644

M/s GANESHRAM ELECTRONICS,
No. 178, M. S. Koil Street,
Madras-600013
Phone: 23292 & 554960

M/s M. N. ELECTRONICS,
No. 60-D, Royapettah High Road,
(Jammi Buildings)
Madras-600004 Phone: 74202

AD BUREAU

Kalki Shopping Page











உல்லாசப் பயணங்கள்

குமாரி மாலா ஜெயராம்:

(இரண்டாம் ஆண்டு ஆங்கில இலக்கியம், ஸ்டெல்லா மேரி கல்லூரி.)

ஏர்க்காடு:

சென்னை சென்டிரல் ஸ்டேஷனிலிருந்து முப்பது பேர் அடங்கிய எங்கள் பட்டாளம் ஏர்க்காடு பயணத்தைத் தொடங்கியது. வறுவல், மசாலா பண்டங்கள் கைமாறின. ஒரே தமாஷ், கலாட்டாதான். மற்றப் பயணிகள் சொல்லவும் முடியாமல், மெல்லவும் முடியாமல் திணறினர். இரவு 11—30 மணிக்கு மேல் கலாட்டாவைப் பொறுக்க முடியாமல் சண்டைக்கு வந்தனர். ஒரு வழியாகச் சமாதானமாகப் போனோம்.

காலை 5—15க்கு வண்டி சேலத்தை அடைந்தது. அந்தக் குளிரில் ஸ்டேஷனில் சாப்பிட்ட காப்பி என்கிற சுடுதண்ணீர் அமிர்தமாக இருந்தது!

பின்பு எல்லோரும் சேலம் டவுனிலிருந்து ஏர்க்காடு புறப்பட்டோம். அந்த பஸ் பயணம்தான் என்ன இனிமை! ஏர்க்காட்டைச் சுற்றி இயற்கைக் காட்சிகள் பார்ப்பதற்கு மிகவும் ரம்மியமாக உள்ளன. பறவைகளின் ஒலியும், காற்றில் அசையும் மரங்களும் மறக்கவே முடியாது. குழந்தைகள் பூங்காவுக்குச் சென்றோம். அங்கு வந்திருந்த இளைஞர்கள் எங்களை வைத்தவிழி வாங்காமல் பார்த்துக் கொண்டே இருந்தது நினைத்தாலே சிரிப்பு வருகிறது. ஏரியில் எல்லோரும் படகில் சென்றோம். தொட்டில் போல ஆடிக் கொண்டே சுற்றுப்புற எழிலைக் கண்டது இனிய விருந்தாகியது.

குமாரி பெட்டி குரியன்:


(மூன்றாம் ஆண்டு பொருளாதாரம், சென்னை கிறித்துவக் கல்லூரி:)

கோனே நீர்வீழ்ச்சி:

ஐந்து பெண்கள் உள்பட நாற்பத்தைந்து மாணவர்கள் சேர்ந்து ஆந்திராவில் உள்ள

○ எலிஃபெண்டா சிற்பம் ○ காஷ்மீர் ஏரி ○ கொனாரக் சிற்பம் ○ புவனேசுவர் லிங்கராஜா கோயில்









○ குமாரி மாலா ஜெயராம்

கோனே நீர்வீழ்ச்சிக்குச் செல்லத் திட்டமிட்டோம்.

பைலா பாடல்கள் ஒலித்தன. பயணம் சூடு பிடித்தது. சுராங்கனி பாடலுக்கு ஏற்றவாறு நடனமும் ஆடத் தொடங்கினர். டிரைவர் பெரிதாகக் கூச்சலிட்டார். பாட்டு நடனம் மும்முரத்தில் அவரை யாரும் சட்டை செய்யவில்லை.

மதிய உணவுக்கு முன் நீர்வீழ்ச்சியை அடைந்தோம். குற்றாலம் போன்று பெரிதாக இல்லாவிட்டாலும் தண்ணீருக்குப் பஞ்சமில்லை. மாணவர்கள் குளித்தார்கள். தோழி ஒருத்தி குளிக்க முனைந்த போது, கைப்பிடி நழுவி விழத் தெரிந்தாள். அவளை மாணவர் சிலர் காப்பாற்றினார்கள். மதிய உணவாக ஸாண்ட்விச்சும் கேக் வகைகளும் பரிமாறப் பட்டன, தவிர ஒவ்வொரு வரும் தாங்கள் கைப்படச் செய்த ஒரு பண்டத்தை மற்றவருக்குக் கொடுத்துச் சோதித்தார்கள். குரங்குப் பட்டாளம் நாங்கள் எதையும் நிதானமாய் ருசித்துச் சாப்பிட அனுமதிக்கவில்லை.



○ குமாரி பெட்டி குரியன்

திரு என். ரமேஷ்

(லயோலா கல்லூரி மூன்றும் ஆண்டு வணிக இயல்)

ஒரிஸ்ஸா :

எங்கள் ஒரிஸ்ஸாப் பயணத்தை வாழ்நாளில் மறக்கவே முடியாது. மிகவும் பிரசித்தி பெற்ற லிங்கராஜ் கோயிலுக்குச் சென்றோம். பின்பு சூரிய பகவான் கோயிலான புகழ் பெற்ற கோனாரக் சென்றோம். இருபத்தியாறு சக்கரங்கள் கொண்ட பிரும்மாண்ட ரதத்தினுள் சூரிய பகவானின் பெரிய சிலை சிரித்தவாறு மிக அற்புதமாக உள்ளது. ரதத்தைச் சுற்றிய சிற்பங்கள் கண்களுக்கு விருந்தாகும். இதில் பாலுணர்வைச் சித்திரிக்கும் சிற்பங்கள் ஏராளம். கலைக் கண்ணோடு அழகாகச் செதுக்கப் பட்டுள்ளன.



○ திரு. என். ரமேஷ்

ஒரிஸ்ஸாவில் ஒரு கிராமப் பகுதியான கோராபுட் – ஜெய்போர் வழியாக வந்து கொண்டிருந்தோம். அங்கு மலை ஜாதி ஆண்களும், பெண்களும் அதிகம். பெண்கள் கால்களில் இரும்பாலான அணிகள் பூண்டிருந்தார்கள். பெரிய பொட்டுடன் மார்புக் கச்சை இல்லாமல் இருந்தார்கள். ஆண்கள் நீண்ட தலைப்பாகையும், பெரிய வேட்டியும் அணிந்திருந்தார்கள். எங்கள் கார் அந்தப் பகுதியின் அருகே டியூப் வெடிக்க, நின்றுவிட்டது. மொழி தெரியா விட்டாலும் அந்த மலைச் சாதியினர் ஒரு நிமிடத்தில் நடந்ததை ஊகித்துக் கொண்டு எங்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து கொடுத்தார்கள். அவர்கள் கொடுத்த கூழை நாங்கள் பருகிய போது, பெண்கள் சிரித்தவாறு எங்களைப் பார்த்தனர். ஆண்களும் காவிப்பல் தெரியச் சிரித்தனர். கள்ளம் கபடமற்ற அந்தச் சிரிப்பை மறக்கவே முடியாது.

பேட்டி: ''ஸிக்கி''

○ ஜெய்ப்பூர் ஹவாமகால் ○ ஏர்க்காடு ஏரி ○ டில்லி - ஜந்தர் மந்தர்



ஓசியில் உல்லாசப் பயணம்!


கி. ராஜேந்திரன்

உல்லாசப் பயணங்களிலேயே மிகச் சிறந்தது எது என்று சொல்லுங்கள் பார்ப்போம்! ரயிலில் போவதா? காரில் செல்வதா? கப்பலில் மிதப்பதா? விமானத்தில் பறப்பதா? வானிலும் இன்றி நீர், பூமியிலுமின்றிக் காற்று மெத்தை மேல் வழுக்கிக்கொண்டு செல்லும் ஹோவர் கிராப்ட்டில் ஏறிப் பயணப்படுவதா? என்னைக் கேட்டால் இவை எதுவுமே இல்லை, ஓசியில் சுற்றுவதுதான் சிறந்த சுற்றுலா என்பேன்! அடாடா! அதற்கு ஈடு இணை ஏது?

எனக்கு அப்படிச் சில சமயம் அதிர்ஷ்டம் அடிக்கும். கொஞ்ச காலத்துக்கு முன்னால் கூட, 'ஆக்ராவில் ஒரு கருத்தரங்கு நடக்கிறது. வர முடியுமா? போக வரச் செலவுகளை நாங்கள் ஏற்கிறோம்' என்று ஒரு கடிதம் வந்தது. விடுவேனா? 'அனுப்புங்கள் விமான டிக்கெட்டை' என்று பதில் எழுதிப் போட்டேன்.

''ஆக்ராவுக்கா? அங்கேதானே தாஜ் மஹால் இருக்கிறது? என்னை அழைத்துப் போகப் படாதா?'' என்றாள் என் மனைவி.

''அழகுதான். அங்கே என்ன அழகுப் போட்டியா நடக்கிறது, நீ கலந்து கொள்ள? கருத்தரங்குதானே?'' என்று ஐஸ் வைத்தேன்.



நிலவொளியில் தாஜ்மஹால்

''மனைவியையும் அழைத்துப் போகிற மாதிரி கருத்தரங்குகள் நடப்பதில்லையா, என்ன?''

''அப்படியும் சில மகாநாடுகள் நடக்கும். ஆனால் நல்லவேளையாக இவர்கள் அவ்விதம் அழைக்கவில்லையே என்ன செய்ய?'' என்றேன்.

அவ்வளவுதான். அவள் கோபித்துக் கொண்டு, நான் புறப்படுவதற்கு நாலு நாள் முன்பும் திரும்பியபின் நாலு நாளும் என்னுடன் பேசவே இல்லை. எவ்வளவு வசதி பாருங்கள்! காசு கொடுத்துப் போகும் உல்லாசப் பயணமென்றால் மனைவியை விட்டுப் போக முடியுமா? மனைவியோடு மக்களையும் அல்லவா அழைத்துச் செல்ல வேண்டும்? கிளம்புமுன் முன்னேற்பாடுகளை விவாதித்துத் தீர்ப்பார்கள். திரும்பியபின் பயணத்தின் குறைநிறைகளை விமர்சித்துத் தீர்ப்பார்கள். நிம்மதி ஏது? இப்போதோ... ஜாலியாகப் பறந்தேன் நான்!



ஆக்ராவில் நடந்தது கிராமப் புறப் பத்திரிகைகள் பற்றிய கருத்தரங்கு. அதாவது இன்றைய பத்திரிகை உலகு கிராமங்களுக்கு அதிக முக்கியத்துவம் தர என்ன செய்யலாம்; கிராமப் புறச் செய்திகள் கட்டுரைகள் அதிகம் எழுதப்பட எவ்விதம் ஊக்கமளிக்கலாம்; கிராமப் புறங்களிலேயே சிறு பத்திரிகைகள் தொடங்குவதற்கான சாத்தியக் கூறுகள் என்ன என்றெல்லாம் விவாதிக்க வேண்டியது.





கருத்தரங்கை நடத்தியது பத்திரிகைச் சுதந்திரத்தைப் பாதுகாத்துப் பத்திரிகைகளின் தரமும் உயரப் பாடு படுவதற்கென அமைந்த இரு அறக்கட்டளைகள். ஒன்று அயல் நாட்டில் உருவான அறக்கட்டளை; மற்றது இந்தியாவிலேயே அமைந்தது.

கருத்தரங்குக்கு வந்திருந்த பிரதிநிதிகளை ஆக்ராவில் ஐந்து நட்சத்திர ஓட்டலில் தங்க வைத்தார்கள். முதல்நாள் முதல் கூட்டத்தில் முதலில் பேசியவர் எடுத்த எடுப்பிலேயே, ''கிராமப்புறப் பத்திரிகைகள் பற்றிய கருத்தரங்கை ஐந்து நட்சத்திர ஓட்டலில் தான் நடத்த வேண்டுமா?'' என்று ஆரம்பித்தார். எனக்கு வந்ததே கோபம்! கருத்தரங்கைக் காட்டாங் குளத்திலா நடத்துவார்கள்? காட்டாங் குளத்துக்கு நான் எப்போ வேணுமானாலும் போய்க் கொள்ளலாம். ஐந்து நட்சத்திர ஓட்டலில் தங்கும் வாய்ப்பு இப்போது விட்டால் பிறகு கிடைக்குமோ கிடைக்காதோ? எனவே,


''அழகுதான் போங்கள்; அடுத்தாற் போல் கார்ட்டரும் பிரஷ்னேவும் அணு ஆயுதக் குறைப்பு பற்றிப் பேச்சு வார்த்தை நடத்த வேண்டுமென்றால் அதள பாதாளத்தில் உள்ள அணு ஆயுதக் கிடங்கில் ஒரு ஹைட்ரஜன் குண்டை மேஜையாகப் பயன்படுத்தி நாப்ளாம் குண்டுகள் மீது அமர்ந்தபடிதான் பேச வேண்டும் என்பீர்கள் போலிருக்கிறதே'' என்றேன்.

உடனே எல்லாப் பிரதிநிதிகளும் என்னை ஆமோதித்தார்கள். அப்பாடா! ஓர் ஆபத்து விலகியது!

'அதுசரி, ஒரு கருத்தரங்கில் கலந்து கொள்ளச் செல்வது எப்படி உல்லாசப் பயணமாகும்?' என்று நீங்கள் கேட்கலாம். அது கருத்தரங்கில் நாம் என்ன செய்கிறோம் என்பதைப் பொறுத்திருக்கிறது. பிறர் சொல்வதையெல்லாம் கிரகித்துக் கொண்டு எந்த அளவுக்கு அந்த யோசனைகளைப் பயன்படுத்துவது என்று சிந்திக்கலாம். நாமும் சில வார்த்தைகள் பேசி நமது மேதா விலாசத்தைக் காட்டலாம். இப்படிச் செய்தால் அது உல்லாசப் பயணமாகாது தான். கழுத்தறுப்பான ஒரு கருத்தரங்காகவே விளங்கும். ஆனால் கண்மூடி கவனமாகக் கேட்பது போல் பாவனை செய்து கனவுலகில் சஞ்சரிக்கத் தொடங்கினால்... அதை விடச் சிறந்த உல்லாசப் பயணம் எது?

மொகல் என்ற அந்த ஐந்து நட்சத்திர ஹோட்டலே கிட்டத்தட்ட ஒரு தாஜ் மஹால் போலத்தான் இருந்தது. சில அம்சங்களில் தாஜை விடச் சிறப்பாகவும் கூட இருந்தது. தாஜில் மூன்று வேளை அருமையான அறுசுவை உண்டி கிடைக்குமா? நீச்சல் குளம் இருக்குமா? விசாலமான அழகிய பூங்கா, செயற்கை நீரோடைகள், அருவிகள், மினி கால்ஃப் கோர்ஸ், குளுகுளு அறை - அதில் ரேடியோ, டெலிபோன், பக்கத்து பாத் ரூமில் குளியல் தொட்டி, ஆளுயரக் கண்ணாடி, அப்புறம் மாலை நேரத்தில் கேளிக்கை நடனங்கள், பார், இத்யாதி இத்யாதி... இதற்கெல்லாம் தாஜ்மகாலில் எங்கே போக?

செங்கல் அடுக்கிச் சுவர் எழுப்பி மேலே சிமெண்ட் பூசாமல் விட்டதால் ஹோட்டல் முன்புறம் பார்த்தால் கோட்டை போலத் தோற்றமளிக்கிறது. உட்புறமோ சலவைக்கல் சுவர்கள் வழவழவென்று தாஜ்மகாலை






✖ ஃபதேபுர் சிக்ரி

✖ மொகல் ஹோட்டல்

நினைவூட்டுகின்றன. வாசலில் அலங்கரிக்கப்பட்டு அம்பாரியுடன் நிற்கும் யானை, சரித்திர காலத்தை நினைவூட்டுகிறது. இந்தச் சூழ்நிலையில் இருந்த எனக்குத் தாஜ் மகாலைப் பார்க்கும் எண்ணமே தோன்றவில்லை. பல ஆண்டுகளுக்கு முன் நான் பார்த்திருக்கும் அதே பழைய தாஜ்தானே என்று அலட்சியம்!




கருத்தரங்கு நிர்வாகிகள், நிலவொளியில் தாஜ்மகாலைப் பார்க்கலாம் என்று ஆசை காட்டினார்கள். அழைத்துப் போக சொகுசு பஸ்ஸையும், ஏற்பாடு செய்தார்கள். 'நிலவொளியில் தாஜ்' — 'சொகுசு பஸ்' என்ற இரு கொக்கிகளும் தான் என்னை மாட்ட வைத்து விட்டன.

நிலவொளியில் ஆனந்தமாகக் குளித்துக் கொண்டிருந்தது தாஜ். பின்புறம் யமுனைநதி முக்கால் நிர்வாணமாக (கவர்ச்சியாக எழுதப் பழகிக் கொண்டிருக்கிறேன்!) கால்வாசி மேனியை நீராடையில் மறைத்துக் கொண்டு நிலவொளியில் தகதகத்தது. தாஜில் துயில்கொண்டிருக்கும் மும்தாஜ் மகாலை விட ஷாஜஹானின் இன்னுயிர்க் காதலியை விட உலக அதிசயம் ஒன்று உருவாகக் காரணமாயிருந்த அரசியைவிட நான் அதிர்ஷ்டசாலி என்று நினைத்துக் கொண்டேன். ஏனெனில் மும்தாஜ் மகால் தாஜ்மகாலைப் பார்த்ததில்லை; நான் பார்த்து விட்டேன் அல்லவா?

மதுரா (ரிஃபைனரி) எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையால் சூழ்நிலை பாதிக்கப்பட்டு தாஜ்மகாலும் பாழாகி வருவதாகவும் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்றும் சொல்கிறார்கள். ஆனால் எனக்கோ இங்குள்ள வழிகாட்டிகள் (கைடுகள்) படுத்துகிற பாட்டால் சூழ்நிலை பாழாவதை விட — தாஜின் அழகும் அமைதியும் பாழாவதை விட — பெரிய பாதிப்பு ஏதும் இருக்க முடியாது என்றே தோன்றிற்று.

மூன்று நாள் மகாநாட்டினைச் சாமர்த்தியமாக இரண்டரை நாளில் முடித்துக் கொண்டு பிற்பகலை அவரவர் விருப்பப்படி செலவிட வசதி செய்து கொண்டோம். சிலர் ஊருக்குப் புறப்பட அவசரப்பட்டனர். சிலர் கடைத்தெருவுக்குப் பரிசுகள் வாங்கச் சென்றனர். நான் ஒரு சைக்கிள் ரிக்ஷாக்காரருடன் எனக்குத் தெரிந்த ஹிந்தியில் பேரம் பேசி நாலு ரூபாய்க்குப் பதில் ஆறு ரூபாய்தான் தருவேன் என்று ஒப்புக் கொண்டு ஆக்ரா கோட்டைக்குப் போய்ப் பார்த்து விட்டு வந்தேன்.



நான் அண்மையில் சுசீந்திரம் போயிருந்தேன். சுவாமி தரிசனம் செய்ய உள்ளே சென்ற போது, பாண்ட் சட்டையுடன் கோவிலுக்குள் செல்லக் கூடாது வேட்டி மட்டும் கட்டிக் கொண்டு உள்ளே செல்ல வேண்டும் என்று கூறி விட்டார்கள். என்னிடம் வேட்டி கிடையாது. இத்தனை தூரம் வந்து தரிசனம் செய்யாமல் திரும்பப் போகிறோமே என்று வருத்தத்துடன் சிணுங்கிக் கொண்டிருந்தேன். அப்போது கோவிலுக்கருகில் கடை வைத்திருப்பவர் "இங்கு வேட்டி கிடைக்கும். வாங்கிக் கொள்ளுங்கள். சாமி கும்பிட்டு விட்டு வந்தவுடன் திருப்பிக் கொடுங்கள். வாடகை 25 பைசா தான்!" என்றார். அவருக்கு நன்றி கூறி விட்டு வேட்டியை வாங்கிக் கட்டிக் கொண்டு தரிசனம் செய்து விட்டு வந்தேன்.

—டி. வி. பாலு

கோட்டை பத்திரமாக இருந்தது. யாரும் எங்கேயும் அதைத் தூக்கிக் கொண்டு போய் விடவில்லை. கோட்டை, கொத்தளம், அரண்மனை, தர்பார் மண்டபம், அந்தப்புரம், அதில் கணக்கற்ற அழகிகள் (கற்பனையில் தான்) எல்லாம் பார்த்தேன்.

கண்ணாடி அறை பார்க்குமாறு ஒரு கைடு சிலரை வற்புறுத்திக் கொண்டிருந்தான். ஒருவர் முகமே நூற்றுக்கணக்கான கண்ணாடிகளில் பிரதிபலிக்குமாம்! தினம் காலையில் எழுந்தால் க்ஷவரம் செய்து கொள்ளும் போது எனது ஒரு முக லட்சணத்தையே பார்க்க வெட்கமாயிருக்கிறது. அப்படி ஒரு மன்மதக் களை சொட்டும் இந்த முகத்தை நூறு நூறு கண்ணாடிகள் பிரதிபலிக்கக் கண்டால் அங்கு வேடிக்கை பார்க்க வந்துள்ளவர் கதி என்ன ஆவது என்று பரிதாபப்பட்டு அந்த அறைக்குள் நுழையாமல் மேலே சென்றேன்.

அரண்மனை மேல் மாடத்திலிருந்து யமுனையும் தொலைவில் தாஜ்மகாலும் மிக அழகாகத் தோற்றமளிக்கின்றன. தப்பித் தவறித் தலையைத் தாழ்த்தினால் கோட்டை மதிலுக்கும் அரண்மனைச் சுவருக்கும் இடைப்பட்ட குறுகலான இடம், குப்பை கூளம் நிரம்பியும் புதர் மண்டியும் கிடக்கும் ஆபாசக் காட்சி தென்படும். எனவே தலை குனியாமல் கம்பீரமாக நிமிர்ந்தே தாஜைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். தூரத்துப் பச்சை கண்ணுக்கழகு என்று சும்மாவா சொன்னார்கள்!

ஆக்ரா கோட்டையில் எனக்கு மிகவும் பிடித்தது அங்கிருந்த ஆயிரக் கணக்கான கிளிகள்தாம். கீச்சு மூச்சென்று அவை போட்ட கூச்சலும் மரத்துக்கு மரம் அவை மாறிப் பறந்ததும் அப்படியே நம் அரசியல்வாதிகளை நினைவூட்டின.

'ஆக்ரா வந்ததுதான் வந்தோம் ஃபதேபூர் சிக்ரி பார்க்காமல் திரும்பலாமா?' என்று தோன்றியது. மறுநாள் காலை டாக்ஸியில் சென்று வர எண்ணி விசாரித்தால் எண்பது ரூபாய் கேட்டான். கொடுப்பேனா, அவ்வளவு பெரிய தொகை? கருத்தரங்குக்கு வந்து இன்னும் ஊர் திரும்பாமல் இருக்கும் நாலு பேரைப் பிடித்தேன். ஃபதேபூர் சிக்ரியின் அருமை பெருமைகளை அவர்களுக்கு எடுத்துரைத்து அதைப் பாராமல் திரும்புவது எவ்வளவு பெரிய நஷ்டம் என்று உணர்த்தினேன். ஆளுக்குப் பதினாறு ரூபாய்தான் என்று ஆசை காட்டினேன், புறப்பட்டு விட்டோம். கிராமப்புறப் பத்திரிகைகள் கருத்

தரங்குக்கு வந்து விட்டு முதல் முறையாகக் கிராமப் புறங்களைக் கண்ணால் பார்த்துக் கொண்டே டாக்ஸியில் விரைந்தோம்.

ஃபதேபூர் சிக்ரி அக்பர் கட்டிய அழகிய நகரம். சுமார் நூற்றைம்பது ஆண்டுகள் இதன் சிறப்பு கொடி கட்டிப் பறந்தது. பிறகு தண்ணீர்த் தட்டுப்பாடு காரணமாகத்தான் இந்த நகரம் தன் மதிப்பை இழந்து விட்டது என்கிறார்கள். இப்படி பல ஆண்டுகளுக்குப் பின் தண்ணீர்ப் பஞ்சம் தோன்றுவதைவிட ஆரம்பத்திலேயே பயனற்றுப் போகும் வீராணம் திட்டம், கிருஷ்ணா நதி நீர் திட்டம் எல்லாம் மேலல்லவா? என்னதான் சொல்லுங்கள் அக்பரை விட நமது அரசியல் வாதிகள் கெட்டிக்காரர்கள் தான்!

ஃபதேபூர் சிக்ரி படிப்படியாகப் பொலிவிழந்து விட்டது. இந்த லட்சணத்தில் அந்தப் புரத்தில் ஜலக்கிரீடைக்கு எவ்வளவு தடபுடல் ஏற்பாடுகள் என்கிறீர்கள்! அரண்மனைகளும் கூட கோபுரங்களும் மாட மாளிகைகளும் சுற்றுலாப் பயணிகள் பார்த்து ரசிக்க இன்று பயன்படுகின்றன.

சரித்திரக் கதைகளைச் சினிமா எடுக்க ஏற்ற இடம் என்று நான் நினைத்துக் கொண்டிருக்கும்போதே அயல்நாட்டுக் குழு ஒன்று அங்கே வந்து சேர்ந்தது. ஃபாஷன் விளம்பரப் படங்கள் தயாரிக்கிறார்களாம். அக்குழுவிலிருந்த அழகிய பிரெஞ்சு நங்கையர் விதம் விதமான ஆடைகளில் தோன்றுவார்களாம். அரண்மனை, அந்தப்புரப் பின்னணியில் படம் பிடிப்பார்களாம். 'பேஷ்! சற்று நேரம் வேடிக்கை பார்க்கலாம்!' என்ற என் ஆசையில் மண் விழுந்தது. டைரக்டர் என் கையிலிருந்த ஆங்கில நாளிதழைப் பார்த்துத் தொலைத்து விட்டார். ''இந்திரா காந்தி கைது!'' என்று தலைப்பு. அவ்வளவுதான், பத்திரிகை படிப்பதிலும் இந்திய அரசியலை விவாதிப்பதிலும் இறங்கி விட்டார். படப் பிடிப்பு நடக்கவில்லை!

அன்று மாலை சென்னை திரும்ப நான் டில்லியில் விமானமேறியபோது அது ரொம்பத் தாமதமாகப் புறப்பட்டது. காரணம் இந்திரா கைதானதை யொட்டி ஒரு விமானம் ஹைஜாக் செய்யப்பட்டிருந்தது. நான் ஏறியிருந்த இந்த விமானத்திலும் யாராவது ஹைஜாக் பேர்வழி இருக்கப் போகிறானோ என்று முன்னெச்சரிக்கையாக சி. ஐ. டி அதிகாரிகள் பலர் விமானத்துக்குள் வந்து வந்து போனார்கள். நான் ஒரு ஹைஜாக் நிகழ்ச்சியிலோ அல்லது வெடி குண்டு சதியிலோ மாட்டிக் கொண்டு உயிரை விடத் தயாராயில்லை என்பதால் அவர்கள் முன் ஜாக்கிரதையாக இருந்ததை வரவேற்றேன். ஆனால் அவர்களில் பலர் என்னை உற்றுப் பார்த்ததுதான் எனக்குப் பிடிக்கவில்லை. என்னைப் பார்த்தால் என்ன ஹைஜாக் பேர்வழி மாதிரியா இருக்கிறது?

'இந்தக் கதையெல்லாம் இருக்கட்டும்; கருத்தரங்கு விஷயம் என்ன? அதனால் என்ன பயன் உண்டாயிற்று?' என்று கேட்கிறீர்களா? ரொம்பப் பிரமாதமான பலன் ஏற்பட்டது: அங்கே பேசப்பட்ட பேச்சுக்களை யெல்லாம் 'சைக்ளோஸ்டைல்' செய்து தந்தார்கள். அப்படிச் சேகரித்துக் கொண்டு வந்த 'ஒன் ஸைட் பேப்பரில்தான்' நான் கடந்த நாலு மாதங்களாகக் கட்டுரை, கதை, தலையங்கம், இத்யாதி எழுதி வருகிறேன். இதோ இந்தக் கட்டுரையையும் அந்தத் தாளில்தான் எழுதுகிறேன்!

ஆனால் ஒன்று. இதையெல்லாம் நான் தமாஷுக்காக, உங்களைச் சிரிக்க வைப்பதற்காக எழுதுகிறேன் என்பதை மறவாதீர்கள்! இதையே முழு உண்மை என்று கருதுவீராயின் அப்புறம் எனக்கு இதுபோன்ற கருத்தரங்குகளுக்கு அழைப்பு வருவதே நின்று விடும். அப்புறம் நான் எப்படி ஓசியில் உல்லாசப் பயணம் செய்வதாம்?


'பதான் கோட்' என்ற எல்லைப் பிராந்தியத்தின் அருகேயுள்ள 'காட்ரா' என்னுமிடம் ஒரு 'சக்திபீடம்!'. இங்குள்ள மலையில் 'நானூறு' வருடங்களாக, நீக்கமற நான்கு சிறு துவாரம் வழியாக வந்து கொண்டிருக்கிறது. சமீபத்திலுள்ள கிணற்றில் நெருப்புக் குச்சியைக் கிழித்துப் போட்டால், நீர்மேல் நெருப்பு ஒரு ஐந்து நிமிடத்துக்கு எரிகிறது. இந்த இடத்திலுள்ள அம்மன் கோயிலைக் கட்டியவர் 'அக்பர்' சக்கரவர்த்தி.

காஷ்மீர் - ஸ்ரீநகர் அருகிலுள்ள 'பவானி தேவி' கோவிலில் அம்மன் சன்னதியைச் சுற்றியுள்ள சிறு அகழி போலுள்ள நீர் ஒவ்வொரு மூன்று மாதமும் நிறம் மாறுகிறது.

ஜெய்ப்பூர் 'ஹவா மஹால்' முன்புறம் பார்த்தால் வானளாவும் கோட்டை இருப்பது போல் தோன்றும். வெறும் முன் பக்கத்துச் சுவர்தான் அப்படித் தோற்றமளிக்கிறது. பின்புறமும், பக்கத்திலும் சுவர் கிடையாது.

அகமதாபாத் ரயில்வே ஸ்டேஷன் அருகிலுள்ள மசூதியில் இரு கோபுரங்கள் Minarets உள்ளன. ஒன்றை அசைத்தால் மற்றொன்றும் அசைகிறது. அதனால் இவைகளை 'Shaking Minarets' என்று அழைக்கிறார்கள். —வேணுகோபால்.







சாத்தனூர் சென்ற குழந்தைகள்

ஒன்பது முதல் பதினொரு வயதுவரை ஐந்து குழந்தைகள் சாத்தனூர் சென்று வரக் கல்கி காரியாலயம் ஏற்பாடு செய்தது. அவர்களை அழைத்துச் செல்லும் பொறுப்பை ஏற்றுக் கிளம்பினேன்.

தாம்பரம் பேபி மீடில் ஸ்கூலில் ஐந்தாவது படிக்கும் ஷீலா, புரசைவாக்கம் லேடி. எம். ஸிடி முத்தைய செட்டியார் உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் லதா, சென்னை கிறிஸ்டியன் காலேஜ் ஹைஸ்கூலில் ஆறுவது படிக்கும் சுரேந்திரநாத், தாம்பரம் சேவா சதனில் ஆறுவது படிக்கும் ராமானுஜன்(ரகு) வடபழனி எம். ஜி ஆர். ஸ்கூலில் ஐந்தாவது படிக்கும் ரங்க ராமானுஜம் (ஜில்லு) ஆகிய ஐந்து குழந்தைகளும் கொப்பளிக்கும் உற்சாகத்துடன் கையில் சிறுசிறு பைகளில் மாற்று உடைகள் எடுத்துக் கொண்டு புறப்பட்டனர்.

பல்லவன் செய்த சண்டித்தனம்:

வசதிப்பட்ட வேன், அல்லது காரில் செல்வதைவிட பஸ்ஸில் சென்றால் உல்லாசப் பயணம் சுவையாக இருக்கும் என்று முடிவெடுத்துச் சென்னை பிராட்வே பஸ் நிலையத்தில் திருவண்ணாமலை செல்லும் பல்லவன் விரைவுப் பேருந்தில் ஏறினோம்.

பஸ் கிளம்பியதும் குழந்தைகளின் குதூகலத்துக்கு எல்லையே இல்லை.

ஆனால் திருஷ்டி பரிகாரம் போல் பல்லவன் சதி செய்ய ஆரம்பித்தான். கிண்டியைத் தாண்டுவதற்குள்ளாக பஸ்ஸின் ரேடியேட்டரில் ஏராளமாகப் புகை. தாம்பரம் அருகிலுள்ள பணிமனைக்கு வண்டியை எடுத்துச் சென்று, 'இனி வேறு பஸ் வந்துதான் போக முடியும்' என்று பயணிகளைக் கண்டக்டர் இறக்கி விட்டு விட்டார்.

குழந்தைகளுக்கு ஏமாற்றம். 'வேறு பஸ் வரும். சாத்தனூர் நிச்சயம் போகலாம்' என்று ஆறுதல் சொன்னாலும் அவர்களது சந்தேகம் தீரவில்லை.


இரவு மணி எட்டாகி விட்டது. கையில் கொண்டு வந்திருந்த சப்பாத்திக் கிழங்கு, தேங்கா பர்பி, பஹனாளா பாத், சிப்ஸ் போன்ற பலகாரங்களை விநியோகித்ததும் குழந்தைகளின் உற்சாகம் திரும்பிற்று. சாப்பிட்டு முடிவதற்கும் பஸ் வருவதற்கும் சரியாக இருந்தது.


பயணம் தொடர்ந்தது.

உண்ட களைப்பில் குழந்தைகள் தூங்கி விட்டனர்.

திருவண்ணாமலையை பஸ் அடைந்தபோது மணி இரவு இரண்டு. நடு இரவில் அயர்ந்து தூங்கும் குழந்தைகளை எழுப்பி, ஹோட்டல் அறைக்குத் தங்க அழைத்துச் செல்ல வேண்டுமே என்று நான் மயங்கி நின்ற போது, டிரைவரும் கண்டக்டரும் எனது உதவிக்கு







வந்தனர். 'தூங்கும் குழந்தைகளை எழுப்ப வேண்டாம். பஸ்ஸிலேயே ஓய்வெடுத்துக் கொண்டு, விடியற்காலை நீங்கள் கிளம்பி விடுங்கள்' என்று அனுமதி அளித்தனர்.

பொழுது விடிந்தது.

சிட்டுக் குருவிகள் போல் பொங்கும் மகிழ்ச்சியுடன் குழந்தைகள் செயல்பட்டது கண் கொள்ளாக் காட்சி.

பயணிகள் விடுதி ஒரு பசுமை நினைவு :

சாத்தனூரை பஸ் அடைந்ததும் குழந்தைகளுக்குத் தலைகால் புரியவில்லை. சுரேந்திரன் தலைமையில் ஐந்து குழந்தைகளும் இங்கும் அங்கும் ஓட ஆரம்பித்தனர். அவர்களை ஒன்று திரட்டி அழைத்துச் செல்வது ஒரு பெரிய சாதனையாக இருந்தது.

முன்பே கடிதத் தொடர்பு கொண்டிருந்த தால் பொது மராமத்து இலாகாவின் பயணிகளுக்கான பங்களாவில் தங்க வசதி கிடைத்தது. அற்புதமான இடம். ப்ரிஜ், கெய்ஸர் உட்பட சிறப்பான வசதிகள்.

ப்ரிஜ்ஜிலிருந்து ஐஸ் வாட்டரைக் குடிப்பதில் குழந்தைகளுக்குள் போட்டி. அதிகமாக ஐஸ் வாட்டர் குடித்துக் குழந்தைகளுக்கு உடம்புக்கு வந்துவிடப் போகிறதே என்று என்னுள் பயம்.

சுடான வெந்நீரில் குளித்து ஆவி பறக்கும் இட்டிலி, வடை, தோசை சாப்பிட்டனர்.

பலவித வர்ணங்களில் உடைகளை விதம் விதமாக அணிந்து கொண்டு வண்ணத்துப் பூச்சிகளைப் போல் ஓடியாடும் குழந்தைகளின் உற்சாகம் என்னையும் தொற்றிக் கொண்டது.

அணைக்கட்டைக் காணக் கிளம்பினோம்.

அணைக்கட்டு மேலே....

அணைக்கட்டின் மேலே போகும் வழியில் பிரம்மாண்டமான காந்தி சிலை கட் அவுட்டைக் கண்டதும் குழந்தைகள் பிரமித்து நின்று விட்டனர்.

அருகில் தோட்டத்தில் வேலை செய்யும் ஆண், பெண் சிலைகளை உண்மையான நபர்கள்

மேலே:

✖ பரிசுப் பொருள்களுடன் குழந்தைகள்
✖ எப்படி இந்த போஸ்?
✖ அசல் யானைகள் இல்லை!

கீழே:

✖ நாங்களும் உழைப்புக்கு அஞ்சாதவர்தான்!
✖ சாத்தனூர் அணைமீது ஏறிக்கொண்டிருக்கும் போது...
✖ புள்ளி மான்களுடன் பள்ளி மான்கள்!
✖ தோட்டக்காரர் ரொம்ப நல்லவர்!...





என்று எண்ணிக் குழந்தைகள் ஏமாந்து விட்டனர். அச்சிலைகளைப் போலவே போஸ் கொடுத்தனர். புகைப்படம் எடுத்தோம்.

அணைக்குக் கீழே சுமார் 78 அடி உயரத் தண்ணீர். தூரத்தே சிறுசிறு படகுகள் மிதந்தன. ரம்யமான காட்சி.

அணைக்கட்டின் மேலே ஒரு முனையிலிருந்து மறுமுனைக்குக் குழந்தைகளைக் கட்டுக்கோப்பாக அழைத்துச் செல்வது கஷ்டமாக இருந்தது. அந்த அளவுக்கு உற்சாகம் கரை புரண்டது அவர்களுக்கு. அவர்களது மகிழ்ச்சிக்கும், சுதந்திரத்துக்கும் குந்தகம் வராமலும் அதே சமயம் ஜாக்கிரதையாகவும் அழைத்துச் செல்ல வேண்டி இருந்தது.

உல்லாசப் பயணம் போகிறவர்களுக்கு எந்தெந்த ஊர்களில் என்னென்ன ஆகாராதிகள் பிரசித்தமானவை என்று அறிய இதோ ஒரு அட்டவணை:

திருச்செந்தூர் - இலை போளி
விருதுநகர் - கருப்பட்டி போளி
செங்கோட்டை - உளுந்து வடை.
மணப்பாறை - முறுக்கு.
திருவனந்தபுரம் (கோவிலில்) - அன்றுடம் இடித்த அவல் பால் பாயசம்.
வைக்கம் - (கோவிலில்) பால் பாயசம்.
பழனி - பஞ்சாமிருதம்.
விழுப்புரம் (ஸ்டேஷன்) - காப்பி
பண்ருட்டி - பலாப்பழம்.
சிதம்பரம் (நடராஜர் கோவிலில் இணைந்துள்ள பெருமாள் கோவில்) - பிரசாதம்.
மாயவரம் - மசால் வடை.
கும்பகோணம் - டிகிரி காப்பி
தஞ்சாவூர் - முந்திரிப் பருப்பு, குடை மிளகாய்,
கங்குவார் சத்திரம் - உளுந்து வடை.
மைலாப்பூரில் பிச்சு பிள்ளைத் தெருவில் பெண்மணி நடத்தும் ஹோட்டலில் வெள்ளி இரவுகளில் வெல்லக் கொழுக் கட்டை உப்பு கொழுக்கட்டை.
மதுரா (வடக்கே கிருஷ்ணன் கோவிலில்) பொரி விளங்காய் உருண்டை.

வி. எஸ். கிருஷ்ண மூர்த்தி.



நுனி நாக்கில் நடமாடும் ஆங்கிலத்துடன் வரும் ஷீலா; பெரிய மனுஷிபோல் அமெரிக்கையாகப் பேசும் லதா; ஜில்லுவின் சாதுத்தனம்; ரகுவின் வால்தனம்; அதற்குத் தூபம் போடும் சுரேந்திரனின் சுட்டித்தனம் — ஆகியவை ஒருங்கிணைந்து இப்பயணத்தை மறக்க முடியாத அனுபவம் ஆக்கின.

மதியம் மணி பன்னிரண்டு அடிக்கவும் குழந்தைகளின் வயிற்றிலும் மணி!

விடுதியை நோக்கிப் புறப்பட்டோம்.

சுவையான உணவு : சுகமான தூக்கம் :

காலையிலேயே ஏற்பாடு செய்து விட்டிருந்ததால், தங்கும் விடுதியில் இருந்த உதவியாளர் உணவை வரவழைத்து எங்களுக்காகக் காத்திருந்தார்.

டேபிள் சர்வீஸ். சண்டித்தனம் செய்யாமல் குழந்தைகள் வயிறார உண்டனர். கூட ஐஸ் வாட்டரும்தான்!

ஒரு அரைமணி ஆனந்தமான தூக்கம்.

சுரேந்திரன் கண் விழித்தான். எல்லோரையும் எழுப்பி விட்டான்.

மறுபடியும் உடை மாற்றம்.

விடுதியின் வெளியே உள்ள அற்புதமான பூங்காவில் குழந்தைகள் அரைமணி விளையாடினர். மறுபடியும் அணைக்கட்டை நோக்கிக் கிளம்பினோம்.

சாத்தனூருக்குப் பிரியா விடை :

அணைக்குக் கீழே உள்ள பூங்காவில் சறுக்கு மரம் ஆடுவதில் குழந்தைகளுக்கு இருந்த குஷிக்கு அளவே கிடையாது. சறுக்கு மரத்தை விட்டு வரவே அவர்களுக்கு மனமில்லை.

ஒருவழியாக அவர்களைச் சரிப்படுத்தி அழைத்துக் கொண்டு மேலே தொடர்ந்தேன்.

அங்கு வளர்க்கப்பட்டு வரும் மிருகங்களைக் கண்டதும் குழந்தைகளுக்கு ஏகக் கொண்டாட்டம். மான்களுக்கு பிஸ்கட் கொடுத்து மகிழ்ந்தனர். முள்ளம்பன்றி, கரடி, ஆமை, மயில் ஆகியவற்றை ஆசைதீரப் பார்த்தனர்.

பிரம்மாண்டமாகச் செய்து வைக்கப் பட்டிருந்த யானைப் பொம்மைகளை நிஜயானைகள் என்று முதலில் நினைத்து விட்டனர்.

பிறகு பொம்மைகள் தாம் என்று தெரிந்ததும் அவற்றின் மேலேறிக் குதித்து விளையாடினர்.

அங்கிருந்து மாடல் லேட் ஹவுஸ் மேலேறினர். பாதுகாப்பாக உடன் சென்றேன்.

லைட் ஹவுஸிலிருந்து இறங்கியதும், அருகில் உள்ள பூங்காவில் அரைமணி ஆனந்தமாக விளையாட்டு.

இதற்குள் சாத்தனூரிலிருந்து திண்டிவனத்துக்கு நேராகச் செல்லும் பஸ் வந்ததால் இரவு சென்னைக்குத் திரும்பி விடலாம் என்கிற எண்ணத்தில் கிளம்பினோம்.

மறுநாள் காலை குழந்தைகளுக்கு 'கல்கி' சார்பில் அழகான மீரா, செட்டியார், செட்டியாரம்மா பொம்மைகளை அன்பளிப்பாக அளித்து அவரவர் பெற்றோரிடம் குழந்தைகளை ஒப்படைத்தேன்.

ஏற்பாடு: **ரங்கா**

புகைப்படங்கள்: **மண்ணை மூர்த்தி**

பிரெஞ்சு தேசத்தைச் சேர்ந்த கணவன் மனைவி மெக்குவல், பிரிக்கெட் ஆகிய இருவரும் சென்னை வந்துள்ளார்கள். அவர்களிடம் 'சுற்றுலா இனிமையாக இருந்ததா? குறைகள் ஏதும் உண்டா?' என்று கேட்டபோது:

''முக்கியமான தேவை நடுத்தர வர்க்கத்தினர் தங்க நல்ல ஹோட்டல்கள். இந்தப் பிரச்னை தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியாவின் மற்ற பெரிய நகரங்களிலும் உள்ளது. ஐந்து நக்ஷத்திர ஹோட்டலிருக்கிறது. அப்படி இல்லையென்றால் சுத்தத்தைப் பற்றி சிந்திக்கவே முடியாத அளவுக்குத் தாழ்ந்த ஹோட்டல்கள்.

ஸ்விட்சர்லாந்தில் எல்லாமே அதிக விலை தான். ஆனால் அங்கு சுத்தமும், பாதுகாப்பும் இரு கண்களாகப் பாவிக்கப் படுகின்றன. வெளி நாட்டினரைக் கவர இவை இரண்டும் அத்தியாவசியத் தேவைகள். நாங்கள் ராஜஸ்தான் சென்றிருந்தோம். ஓர் ஓட்டலில் போய் இறங்கினோம். அவர்கள் எடுத்த எடுப்பில் சொன்னது 'இங்கு மதுவிலக்கு உள்ளது'. என்றுதான். பர்மிட் தருகிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் ஊர் சுற்றிப் பார்த்துக் களைத்தபோது சட்டென்று தாகம் தணிய ஒரு பீர் அருந்தலாம் என்றால், கிடையாது! ஏன் இப்படி?

எங்களை எல்லாம் பார்த்து விட்டால் வாடகை வண்டி ஓட்டுபவர்கள் ஏன்தான் கட்டணத்தை உயர்த்துகிறார்களோ? எங்களிடம் சென்னையின் வரைபடம் இருக்கிறது. ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்குப் போக எவ்வளவு தூரம் என்று எங்களுக்குத் தெரியும் ஒரு கி. மீட்டருக்கு இவ்வளவு ரூபாய் என்றால் கணக்குப் போட்டு ஒரு குழந்தை கூடச் சொல்லி விடுமே!

கொடுப்பவர்கள் ஏதோ உயர்ந்தவர்கள் என்பது போலவும், வாங்குபவர்கள் ஏதோ தாழ்ந்தவர்கள் என்பது போலவும், ஆகிவிடும் என்பதுதான் எங்கள் எண்ணம். அதனால் தான் பிச்சை போடுவதையே நாங்கள் வெறுக்கிறோம். உங்கள் நாட்டிலோ அது தான் மிகவும் அதிகமாயிருக்கிறது.

இந்தியாவை நாங்கள் இந்தியாவாகவே பார்க்க விரும்புகிறோம். உங்களது கலாசாரம், பண்பாடு, மதம், கடவுள் நம்பிக்கை ஆகியவைகளைத்தான் நாங்கள் அதிகம் விரும்புகிறோம். ஓவியம், சிற்பம், நாட்டியம் ஆகியவை அதிகமிருக்கின்றன, எங்களைக் கவர. இவை இருக்கும்போது மற்ற நாடுகளைப்போல் இரவுக் கேளிக்கை விடுதிகளும் மற்ற களியாட்டங்களும் தேவை இல்லை. சிறந்த கலை அம்சங்கள் இல்லாத நாடுகளில் தான், சூதாட்ட விடுதிகள், இரவு கேளிக்கை விடுதிகளை வைத்து வெளி நாட்டவரைக் கவரப் பார்ப்பார்கள். தாஜ்மஹால் முக்கியமா? நைட் கிளப் முக்கியமா?

ஓரிடத்தில் அணி அணியாகக் குடிசைகள்; மற்றோர் இடத்தில் அடுக்கடுக்கான மாளிகைகள். இந்த ஏற்றத்தாழ்வு எங்கள் நெஞ்சை உலுக்குகிறது.

அயல்நாட்டார் பார்வையில்...








✖ கடற்கரையில்
✖ காஞ்சியில் பட்டுத் தறியைப் பார்வையிடல்
✖ கேரளாவில் கோவளம் கடற்கரைக் குடில்

யாருமே நம் நாட்டுக்கும் நகரங்களுக்கும் அதிகமாக வெளி நாட்டவர்கள் வரவேண்டுமென்றுதான் விரும்புவார்கள். ஆனால் அதற்கான முயற்சிகளையும் எடுத்துக் கொள்ள வேண்டுமில்லையா? சென்னை, தென்னகத்தின் ''தலைமை நகரம்'' என்று புகழ்ந்து பேசப்படுகிறது. ஆனால் இந்தப்பிரசாரம் போதாது. இது வெளிநாட்டவர் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்துக்குச் செல்லும் வழியில் பார்த்து விட்டுப் போகும் நகரமாக மட்டும் இருக்கக்கூடாது. சென்னையை, தமிழகத்தைப் பார்ப்பதற்கென்றே அயல் நாட்டவர் வருமாறு ஏற்பாடு செய்யவேண்டும். சிறப்பு அம்சங்கள் என்ன, எதை எதை வாங்க எங்கெங்கே செல்ல வேண்டும் என்பது போன்ற விவரங்கள், சென்னையின் வரைபடம், சென்னையில் உள்ள சில முக்கியப் ஹோட்டல்கள், அவற்றின் வாடகை எவ்வளவு போன்ற பல விவரங்களையும் துண்டுப் பிரசுரங்களாக அச்சடித்து இலவசமாக அளிக்க வேண்டும்: விமான நிலையம், ரயில் நிலையம், முக்கியமான ஹோட்டல்கள் இவை இருக்குமிடங்களை வரை படங்களாகப் பார்வையில் படும்படி முக்கிய இடங்களில் பெரிதாக எழுதி வைக்க வேண்டும்.

இந்தியாவில் என்னைக் கவர்ந்த இரண்டு இடங்கள்: ஒன்று காசி, அங்கு நான் கடவுளையே கண்டேன். அங்குள்ளவர்கள் எல்லாரும் ஆண்டவனைப்பற்றியே சிந்தித்துக்கொண்டிருக்கிறார்கள். இரண்டாவதாக என்னை மிகவும் கவர்ந்தது பாலைவனங்கள். திடீரென்று ஒட்டகங்கள் வருகின்றன. அதன் மேலிருந்து இனிமையான இசை ஒலிக்கிறது.

உல்லாசப் பயணிகளை நீங்கள் குறைவாகச் செலவு செய்ய வைத்தால் இன்னும் அதிகம் பேர் வருவார்கள். அதிக வருவாய் கிடைக்கும்.

பேட்டி: குமார்







● நான் எத்தனையோ முறை சென்னை வானொலி நிலையத்தாருக்கு நேயர்விருப்பத்தில் சில பாடல்களை ஒலிபரப்பும்படி கேட்டு எழுதியும் அவர்கள் அப்பாடல்களை ஒலிபரப்பாமல் இருப்பதைக் கண்டு ஆத்திரமடைந்தது உண்டு. துறைவன் பேட்டியின் மூலம் நிலையத்தார் மீது நான் ஆத்திரப் பட்டது தவறு என்பதை நன்கு உணர்ந்து கொண்டேன்.
போடிநாயக்கனூர், எல். வி. மணி

● கல்யாண வீட்டிலும் மற்ற பொதுக் கூட்டங்களிலும் வானொலி நிலையம் தடைசெய்த திரைப்பாடல்கள் ஒலிபரப்பப் படுவதில்லையா? அப்பொழுது நாம் காதில் பஞ்சை வைத்து உட்கார்ந்திருந்தால் கூடக் கேட்கிறதே! அதை யார் தடுப்பார்கள்?

ஒரு பாடல் ஆபாசம் என்றால் அதை, சென்ஸார் போர்டு தடை செய்யட்டும்! அப்பாடலுக்கு முழுத்தடை விதிக்கட்டும்! அதை விட்டுவிட்டு, இலங்கை வானொலியில் ஒரு பாடலைக் கேட்கலாம், கல்யாண வீட்டில் ஒரு பாடலைக் கேட்கலாம். நாம் இசைத் தட்டை விலைக்கு வாங்கிக் கேட்கலாம். அதை நாம் ஒலிப்பதிவு செய்து கொண்டு திரும்பத் திரும்பக் கேட்கலாம். ஆனால் வானொலியில் கேட்க முடியாது. இது என்ன அபத்தநிலை?
கம்பம் எம். சந்திரசேகரன்

● பாரதியார் பாடல்களை நீண்ட நாட்களாகவே பலர் பாடி அவற்றை வானொலி நிலையத்தார் ஒலிபரப்பி வந்தனர். ஆனால் சில காலம் முன்பு திரு எம். பி. சீனிவாசன் என்பவர் பழைய பாடல்களுக்குப் புதுமையாக இசையமைக்கிறேன் என்ற பெயரால் அபத்தக் களஞ்சியமாக, அவலட்சண இசையாக அமைத்து அவைகளை வானொலியில் ஒலிபரப்புகிறார்கள். கேட்டால் பாரதியாரே வெட்கித் தலை குனிவார். இதுபோன்ற பல நிகழ்ச்சிகளால் மக்களின் ரசனைகளையே கெடுத்துக் கொண்டிருக்கும் வானொலி நிலையத்தாரை மன்னிக்கவே முடியாது.
கோவை க. இரா. மணவழகன்

● 'நாலுபேர் முடிவு செய்ததை நாலுகோடி பேர் சொன்னாலும் மாற்றிக் கொள்ள மாட்டோம்' என்கிற வாதம் எமர்ஜென்ஸி போய் இரண்டு வருடம் ஆகியும் மாறாதது வருத்தம் அளிக்கிறது.
தூத்துக்குடி எல். ஜி. சங்கர்

● படம் வெளிவருமுன் பல மாதங்கள் விவித் பாரதியின் வர்த்தக ஒலிபரப்பில் 'பொண்ணு ஊருக்குப் புதுசு' படத்தைப் பற்றிய விளம்பரம் ஒலிபரப்பிக்கொண்டிருந்தனர். அதில் இந்த 'ஓரம் போ'... பாடலின் ஒரு பகுதியை ஒலிபரப்பினார்களே — தொடர்ந்து தினமும் — அது எப்படி சாத்தியமானது? பணம் கொடுத்து விளம்பரம் செய்தால் நயம் சிறிதுமில்லாப் பாட்டை, ஒலிபரப்ப வானொலி தயார் போலும்!
வேலூர் ஜே. வி. நாதன்

● பிரபலமான பாடல்கள் காப்பி அடிக்கப்பட்டால் ஒலிபரப்புவது இல்லையாம். ''எங்கிருந்தோ வந்தான்'' என்ற படிக்காத மேதை பாடலைக் கண்ணதாசன் பாரதியார் வரிகளிலிருந்து தத்து எடுத்துக் கொண்டது இவர்களுக்குத் தெரியாது போலும்.

பாலுணர்ச்சியைச் சித்திரிக்கும் பாடல்களைத் தாங்கள் ஒலி பரப்புவதில்லை என்று அவர் கூறுவது வேடிக்கை. இருபொருள் உள்ள பாடல்கள் ஏராளமாக உதாரணம் தரலாம்.

அரசியல் வாடை பாடலில் வீசக் கூடாதாம். ''பட்டத்து ராஜாவும், பட்டாளச் சிப்பாயும்'' என்ற மீனவ நண்பன் படப் பாடலில் கொஞ்சம் கூட அரசியல் வாடை வீசவில்லை! ஏனெனில் அதில் நடித்தவர் இன்றைய முதல்வர் அல்லவா?

'ஓரம்போ' என்ற பாடலில், பாடலுக்குத் தேவையான நயம் இல்லாமல் வசனத்தைக் கேட்பதைப்போல் உணர்ச்சி ஏற்படுகிறதாம்.


'ஓரம்போ!'- வாசகர் தீர்ப்பு

நவக்கிரகம் நீங்க நவக்கிரகம் — அந்தநாள் ஞாபகம் நெஞ்சிலே வந்ததே — போன்ற பாடல்கள் எந்த ரகம்?
ஆங்கரை ஏ. ஜே. விசுவநாதன்

● வானொலி விஷயம் இருக்கட்டும், சில படங்களில், ஹிட்டான பாடல்கள் படங்களிலேயே இடம் பெறுவதில்லை. காசு கொடுத்துக் காணும் மக்கள் எவ்வளவு ஏமாற்றம் அடைகிறார்கள் தெரியுமா? நாங்கள் யாரிடம் முறையிட? வானொலியில் பாடல்கள் ஒலிபரப்பாகாததால் ஏமாற்றமுற்ற கங்கை அமரன், படத்தில் பாடல்கள் இடம் பெறாததால் ஏமாற்றமுறும் மக்களையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.
எர்ணாகுளம் ஷே. ஹாஜா நஜீமுதீன்



அடுத்த இதழில் இன்னும் சில கடிதங்கள் இடம் பெறும்.



உடம்பைத் தேற்றிக்கறேன்.. அவ்வளவு தான்! நீங்க ஒண்ணும் சந்தேகப்படாதீங்க!
ஜெய்பூரில் ரிக்ஷாக்காரரைக் காதலித்துக் கல்யாணம் செய்து கொள்ள மேற்கு ஜெர்மனி யுவதி முயன்றது பாஸ் போர்ட், விஸா சிக்கல்களிலிருந்து தப்புவதற்குத்தான்! — செய்தி
நான் இவரைக் காதலிக்கறேன்னு சொல்றேன்.. நீங்க எதுக்கு என் பாஸ்-போர்ட்டை சோதிச்சிட்டு இருக்கீங்க?
நான் வெடிவைக்கறேன்னு நான் கூட புடிச்சுகிட்டு இருக்கறேன்!
நாராயணசாமி நாயுடு
விவசாயிகள்

கல்கி

1979 ஜூலை 15

சித்தார்த்தி ஆனி 31

மலர்: 37 இதழ்: 50



தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற - எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.

தந்திரம் வேண்டாம்; திட்டம் வேண்டும்

எண்ணெய் உற்பத்தி செய்து ஏற்றுமதி பண்ணும் நாடுகள் மறுபடியும் எண்ணெய் விலையை உயர்த்தியுள்ளன. இதனால் நமது எண்ணெய் இறக்குமதியில் 1200 கோடி ரூபாயாக உயரும். இது ஏற்கெனவே மதிப்பிட்டதை விட நாலு மடங்கு அதிகம்!

பெட்ரோல் டீசல் கெரசின் இத்யாதி பொருள்களின் விலைகளை மறுபடியும் அரசு உயர்த்தும் என்று எதிர்பார்க்கலாம். இதன் விளைவாகப் போக்குவரத்துச் செலவு அதிகரித்து மற்ற பண்டங்களின் விலைகளும் உயரும்.

குறைந்த அளவில் பெட்ரோல் பயன் படுத்துவோருக்கு மத்தியதர வர்க்கத்தினருக்குக் — குறைந்த விலையில் பெட்ரோல் கிடைக்கவும் அதிகம் பயன் படுத்துவோருக்கு — செல்வந்தருக்கு — அதிக விலையில் பெட்ரோல் கிடைக்கவும் ஏற்பாடு செய்ய அரசு உத்தேசித்துள்ளதாகத் தெரிய வருகிறது. இந்த மருந்து வியாதியைவிட மோசமானது. அநாவசியக் குழப்பங்கள் லஞ்ச ஊழல்கள் கள்ள மார்க்கெட் எல்லாம் பெருகும்.

உண்மை என்னவெனில், முன்பு பல தடவைகளில் எண்ணெய் ஏற்றுமதி நாடுகள் விலையை ஏற்றிய போதெல்லாம் அதைவிட மிக அதிகமாகவே நமது அரசு பெட்ரோல் டீசல் முதலியவற்றின் விலைகளை உயர்த்தி வந்திருக்கிறது. அரபு நாடுகள் மீது பழியைச் சுமத்தி விட்டு அரசு தன் வருவாயைப் பெருக்கிக் கொள்ள வரி விதித்து வந்திருக்கிறது. இந்தத் தந்திரத்தை மறுபடியும் அரசு கையாளாமல் இருந்தாலே பெரிய காரியம்!

எண்ணெயை இறக்குமதி செய்கிறோமே, இதற்கு அந்நியச் செலாவணி பாழாகிறதே என்பதை நினைவில் கொள்ளாமல் நமது அரசின் கொள்கைகள் இருந்து வந்திருக்கின்றன. நிலக்கரி நமது தேசத்தில் ஏராளமாகக் கிடைக்கிறது. இதன் உற்பத்தியை அதிகரிக்கவும் தங்கு தடையின்றி எல்லா இடங்களிலும் கிடைக்கச் செய்யவும் வழி வகுக்காமல் எண்ணெய் இறக்குமதியை அரசு அதிகரித்து வந்துள்ளது. இதற்கேற்ப ரயில் இஞ்சின்கள், பல ரக ஆலைகளில் உள்ள பாய்லர்கள் போன்றவை நிலக்கரியை நிராகரித்து எண்ணெயை எரி பொருளாகக் கொண்டு இயங்குகின்றன. ஆற்றோட்டத்தைப் பயன்படுத்தும் நீர்மின் நிலையங்கள், நிலக்கரியைப் பயன்படுத்தும் அனல் மின் நிலையங்கள் நிறுவி மின் உற்பத்தியை அதிகரிப்பதிலும் போதிய கவனம் செலுத்தப் படவில்லை. எண்ணெய்க்குப் பதில் மின்சாரத்தைப் பல அம்சங்களில் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது உணரப்படவில்லை. இவையெல்லாம் சேர்ந்துதான் நமது எண்ணெய் இறக்குமதிச் செலவை ஆண்டொன்றுக்கு ஆகாயமளாவ உயர்த்தியுள்ளன.

இனியேனும் அரசு சிந்தித்து நல்லதொரு கொள்கை வகுத்துச் செயல்பட்டால்தான் மக்கள் வாட்டி வதைக்கும் துன்பத்திலிருந்து தப்ப முடியும்.



கடல் ராணி
சாண்டில்யன்
கல்கி
ஆகஸ்ட் 5
ஆண்டு மலரில்
ஆரம்பம்

தியாக வல்லபன்

விக்கிரமன்

அத்தியாயம் 18

''நான் உங்கள் அடைக்கலமே''

திருச்சிற்றம்பல முடையார் பெருமான் நம்பி பல்லவரையர் பணியாட்களுக்கு உத்தர விட்டுக் கொண்டிருந்தார். இரண்டு பெரிய பெட்டிகளில் ஆடை, அணிகளை எடுத்து வைக்குமாறு சொன்னார். சில ஓலைச் சுவடி களை எடுத்து வைக்குமாறு மகள் திலக தேவிக்குக் குரல் கொடுத்தார்.

திலகதேவி மாணிக்க வாசகப் பாடல்கள் எழுதப்பட்ட ஓலைச் சுவடியை எடுத்து வந்து தந்தையின் அருகில் நின்றாள்.

''நீயும் உடன் வருகிறாய் மகளே!'' என்றார் நம்பி. எங்கே செல்கிறார், எப்போது புறப்படு வார், எப்போது வருவார் என்று யாரும் அவரைக் கேட்கத் துணிய மாட்டார்கள். வீட்டின் முன் தோட்ட வாயிலில் சிவிகை வந்திருந்தால் பழையாறை அரண்மனைக்குச் செல்கிறார் என்று பொருள். வேப்ப மரத்து நிழலில் வெள்ளைக் குதிரை கனைத்தவாறு நின்றிருந்தால் வெளியூர் செல்வதாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

அன்று அவர் மன்னரைச் சந்தித்து விட்டு வந்த பிறகு சிறிது நேரம் ஒருவருடனும் பேசாமல் அமைதியாக இருந்தார். அம்பல வாணர் திருவுருவத்தின் எதிரே கண்ணைமூடிக் கொண்டு தியானத்தில் அமர்ந்திருந்தார். நெற்றியில் திருநீறெடுத்து அணிந்து கொண்டு பெருமூச்சு விட்ட வண்ணம், பயணம் புறப் படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய லானான்.

''திலகா, நாம் சிதம்பரம் புறப்படுகிறோம்'' என்றார் நம்பி.

திலக தேவிக்கு மகிழ்ச்சி பொங்கிற்று. வெளியூருக்குச் செல்வதென்றால் அவளுக்கு ஏற்படும் குதூகலத்திற்குக் குறைவிருக்காது. ஆற்றங்கரையையும், சோலைப் புட்களையும்,



வீட்டுப் பகவையும் தினந்தினம் பார்ப்பதில் அலுப்பு ஏற்படுவதில்லை என்றாலும், சிவிகையில் அமர்ந்து மெல்ல ஆடி அசைந்தவாறு அது செல்கையில் சாலையின் இருபுறத்து இயற்கை நடனத்தைக் காண்பதில் ஏற்படும் இன்பம் தனிதான்.

''இல்லைச் சிற்றம்பலத்திற்கா அப்பா, இதோ நொடியில் எனக்கு வேண்டியவற்றை எடுத்து வைத்துக் கொள்கிறேன்'' என்றாள் திலகா.

''நாம் எப்போது திரும்புவோம் என்று சொல்ல முடியாது. உடைகளைப் போதுமானதாக எடுத்து வைத்துக் கொள்'' என்றார் நம்பி.

திலகா அவர் முகத்தை நோக்கினாள். சிதம்பரத்தில் நீண்ட நாட்கள் தங்கப்போகிறாரா? — அப்படியென்றால்?

'அப்படியென்றால்?' என்று கேட்க அவளுக்குத் துணிவு இல்லை. எப்போதும் அவரே கேள்விகளைக் கேட்பார் விடைகளையும் அவரே கூறிவிடுவார். குறுக்கே பேசுவது அவருக்குப் பிடிக்காது.

மகள் தன்னை எதிட்டு நோக்குவது புரிந்தது. ''ஆமாம், மகளே! தில்லைச் சிற்றம்பலத்து அம்பலவாணர் சந்நிதியில் நம்மை மறந்து இருப்பது போன்ற பேரின்பம் வேறு என்ன இருக்கிறது? எனக்குச் சோழ நாட்டு வாழ்க்கை அலுத்து விட்டது'' என்றார்.

நம்பி இவ்விதம் சொல்லவே மாட்டார். அவருக்குச் சோழ நாட்டுப் பழையாறையை, கங்காபுரியை, சோழச் சக்கரவர்த்திகளை விட்டுப் பிரியவே மனமிராது. நாள்தோறும் ஒற்றர்களைச் சந்திப்பதும், நால்வகைப் படைத் தலைவருடன் அளவளாவுவதும், அயல் நாட்டிலிருந்து வரும் அரசப் பிரதிநிதிகளைச் சந்தித்து அளவளாவுவதுமாக நேரம் போதாமல் தவிப்பவருக்கு சிதம்பரம் சென்றால் பொழுது எப்படிப் போகும்?

அவர் முடிவு செய்து விட்டார். எப்போதும் திட்டமிட்டுக் கொண்டிருப்பதால் மனத்தில் ஏற்படும் உளைச்சல், தூக்கமின்மை இவற்றிற்கு விடுதலை தரவேண்டும் என்று முடிவு செய்து விட்டார்.

சிவிகையில் மகளுடனேயே அமர்ந்து கொண்டார். சிவிகை சுமப்பவரின் 'ஹோ, ஹோ' ஒலி மெல்லக் கேட்டுக் கொண்டிருந்தது. இலேசாகச் சிவிகை அசைந்தாடிச்சென்று கொண்டிருந்தது.

திலகதேவி ஏதும் பேசவில்லை. இளவரசர் வல்லபனைச் சந்தித்து அவருடைய மன எண்ணத்தைத் தெரிந்து கொள்வதாகச் சொன்னாரே, இளவரசர் ஏதும் மறுமொழி கூறவில்லையா?''

திருமண நினைவு அவளுக்கு இப்போது ஏற்பட்டதுதான்; அவளொத்த தோழிகள் திருமணம் புரிந்து கொண்டு கணவர் வீட்டுக்குச் சென்று விட்டாலும், திலகவதி குடிலைச் சுற்றி வருவதும், பசுவைப் பராமரிப்பதும், தோப்பிலுள்ள பறவைகளுடன் பேசி மகிழ்வதுமாகக் காலத்தைக் கழித்து வந்தாள். அவளுடைய தந்தைதான் இளவரசருக்கு மணம் புரிவிக்கலாம் என்ற நினைவை ஏற்படுத்தினார். இப்போது அவர் அதைப் பற்றிய கருத்து ஏதும் தெரிவிக்கவில்லை. பழையாறையை விட்டு, சிதம்பரத்திற்குப் புறப்படுகிறார்.

அவராகவே பேச்சைத் தொடங்கினார். ''திலகா, சிதம்பரத்தில் பொழுது போகாது என்று நீ கவலைப்பட வேண்டாம்'' என்றார்.

திலகதேவி மெல்ல நகைத்தாள். ''இல்லை அம்பலவாணர் சந்நிதியில் நான் அமர்ந்து நேரம் போவதே தெரியாமல் குஞ்சிதபாதத்தைக் கண்டு குதூகலித்துக் கொண்டிருப்பேன். பொன் விமானத்தைப் பார்த்தவாறு நிற்பேன். சிவ



பயண மொழிகள்

பல நாடுகளுக்கும் பிரயாணம் செய்வது மிகவும் நல்லது. திறந்த மனத்தோடு, நேய உணர்வோடு நாம் பிரயாணம் செய்ய வேண்டும். நம் நாட்டின் தூதராகப் பிற நாடுகளில் நாம் இருக்க வேண்டும். அதோடு பிற நாடுகளின் தூதராக நம் நாட்டிற்குத் திரும்ப வேண்டும்.

—நேரு.

சன்னலின் வழியாகவே நீங்கள் எல்லா ஒளியையும் பார்த்து விட முடியாது. கதவைத் திறந்து வெளியே வாருங்கள்; இன்னும் பலவற்றை நீங்கள் காண்பீர்கள்.

—ருஷ்யப் பழமொழி.

உள்ளம் உடைந்து விடாமல் விழிப்போடு இருங்கள்; உங்கள் பார்வை உலகம் தழுவியதாக இருக்கட்டும். —மா சே துங்.

தொகுப்பு: டாக்டர் இரா. மோகன்.

கங்கைக் குளத்தில் கால்களை நனைய விட்டு, சின்னஞ்சிறு மீன்களின் ஸ்பரிசத்தில் மெய்ம் மறந்து நிற்பேன்'' என்று இலகதேவி உற்சாகத்துடன் கூறினாள்.

நம்பி தலையை அசைத்தார். 'நான் என்ன செய்வதாக நினைத்திருந்தேனோ அதைத் தானே, என் மகளும் செய்யப் போவதாகக் கூறுகிறாள்' — என்று அவர் நினைக்கும்போது அவருக்குப் புதிய உற்சாகமே ஏற்பட்டது.

''இலகா, இதைவிட வேறு இன்பம் உலகத்தில் இருப்பதாக நினைக்கிறாயா? போர்க் களங்களும், நாடு பிடித்தலும் எதிரிகளை முறியடிப்பதும், அதைப் பற்றிய சிந்தனையை எப்போதும் கொண்டிருப்பதுமாக எனக்கு அலுப்பே ஏற்பட்டு விட்டது. சிற்றம்பலத்தில் பேரின்பத்தைக் கண்டு களிக்கப் போகிறேன்'' என்றார் நம்பி.

தந்தை எதையோ மனத்தில் வைத்துக் கொண்டு பேசுகிறார் என்று இலகதேவிக்குப் புரிந்து விட்டது. ஒரு வேளை சோழ நாட்டு முதல் அமைச்சர் பதவியையும், மாதண்ட நாயகர் பதவியையும் உதறி விட்டாலும் வியப்பில்லை.

''அப்பா, பழையாறையிலிருந்துஒவ்வொரு சிறு யோசனைக்கும் சிதம்பரத்திற்கு வருவதென்றால் நேரம் வீணாகாதா?'' என்று இலகதேவி கேட்டாள்.

நம்பி மெல்லத் தமக்குத் தாமே நகைத்துக் கொண்டார்.

பழையாறையிலிருந்து. இனி என்னை எதற்கு யோசனை கேட்க வேண்டும். இவ்வளவு காலமாக ஆலோசனை கூறித் தொண்டாற்றியது போதும். என்னைவிட அறிவு மிக்கவர்களுக்கு வாய்ப்பளிப்போமே — நம்பி ஒருவரால்தான் சோழ நாடு பிழைத்திருக்கிறதா? — இதை நினைக்கும்போது அவருக்குச் சிரிப்பு வந்தது.

இல்லை — இல்லை; அவருடைய திடீர் முடிவுக்கு இது காரணமில்லை. அவரது உள்ளத்தின் அடித்தளத்தில் வேறு ஏதோ ஒன்று இப்போது முனைத்தெழுந்து உறுத்துகிறது.

''தங்களுடைய திடீர்ப் பயணம் எனக்கு வியப்பாய் இருக்கிறது. இளவரசர்ப் பட்டமேற்கும் வைபவத்திற்கு மீண்டும் நீங்கள் பழையாறை செல்வீர்களா?'' என்று இலகதேவி கேட்டாள்.

ஆமாம்; நம்பி இல்லாமல் பட்டமளிப்பு வைபவம் நடக்குமா?

''என்ன கேட்டாய்? பட்டமேற்கும் வைபவமா? என்னை அழைத்தால் போவேன். எனக்குச் சோழ நாட்டிடம் என்ன கோபம்? இளவரசரிடம் என்ன கோபம்? வல்லபன் நல்ல குணமுள்ளவன். சோழ நாடு செய்த பாக்கியம் அவனை இளவரசனாக அடைகிறது'' என்று கூறி நிறுத்திய அவர், மீண்டும் தொடர்ந்து, ''வல்லபனைப் பார்த்தவுடனேயே எனக்குப் பிடித்து விட்டது. எனக்கு வேண்டியவர் வேண்டாதவர் என்ற பேரமே இதுவரை இல்லாதிருந்தது. ஆனால், வல்லபனைப் பார்த்தவுடன் ஒரு சிறு சபலம். பெண்களுக்கு ஏற்பட வேண்டிய சபலம் எனக்கு ஏற்படலாமா? வல்லபனை என் மருமகனாக ஏற்க ஆசைப்பட்டேன். உன்னாற சோழ அரச குலத்துடன் நெருங்கிய தொடர்பு கொள்ள வேண்டும் என்ற ஆசையும் கொண்டேன். அப்படி நான் ஆசைப்பட்டது தவறு என்று இப்போதுதான் புரிகிறது...'' என்று கூறி நிறுத்தினார். பிறகு சிறிது கோபத்துடன் ''மலையமான் பரம்பரைதான் சோழ நாட்டுடன் மணத் தொடர்பு கொள்ள வேண்டுமா? சோழ நாட்டின் உயர்வுக்கு உண்மையாக உழைக்க இந்த நம்பிக்கு அந்தக் கௌரவம் கொடுக்கக் கூடாதா? ராஜராஜருக்கு என் இதயம் நன்றாகப் புரியும். இருந்தாலும் அவர் தலையசைத்து விட்டார். இலகா, உனக்கு வல்லபன் இல்லை. நீ சோழ நாட்டு இளவரசி ஆகப் போவதில்லை. இந்த நம்பிக்கு நாட்டைக் காப்பாற்றும் ஒரே கடமைதான் உண்டு. நம்பியின் பெயரன் அரியணையிலமரக் கூடாது. அப்படித்தான் அரசர் நினைத்து விட்டார். மன்னரின் உணர்ச்சியைப் புரிந்து கொண்ட பிறகு பழையாறையில் ஏன் இருக்க வேண்டும்? சோழ நாட்டு முதல் மந்திரியாக நானிருக்கலாம்; மாதண்ட நாயகனாக இருக்கலாம். எனக்கும் மனிதனுக்குரிய இயற்கையான வக்கிர குணங்கள் ஏற்படலாம்... சோழ நாட்டைத் தம் வசப்படுத்த முயற்சிகளில் இறங்கலாம். வேண்டாம், வேண்டாம். கொடிய எண்ணத்திற்கு இடமேற்பட வழியின்றி, மன மாற்றம் ஏற்பட — வாய்ப்பின்றிப் பழையாறையினின்று புறப்பட்டுவிடுவோம்...''

நம்பி அத்தகைய முடிவுடன்தான், இல்லை நகரை நோக்கிப் பயணமானார். இனி அவர் பழையாறைக்குத் திரும்பி வருவாரா? மன்னருக்கு இந்தச் செய்தி தெரியுமா?

சோழ நாட்டில் பரபரப்பான நிகழ்ச்சிகள் நடப்பதற்கு இது ஓர் அறிகுறியா?

பெருமான் நம்பி, சிதம்பரத்தை நோக்கித் தம் மகளுடன் சென்று கொண்டிருக்கும் போது பழையாறைக்கு அடுத்த

● எம். ஜி. ஆரின் ரத்தத்தின் ரத்தமான உடன் பிறப்புக்களில் நானும் ஒருவன். 1.7.79 இதழ் கல்கியில் தங்களது கார்ட்டூனிஸ்ட் வரைந்துள்ள ரத்தத்தின் ரத்தம் போன்று அவ்வளவு கொடூரமாகவா நான் இருக்கிறேன்?

போடிநாயக்கனூர் எஸ். சையது முகமது

● கார்ட்டூனில் எம். ஜி. ஆருக்கு அருகில் நிற்கும் 'அ. தி. மு. க. ரத்தத்தின் ரத்தத்தை 'notorious rowdy ஆக வரைந்திருப்பது நல்ல நயமான Satire'.

திருச்சி—8 எஸ். பி. முருகப்பன்





வட்ட மேஜை

என்னைப் பார்த்தால் கொடூரமாகவா இருக்கிறது?

● அ. தி. மு. க. வின் நியாயமான நாகைத் தோல்விக்குத் தாங்கள் அளிக்கும் சப்பைக் கட்டைப் படித்து விழுந்து விழுந்து சிரித்தேன்.

விருதுநகர் க. முருகேசன்

● தமிழக அரசுக்கு மக்களின் ஆதரவு உண்டு என்றும், எம். ஜி. ஆருக்குப் பெருந்தன்மை, மக்கள் செல்வாக்கு என்றும் உண்டு என்று தஞ்சைத் தேர்தல் நிரூபித்து உள்ளது என்றும் ஒவ்வொரு நடுநிலையாளரும் நினைத்த கருத்தைத் தலையங்கத்தின் மூலம் விளக்கிய கல்கியே! உன் நடுநிலைமைத் தன்மையும், பெருந்தன்மையும் எந்தப் பத்திரிகைக்கும் வராது.

கடலூர்—1 எஸ். பி. செல்வநாதன்

● அ. தி. மு. க. விடம் மக்கள் வைத்துள்ள நம்பிக்கை மாறவில்லை என்று கூறியுள்ளீர்கள். மிகவும் தவறாகும். ஏனெனில் சென்ற தேர்தலில் அ. தி. மு. க. — இ. காங். பெற்ற ஓட்டுக்கள் 59 சதவீதம். ஆனால் அவர்கள் இந்தத் தடவை பெற்ற ஓட்டுகள் 56 சதவீதமாகும்.

திருச்சி—8 கே. சந்திரசேகர்

● வாஸந்தியின் ''யுகங்கள் மாறும் போது' தொடர்கதை அபரிமிதமான எண்ணங்களை மெல்லத் தூவிச் செல்கிறது: வரிக்கு வரி மீண்டும் படிக்க ஆவலைத் தூண்டுகிறது.

மேலக்கிருஷ்ணன் புதூர் ஆர். கே. லிங்கேசன்

ராஜ ராஜேச்சரத்து மாளிகையில், ஒரு பகுதியில் வல்லபனின் தாய் செல்வி தங்கியிருந்த இடத்தில் வாயிற் கதவை ஓர் இளம் பெண் வந்து தட்டினாள்.

வல்லபனின் வருகையை எதிர்பார்த்திருந்த செல்வி, சந்திரப்பிரபாவைக் கண்டவுடன் யார் என்று புரிந்து கொள்ளாமல் திகைத்து நின்றாள்.

சந்திரப் பிரபா குனிந்து மண்டியிட்டு வணங்கி தான் கொண்டுவந்த கனிவகைகளை எடுத்துவைத்து மிகமரியாதையுடன் நின்றாள்.

''குழந்தாய், யாரம்மா நீ. எனக்குப் பார்வை இப்போது சிறிதுகுறைந்துவருகிறது. அடையாளம் தெரியவில்லை. ஒருவேளை, பெருமான் நம்பியின் மகளா? அல்லது மலையமானின் புதல்வியோ?'' என்று கேட்டாள். அக்குரலில் அன்பு இருந்தது. வல்லபனைப் பெற்றெடுத்த பாக்கியசாலியின் குண நலன்கள் மிக உன்னதமாக இருப்பதில் வியப்பென்ன?

வாயிற்படியருகே நின்றவாறு பேச விரும்பாமல் சந்திரப்பிரபாவை உள்ளே அழைத்து மஞ்சத்தில் அமரச் சொன்னாள்.

சந்திரப்பிரபா உட்காரவில்லை. நின்று கொண்டே இருந்தாள்.

''பெண்ணே, நீ யார் என்று சொல்லவில்லையே...'' என்று செல்வி அவளை உற்றுப் பார்த்தவாறு கேட்டாள்.

''அம்மா...'' என்று சந்திரப்பிரபா அழைத்தாள். அந்தக் குரலின் இனிமை செல்வியை மெய் சிலிர்க்க வைத்தது.

''அம்மா, நீங்கள் நினைப்பது போல் சோழ நாட்டு மாதண்ட நாயகரின் மகள் அல்ல. மலையமானின் புதல்வியும் அல்ல. நான் ஒரு சாதாரணக் குடிமகனின் திருக்குமாரி. வேங்கி நாட்டினின்று வருகிறேன். தங்களையும் தங்கள் புதல்வரையும் தேடி, என்னை ஒப்படைத்துக் கொள்ள வந்தேன்'' என்றாள்.

செல்விக்குப் புரிந்து விட்டது. வேங்கியில் தன் மகனைக் காதல் வலையில் சிக்கவைத்த பெண்ணா என்று நினைக்கும்போது செல்விக்கு ஒருகணம் சீற்றம் பொங்கியது. (தொடரும்)

ஆபீஸர் தான் என்றாலும்...

இப்போது பெங்களூரில் நல்ல மழை. குளிர் வேறு. உன் காரியங்களை முடித்து விட்டு வர இன்னும் அரை மணி நேரம் ஆகும்.

லுங்கியை இழுத்துக் கட்டிக் கொண்டு கட்டிலில் சாய்ந்தேன். வழக்கம் போல் அன்றைய ஆபீஸ் விவகாரங்களைப் பவானியிடம் சொல்ல வேண்டும்!

இப்பொழுது எங்கள் வங்கியும் ஸ்டிரைக் செய்கிறது! ஊழியர்கள் 'விதிப்படி வேலை' செய்கிறார்கள். நானும் ஆபீஸர்தான்: என்ன செய்ய?

சமையலறைக் கதவு மூடப்படும் ஒலி. சற்றைக்கெல்லாம் தொப்பென்று கட்டிலில் வந்து உட்கார்ந்தாள் பவானி.

மெதுவாக அவள் வலது கைவிரல்களைப் பிடித்துத் தடவிக் கொடுத்து, சொடக்கு எடுத்தேன்.

''... ஸ்... ஸ்... வலிக்கிறதே...'' என்றபடி என் மார்பில் அவள் சாய..

காலிங் பெல் ஒலித்தது. எழுந்தேன். திறந்தேன். எதிர் வீட்டுப் பையன்.

''...ஸார்... உங்க பிரெண்ட் போன் பண்ணினார். மதராஸிலிருந்து ட்ரங்க்காலாம். வரச் சொன்னார்.''

உள்ளே வந்தேன். ''பவானி, அனேகமா என் பாட்டிதான்... இருக்கும்... போய்ச் சேதி கேட்டுண்டு வரேன், கைப்பெட்டியைத் தயார் பண்ணு...''

டெலிபோனில் பேசி விட்டு வீட்டுக்குத் திரும்பினேன்.

''... என் ஊகம் சரிதான். பாட்டிதான்... ம்... ராத்திரி எட்டு மணிக்கு. கடைசி மூச்சு.. சரி... நான் பஸ்ஸிலே இப்பவே போயிடறேன். நாளைக்கு நீ பிருந்தாவன்லே வா...''

அவசரம் அவசரமாகக் கைப்பெட்டியை எடுத்துக் கொண்டேன். நெருக்கடி நிலைக்கு உதவ, வீட்டில் கொஞ்சம் பணம் வைத்திருந்தேன். எடுத்துக் கொண்டு கிளம்பினேன்.

தெருவில் நடக்கும் பொழுது குளிர் சற்று அதிகமாக இருந்தது. சில் காற்று கண் இமைகளை அழுத்திற்று.

ஆட்டோ ஒன்று பிடித்து, சிடி மார்க்கெட் வரும் பொழுதே தெருவில் ஸ்கூட்டர் லிஃப்டுக்காகக் கட்டைவிரலை உயர்த்திச் சைகையால் பேசிக் கொண்டிருந்தேன்.

ஒருவர் நிறுத்தினார். அவரிடம் விஷயத்தைச் சொன்னேன். பின் சீட்டில் ஏறிக் கொள்ளச் சொன்னார்.

போகும் பொழுதுதான் எனக்கு உறைத்தது அவர் யார் என்று! அன்று காலை வேளையில் பாங்கில் என்னோடு சண்டை போட்டவர் அவர்!

''...என்னய்யா பெரிய ஆபீஸர்கள் இப்படி விதிப்படி நேர வேலை — ஸ்ட்ரைக், அது இதுன்னு செய்யறீங்கன்னு, பப்ளிக் எப்படிப் பணத்தை டிபாசிட் செய்வான்? அவசரத்துக்கு அவன் பணம் கிடைக்கா விட்டால் அப்புறம் என்ன டிபாசிட், பாங்க்?'' இப்படி முழங்கினார் அவர்! அவர் ஸ்கூட்டரில்தான் பயணம்!

பழி வாங்கி விடுவாரோ...

பஸ் ஸ்டாண்டில் நிறுத்தினார். அவருக்கு நன்றி சொன்னேன். காலையில் பாங்கில் நடந்ததற்கு மன்னிப்பும் கேட்டேன்.

''... ஓ. கே. ஸார். ... நான் காலையிலே திட்டினது பொதுவாகத்தான்... உங்களையா குறிப்பிட்டுப் பேசினேன்?... ஏதோ எனக்கு அப்போ இருந்த வேகம்... மறந்துடுங்க... அதோ பஸ்... மழை காரணமா லேட்டா கிளம்பறான் போல இருக்கு... இப்பவே பத்து அம்பது ஆயிடுத்தே... ''

நான் பரபரப்புடன் பஸ்ஸை நோக்கி ஓடினேன். பஸ் நிறைந்து விட்டது. காலி இல்லை. டிரைவர் இன்னும் ஏறவில்லை.

பரிதாபமாகப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

''என்ன மோகன் ஸார்... யாராவது மதராஸ் போறாங்களா...? வழி அனுப்ப வந்தீங்களா...?''

குரல் கேட்டு நிமிர்ந்தேன். அல்ஸூரில், ஏரிக்குப் பக்கத்தில் ஒரு வீடு அவருடையது. பிஸினஸ்மேன், எங்கள் வங்கியின் கஸ்டமர்.



''.... வந்து... மிஸ்டர் அர்த்தநாரி...'' என்று கூப்பிட்டு விட்டு, அவரை அருகே அழைத்து விஷயத்தைச் சொன்னேன். அவசரமாகப் போக வேண்டிய நிர்ப்பந்தத்தைச் சொன்னேன். அன்று மதியம் நடந்தது நினைவுக்கு வந்தது.

''...மோகன் ஸார்...இப்படி பாங்கிலேயே நான் பழியா உட்கார்ந்துண்டு காஷ் வாங்க இவ்வளவு நேரம் ஆயிற்று என்றால், என் வியாபாரம் என்ன ஆகிறது?... ஒண்ணரை மணி நேரம் போச்சு!... இன்னும் செக் கௌண்டருக்கு வரல்லே...''

''...தெரியும் ஸார்... என்ன செய்யறது. மெதுவா வேலே செய்யற போராட்டம்... பஸ் டிரைவர்ஸ், கண்டக்டர்ஸ் வேலே நிறுத்தம் செய்யலேயா?... டாக்டர்ஸ் செய்யலேயா...'' இழுத்தபடி பேசினேன்.

''வெரிகுட் ஆபீஸர்... ரொம்ப அழகாயிருக்கு. ஒரு தவறைச்செய்துவிட்டு, அதைச் சரி செய்ய இன்னொரு தவறு செய்யலாமா?.. இதெல்லாம் யோசித்துத்தான் என் தாத்தா, பாட்டி காலத்துலே புளிப் பானையிலே பணத்தைப் போட்டு வைச்சாங்க... வட்டி கிடைக்கலேங்கிற ஒரு குறைதானே தவிர, பணத்தை எப்பவும் எடுக்கலாமே!'' அவர் எரிந்துவிழுந்தார். பேப்பர் வெயிட்டை உருட்டியபடியே அவர் பேசுவதைக் கேட்டேன். பிறகு முடிவில் அவர் கண்களில் நீர் தளும்பச் சென்ற காட்சி தான் கண்களில் நிற்கிறது எனக்கு.

அந்த அர்த்தநாரியுடன்... இப்போ...

''... மோகன் ஸார்... என் டிக்கெட்லே நீங்க மதராஸ் போங்க. எனக்கு இப்போ அவசரமில்லே. நீங்க போய்ப் பாட்டி கரியத்தை நடத்துங்க. ஆசையா வளர்த்தவங்களுக்கு நம்மாலே கிடைக்கிற சந்தோஷம் இதுதான்...'' அவர் டிக்கெட்டை வாங்கிக் கொண்டு நான் பஸ்ஸுக்குள் சென்றேன். ஜன்னல் ஓரத்தில் உட்கார்ந்திருந்த என்னிடம், வெளியேயிருந்து அவர் பேசினார்.

''மோகன் ஸார்... இன்று மத்தியானம் உங்கள் பாங்கில் சண்டை போட்டாலும் கடைசியில், உங்கள் சொந்தப் பணத்தைக் கொடுத்து எனக்கு ரொம்ப உதவி செய்தீங்க. உங்க மனிதாபிமானம் தான், என்னை நெகிழச் செய்து விட்டது. பிரதியுபகாரமா இன்றைக்கே உங்களுக்கு உதவி செய்ய, ஆண்டவன் என்னை அனுப்பித்திருக்கார் போல் இருக்கு.''

என் கண்கள் கலங்கின.



பாட்டிமார்களும் பேத்திமார்களும்

ஜெயகாந்தன்

3. சுயவெறுப்பு!

''உங்களுக்கென்ன சாமி, வித்தா விசனமா? எல்லாச் சாமியாருங்களுக்கும் அன்ன விசாரமாவது உண்டு; உங்களுக்கு ஒரு பிடி அரிசிக்கும் ஒரு கை வெங்காயத்துக்கும் என்ன விசாரம் வந்துடப் போவுது... அது தான் பாட்டும் ராகமுமாயிருக்குது'' என்று சொல்லிக் கொண்டே வந்து தானும் வாசற்படியின் இன்னொரு பக்கம் உட்கார்ந்து கொண்டாள் காந்திமதி.

அவளுக்கு யாரிடமாவது இந்தக் குடும்பத்துக்கு ஏற்பட்டிருக்கும் கதியைப் பற்றிப் புலம்பித் தீர்க்க வேண்டும் போலிருந்தது. மற்றவர்களிடம் புலம்பினால் தானே இந்தக் குடும்பத்தைத் தூற்றிக் கொண்டு திரிவது போலிருக்கும். விளக்குச் சாமியாரிடம்தான் எதையும் சொல்லி ஆற்றிக் கொள்ள முடியும்.

''சாமி... மகுடேசன் குடும்பத்துக்கு வர வேண்டிய கதியா, இது? வீட்டிலே ஒரு மணி அரிசி இல்லே; அடுப்புப் பத்த வெச்சி ரெண்டு நாளாகுது. அவ்வையாரம்மா தன் பேத்தியைக் கூட்டிக் கொண்டு போயி ஊட்டி விட்டு அனுப்பறா. பாவம் சிங்காரம் தான் கோர்ட்டுக்கும் கச்சேரிக்கும் அலையறானே! அவனைப் பாத்தீங்களா, சாமி? எப்படி இருந்த பையன் துரும்பா இளைச்சுப் போயிட்டான்... நான் சின்னம்மா வீட்டிலே போயி ரெண்டு நாளா கௌரவமா சாப்பிட்டுட்டு இருக்கேன்... இப்படியே எவ்வளவு காலத்துக்குத்தான் இருக்க முடியும்? எங்கப்பா உயில்லே எழுதியுள்ள பிரகாரம் எனக்குத் தர வேண்டியதை நானும் கேட்டுட வேண்டியதுதானே?... சொல்லுங்க சாமி என் கதி என்ன ஆவறது?'' என்று இதுநாள் வரை அவள் எண்ணியும் பார்த்திராத தனது கைம்மை நிலையையும் எதிர்காலத்தைப் பற்றியும் நினைத்துக் காந்திமதி கண்கள் கலங்கினாள். அவளுக்கு அழுகை அவ்வளவு சாதாரணமாக வந்து விடாது...

''எனக்கு என்ன சாமி... உன்னை மாதிரி நானும் ஒரு சந்நியாசிதானே! இந்த வீட்டிலே இத்தனை வருஷம் உழைச்சிருக்கேனே... இந்த வைத்தியைத் தூக்கி வளர்த்திருக்கேனே... அந்த மாதிரி யாருக்கும் இந்த உழைப்பைத் தந்து இந்த உதவியைச் செய்தா என் காலம் ஓடிடும்.... ஆனா இந்த வீட்டுக்கு இப்படியொரு அழிவு காலம் வந்துட்டுதேன்னு நெனைச்சா மனசு ஆறமாட்டேங்குது!'' என்று காந்திமதி சொல்லிக் கொண்டிருக்கும் போது உள்ளேயிருந்து சிங்காரம் வந்தான்.

''காந்தியக்கா உன் கிட்ட ஏதாவது சில்லறைக் காசு இருக்கா?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டான். காந்திமதிக்கு ஒரு விநாடி பொறி கலங்கிப் போயிற்று. சிங்காரம் யாரிடமும் கைநீட்டிக் காசு வாங்கி அவள் கண்டதில்லை. வைத்தியாவது அவளிடம் காசு பணம் கேட்பான்; சிங்காரம் கேட்டதே இல்லை!... அள்ளிக் கொடுப்பான் அதைத் தான் எல்லாரும் பார்த்திருக்கிறார்கள்.

''எதுக்காம்! சில்லறையில்லேன்னு தம்பி கிட்ட எல்லாம் நோட்டு நோட்டா இருக்குதோ?'' என்று பரிகாசமாய்க் கேட்டுக் கொண்டே எழுந்தாள் காந்திமதி. கேட்காதவன் கேட்டிருக்கிறான்! தன்னிடம் ஏதாவது சிறுசேமிப்புக்கள் இருக்கும் என்று இவனுக்குத் தெரிந்திருக்கிறது. சிங்காரத்துக்கு ஏற்பட்டிருக்கும் பணமுடைகளுக்கு உதவி செய்கிற மாதிரி தன்னிடம் ஏதும் பெரிய சேமிப்புக்கள் இல்லையே என்ற ஏக்கத்துடன்,

''சில்லறைன்னு எவ்வளவு வேணும்?'' என்று இடுப்பிலிருந்த சுருக்குப் பையை எடுத்துப் பிரித்தவாறே கேட்டாள். சிங்காரம், அவள் சற்றும் எதிர்பாராத விதமாக அந்தச் சுருக்குப் பையையே காந்திமதியிடமிருந்து தட்டிப் பறித்துக் கொண்டு சின்னப் பையன் மாதிரி ஓடினான்...

''அதிலே என்ன இருக்கும் — கொஞ்சம் சில்லறைக் காசு... வெத்திலே, பாக்கு.... வேற என்ன இருக்கப் போவுது?... சுருக்குப்



பையை மட்டும் குடுத்துடு தம்பி...'' என்று அவனது ஏமாற்றத்தைக் கண்டு சிரித்தாள் காந்திமதி.

சிங்காரம் கையிலிருந்த காசுகளை எண்ணிப் பார்த்தான். நான்கு வெள்ளி ரூபாய்களும் கொஞ்சம் சில்லறையும் இருந்தன. அதி லிருந்து ஒரு வெள்ளி நாணயத்தை மட்டும் எடுத்துக் கொண்டு மீதியைப் பையிலேயே போட்டுக் காந்திமதியின் மடியில் அதை எறிந்து விட்டு வைத்தியைத் தேடிப் போனான் சிங்காரம்.

''எதுக்கு, பீடி வாங்கி வரத்தான் இருக் கும்... இந்த மாதிரி எல்லாத்தையும் ஒழிச் சிட்டு நிற்கிறானே... வழக்கிலேயிருந்து மீண்டு இவன் முன்னே மாதிரி ஆவானா, இப்பிடியே தான் ஆயிடுவானா?'' என்று கன்னத்தில் கையூன்றி ஏக்கத்துடன் யோசித்தாள்.

வைத்தி சின்னம்மா வீட்டுத் திண்ணை யில் உட்கார்ந்திருந்தான்: முன் போல் இப் போது வேலைக்காரர்கள் யாருமில்லாததால் வைத்தியைத்தான் சகல எடுபிடி வேலைகளுக் கும் சிங்காரம் எதிர்பார்த்தான். அதற்காகவே காத்துக் கிடப்பவன் போல் வைத்தியும் அன் றைத்தையில் கூப்பிட்ட குரலுக்கு ஓடிவந்து பணிவுடன் நின்றான். இப்போது அவனைக் கடைக்கு அனுப்பி பீடி வாங்கி வரச் சொல்லி விட்டு, சின்னம்மாவையும் பார்த்து வரலாம் என்று வந்த சிங்காரத்துக்கு — அந்த வீட்டின் முன் புறக் கூடத்தில் இருந்த மருதேசன் பிள்ளையின் அந்தப் பெரிய ஓவியம் கண்களில் பட்டது. அதன் விலையுயர்ந்த பொன்னு லானது போன்ற பிரேமும், அதற்காகவே ஓர் ஓவியனுக்குக் கங்கணம் செய்து போட்ட தாய்ச் சொன்ன கதைகளும் சிங்காரத்துக்கு நினைவில் வந்திருக்க வேண்டும். அந்த வீட்டின் இன்னொரு அறையில் வேறு பல ஓவியங்களும் முடிவு பெறாத அம்பிகையின் சித்திரம் ஒன்றும் இருப்பதையும் அவன் மறந்திருக்க முடியாது.

சிங்காரம் கூடத்தில் வந்து தகப்பனாரின் படத்தின் எதிரே மௌனமாக நின்று கொண் டிருப்பதைப் பார்த்தவாறே உள்ளேயிருந்து வந்த கோதை அவன் தோள் மீது ஆதர வாகக் கைவைத்தாள்.

''சிங்காரம்... உனக்கு என்னிடத்தில் என்ன கோவம்? நீ ஏன் இப்ப இங்கே வர்ரதே இல்லே?''

''என் கால நிலைமை சரியில்லே சின்னம்மா. எனக்கு யார் மேலேயும் கோவம் இல்லே...



நான் இருக்கும் சீரோட இருந்தப்ப இங்கே இருந்தேன்... இப்ப நான் உன்னே அண்டி வாழற மாதிரி இருக்கும்... அது என் மனசுக்குப் பிடிக்கலே — அதனலேதான் நான் வரலேன்னு சொல்லலே; எனக்குத்தான் கோர்ட்டு, வழக்கு, வாயிதான்னு நாளெல்லாம் சரியா இருக்குதே!..'' என்று சொல்லிக் கொண்டே உட்காருவதற்குக் கூடத் தயங்கியவனுகத் திரும்பினன் சிங்காரம்.

''அப்படியெல்லாம் சொல்லாதே சிங்காரம். யாரை அண்டி யார் இருக்கோம்னு கடவுளுக்குத் தெரியும். நமக்குள்ளே அப்படி என்ன பேதம்? எல்லாம் உங்கப்பா, தாத்தா சம்பாதிச்சு வச்சதுதானே?'' என்று அவள் பேசுகிற வாய் வேதாந்தத்தைக் கேட்டுச் சிங்காரம் சிரித்தான்.

''அப்பிடின்னு எனக்கு ஒரு பத்தாயிரம் ரூபாய் கடன் குடுத்து உதவ முடியுமா?'' என்று கூரை முகப்பைப் பார்த்துக் கொண்டு கேட்டான் சிங்காரம். ''கடனுத்தான் வேணும். பத்திரம் எழுதித் தரேன்... அடமானம் வைக்க இப்ப என் கையிலே ஒண்ணுமில்லே....''

''சிங்காரம், என்னே மன்னிச்சுக்கப்பா... நான் யாருக்கும் கடன் தந்ததுமில்லே; வாங்கினதுமில்லே. என் கிட்ட நீ கேக்கற பணம் இல்லேன்னு நான் பொய் சொல்ல முடியாது. ஆனல் அதை எடுத்து அழிக்கறதுக்கு எனக்கு உரிமை இல்லே. உன் சொத்து உன் பணம்னு நீ நினைச்சதையெல்லாம் நீ அடமானம் வைக்கலாம்; வித்து அழிக்கலாம்; அதை நான் தடுக்க முடியாது. ஆனல் உன் வழியிலே நானும் வந்தால் நல்லாயிருக்காது. உன் குடும்பச் செலவு சாப்பாட்டுச் செலவுக்கெல்லாம் நான் பொறுப்பேத்துக்கணும்னு நினைக்கிறேன். நீயும் உன் பெண்சாதியும் இங்கேயே வந்துடுங்க... வைத்தியும் காந்திமதியும் இடப்பவே இங்கேதான் இருக்காங்க... இது ஒண்ணும் நான் காட்ற தாராளம் தயாளம்னு நெனைச்சுக்காதே! அந்த அர்த்தத்திலே நான் சொன்னேன். இதெல்லாம் உங்கப்பா நமக்குச் சேர்த்து வெச்ச சொத்துன்னு...'' என்று விளக்கி அவனே அன்புடன் இங்கேயே வந்து விடும்படி அழைத்தாள் கோதை.

தான் கேட்ட பணத்தைத் தருவதற்கில்லை என்று கோதை மறுத்த ஒரு விஷயத்துக்கு மேல், கோதையின் வேண்டுகோள் எதுவும் சிங்காரத்தின் செவியில் ஏறவே இல்லை. அவனுக்கு அசாத்தியக் கோபம் வந்தது. அந்தக் கோபம் குறிப்பாகக் கோதையின் மீதோ இன்னொருவரின் மீதோ ஏற்பட்டதல்ல; தனது பிறவியின் மீதே — இந்தச் சொத்துக்களைத் தவிர வேறு சொந்த முயற்சிகளோ திறமைகளோ வாய்க்கப் பெறாத இந்தக் குடும்பத்தில் பிறந்த — தன் மீதே ஏற்பட்ட சுயவெறுப்பாய்த் தவித்தது அவனை.

வைத்தி, அண்ணத்தைக்கு வாங்கி வந்த பீடிக் கட்டைக் கொண்டு வந்து மீதி சில்லறையுடன் பணிவாக நீட்டினன். சிங்காரம் பீடிக் கட்டை மட்டும் வாங்கிக் கொண்டு சில்லறையை அவனிடமே விட்டுவிட்டு,

''வைத்தி! இந்தப் படம் என்னுடைது... இதை எடுத்துக்கிட்டுப் பெரிய வீட்டுக்கு வா...'' என்று அதிகாரமாய் உத்தரவு போட்டு விட்டு, விருட்டென்று அங்கிருந்து வெளியேறி அவசரத்தோடு தன் வீட்டுக்கு ஓடினன்.

''எடுத்துக்கிட்டுப் போயேன் — அவன் ரொம்பக் கோவமா இருக்கான்...'' என்று தனது உத்தரவுக்காகக் காத்திருந்த வைத்தியிடம்கூறி, அந்தப் பெரிய சித்திரத்தைச் சுவரிலிருந்து எடுத்துக் கரையில் நிறுத்தித் தூசு தட்டினள் கோதை.

படத்திலிருந்த மருடேசன் பிள்ளை முகத்தைப் பார்த்து ''இன்னும் எவ்வளவு காலம் நான் இந்த நரகத்தில் இருக்க வேண்டுமோ?'' என்று மனத்துள் விம்மினள் கோதை.

(தொடரும்)

'கப்ஸா' கைடல்ல!

சுற்றுலாத் துறை, 'கைடு'களைத் தேர்ந்தெடுப்பதில் மிகுந்த கவனம் செலுத்துகிறது. ஒவ்வொரு கைடும் ஒரு பட்டதாரியாக இருப்பார். அவருக்குச் சரித்திரம், நுண்கலை, பூகோளம், சோஷியல் சயன்ஸ், தொல் பொருள் துறை, தத்துவம் ஆகியவற்றில் பயிற்சி இருத்தல் தேவை. ஒவ்வொரு கைடும் அழகான தோற்றமும் பேச்சுத் திறமையும் பெற்றிருத்தல் வேண்டும். ஆங்கிலம் தவிர அயல் நாட்டு மொழி ஒன்றிரண்டு தெரிந்திருந்தால் நல்லது.



திரு வரதராஜன்

பதினைந்து வருஷங்கள் கைடாக அனுபவம் பெற்ற திரு வரதராஜன் ஆர். கே. சுவாமி விளம்பர நிறுவனத்தில் ஓர் அதிகாரியாகவும் பணியாற்றுகிறார். இவரைத் தேர்ந்தெடுக்கு முன் பரீட்சையாளர்கள் கேட்ட கேள்விகளில் ஒன்று: ''ஓர் அயல்நாட்டுக் காரர் நம் ஏழைமை குறித்துக் கேட்டால் நீங்கள் என்ன பதிலளிப்பீர்கள்?'' இவர் கொடுத்த பதில்: ''இந்தியா முந்நூறு வருஷம் அடிமைப் பட்டுச் சுதந்திரம் இழந்து கிடந்தது! ஒரு கல்லைத் தரையிலிருந்து தூக்க வேண்டுமென்றால் தலைகுனிந்து தான் எடுக்க வேணும்! நாங்கள் கஷ்டத்தில் தலைகுனிந்து நின்றாலும் ஒருநாள் உழைப்பின் வெற்றியில் தலைநிமிர்ந்து நிற்போம்.'' இந்தப் பதிலைக் கேட்டதும் உடனே இவரைக் கைடாகத் தேர்ந்தெடுத்து விட்டார்கள்!

பி. எஸ். எம்.

தமிழ்நாடு பரிசுச்சீட்டு

இம்முறை அளிப்பதோ 4 வரிசைகள்!

ரூ.50,000

வென்றிடுவீர்!

குற்றால அருவியில் குளித்தது போல் இருக்கும்!



ஒவ்வொரு வரிசைக்கும்
2 முதல் பரிசுகள்

ரூ.50,000

மற்றும் பல பரிசுகள்.


பரிசுச் சீட்டின் விலை ரூ. 1/- மட்டுமே!

**குலுக்கல் நாள்:
20-7-79**

ஒவ்வொரு வரிசைக்கும்
மொத்தப் பரிசுகள் 2655

மொத்தப் பரிசுத்
தொகை ரூ. 3,90,000

இயக்குநர்,
தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம்
அரசினர் தோட்டம்
சென்னை-600 002





தேனிலவில் தேன் துளிகள்!

திரு ராஜ்மோகன்: நயாகரா நீர் வீழ்ச்சியைப் பார்க்கச் சென்றோம். ஓரளவுக்குக் காரில் சென்ற பிறகு அந்த நீர்வீழ்ச்சியை அருகில் சென்று பார்க்கப் படகில் செல்ல வேண்டும். நான் ஏற்கெனவே பார்த்த காட்சி; அவளுக்குப் புது அனுபவம். என்னருகே அவளிருக்கப் படகு மெல்ல நீர்வீழ்ச்சியை நெருங்கிக் கொண்டிருந்தது. நெருங்க நெருங்க நீர்வீழ்ச்சியின் சத்தம் அதிகரித்தது. காது துளைபடும் சத்தம் எழுந்தபோது பயத்துடன் அவள் நடுங்கி என்னை அணைத்துக் கொண்டாள். நான் அந்த அணைப்பில் இன்பம் கண்டுகொண்டிருந்தேன். சிறிது நேரத்திற்குப் பிறகு காரணம் புரியாததுபோல் நடித்துச் சாவதானமாக ''என்ன திடீர் அணைப்பு?'' என்றேன். ''உங்களுக்குச் சத்தம் கேட்கவில்லையா?'' என்றாள் அவள்.

''இந்தச் சத்தமா? இதற்கா பயந்து விட்டாய்? நயாகரா விழும்போது இந்தச் சத்தம் கூடக் கேட்காதா என்ன?'' என்று கிண்டல் செய்தேன். இப்பொழுது கூட இடி முழக்கம் அல்லது பலத்த மழைச் சத்தம் கேட்டால் நான் அவளை அர்த்த புஷ்டியுடன் பார்ப்பேன். அவள் சிணுங்கிச் சிரிப்பாள். அந்த அழகே அலாதிதான்!

நான் அயல் நாடுகள் பலவற்றைப் பார்த்திருந்தாலும் என் மனைவியுடன் சேர்ந்து சுற்றிப் பார்க்க வேண்டுமென்ற ஆசையுடன் புறப்பட்டேன், தேன் நிலவுக்கு. முதன் முறையாக வெளிநாடு செல்லும் ராதா சாப்பாட்டு விஷயங்களில் தடுமாறுவாள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அங்கு Pre Cooked Rice கிடைத்ததால் பிரச்னையே எழவில்லை. இந்த அரிசியை நிமிஷ நேரம் சுடு தண்ணீரில் போட்டு வைத்தால் சாதம் தயார்! அமெரிக்காவில் ஒன்று இரண்டா! எத்தனையோ அதிசயங்கள்! எனினும் என்னை மிகவும் கவர்ந்தது விசாரணைக்கு வந்த ஒரு வழக்குதான்!



✖ ராஜ்மோகன் தம்பதி

✖ ராஜ்மோகன் கரத்தில் ராஜ்மோகன் ராதா!

✖ அமெரிக்காவில் சுதந்திரதேவி சிலை

இளம் ஜோடி: சினிமாவுக்குப் போகத் திட்டமிட்டிருக்கிறார்கள். இப்படி ஜோடி சேர்ந்து போவது அங்கே சகஜமாயிற்றே. குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இடத்தில் சந்திக்க முடிவு செய்திருந்தனர். டான் என்று ஆண் குறிப்பிட்ட நேரத்திற்கு வந்து விட்டான். சிறிது நேரம் காத்திருந்தும் பெண் வரவில்லை. வந்ததே கோபம்! வழக்கு தொடுத்தான். வழக்கில் யார் வெற்றி பெற்றிருப்பார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?



ஆண்தான்! இந்த ருசிகரமான வழக்கைச் சொல்லிச் சொல்லி நாங்கள் இருவருமே தேன்நிலவு முடியும்வரை சிரித்துக் கொண்டிருந்தோம்!

திரு ராஜகோபாலன் : ரோம் நகரில் த்ரீ காயின்ஸ் ஃபவுண்டன் என்று ஒரு பொங்கு புனலும் குளமும் இருக்கிறது. அந்தக் குளத்தின் முன் நின்று கையில் காசை வைத்துக் கொண்டு குளத்துக்கு முதுகைக் காட்டி நின்று காசைப் பின்புறமாக வீச வேண்டும். அதே சமயம் நமக்கு விருப்பமானதை நினைத்துக் கொண்டால் அது நடக்கும் என்று ஒரு நம்பிக்கை. கையில் காசை வைத்துக் கொண்டேன். என் மனைவியும் வைத்துக் கொண்டாள். இரண்டு பேரும் ஒரே தருணத்தில் போட வேண்டும் என்று விரும்பியதால், ''ஒன், டூ, த்ரீ'' என்றேன். என் காசு குளத்தில் விழ, அவள் கையிலிருந்த காசு நழுவி என் காலடியில் விழுந்து விட்டது. கைதவறி விட்டதே என்று பரபரப்புடன் கீழே குனிந்து அவள் எடுக்கப் போனாள். துர்சகுனம் என்று எண்ணிக் கவலைப்படப் போகிறாளே என்பதால் குனிந்து எழுந்தவளை அப்படியே அணைத்துக் கொண்டேன். அந்த அணைப்புத்தான் எங்கள் திருமணத்திற்குப் பிறகு ஏற்பட்ட முதல் ஆலிங்கனம். காசு குளத்தில் விழாமல் கீழே விழுந்து விட்டதே என்று அவள் பதறினாள். ''தவறி விழுந்தது சரிதான்; ஏனென்றால் நமது அன்பு என்றும் மாறாதிருக்க வேண்டும் என்று நினைத்து நான் காசைக் குளத்தில் போட்டேன். அதை உடனே என்னால் செயல்படுத்திக் காட்ட முடிந்தது அல்லவா? அதற்கு வசதியாகத்தானே உன் கரத்தில் இருந்த




- லண்டன் டவர் பிரிட்ஜ்
- ராஜேஸ்வரி - ஸ்ரீதரன்
- கீழே ராஜகோபாலன் தம்பதி
- ஈஃபெல் கோபுரம்-பாரீஸ்
- சாய்ந்த கோபுரம்-பைசா







இத்தாலியில் ஒரு நீரூற்று



காக இமை தவறி விழுந்தது?'' என்று சமா தானப்படுத்தினேன். இப்போது கூட எங்காவது கணீரென்று காசு விழும் சத்தம் கேட்டால் எங்கள் இருவர் கண்களும் சந்திக்கும். அவள் கண்கள் நாணத்துடன் தாழும்.

திருமணமானவுடன் தேன்நிலவுக்கு இத்தாலியில் சில ஊர்களுக்கும் பாரீஸுக்கும் போக முடிவு செய்தோம். பாரீஸ் நகரைச் சுற்றிப் பார்க்க ஹோட்டலை விட்டு வெளியே வந்து காரில் ஏறினேன். ஆமாம் என்னுடன் வந்து கொண்டிருந்த என் மனைவி எங்கே? சுற்றுமுற்றும்பார்த்தேன். கண்ணுக் கெட்டிய தூரம் சாலையில் எங்கும் என் மனைவியைக் காணோம். எங்கே போய் விட்டாள்? ஓட்டலின் உள்ளே ரிஸப்ஷன் வரை சென்று பார்த்தேன். அங்கும் காணோம். எனக்கு பயமாகி



வெளி நாட்டு டூரிஸ்ட்: (தஞ்சாவூர் பெரிய கோவிலைக் காட்டி) நானும் உலகம் பூராவும் சுற்றியிருக்கேன். இந்த மாதிரி கோயிலை எங்கேயும் பார்த்ததில்லை!

டூரிஸ்ட் கைடு: பார்த்திருக்க முடியாது. ராஜராஜ சோழன் இந்தக் கோயிலை இங்கே மட்டும்தான் கட்டியிருக்கார்!

—கிரிஜா மணாளன்.

விட்டது. சினிமாவில் வருவதுபோல் யாராவது... ஏதேதோ ஆயிரம் விதக் கற்பனைகள். சென்னைக்குத் திரும்பிச் சென்றால் அவள் பெற்றோரிடம் என்ன பதில் சொல்வது? திக்பிரமை பிடித்தது போல் நின்று கொண்டிருந்த என்னை ஒரு மென்மையான கரம் தீண்டியது. ''ஏன் வெளியே போக வேண்டாமா? இங்கேயே திகைத்து நின்று கொண்டிருக்கிறீர்களே'' என்றாள் என் மனைவி. ''ஆமாம், நீ எங்கே போயிருந்தாய்?'' என்று சிறிது காரமாகவே கேட்டேன். ''சாவியை ரிஸப்ஷனில் கொடுத்து விட்டு வரச் சொன்னீர்களா? அங்கு போகும் வழியில் ஒரு கண்ணாடியைப் பார்த்தேன். ஹேர் பின் ஒன்று குறைந்ததால் முடிகள் பறந்து கொண்டிருந்தன. எனக்குப் பிடிக்கவில்லை: ஹேர்பின் எடுக்க நம் அறைக்குத் திரும்பிச் சென்றேன். என்னால் கதவை இலேசில் திறக்க முடியவில்லை, சற்றுத் தாமதமாகி விட்டது'' என்று கொஞ்சும் குரலில் கூறினாள். எப்படி இருக்கிறது கதை! என்னைப் பிடித்த கிலி விடவேயில்லை. அதற்குப் பிறகு அவள் என்னை விட்டுப் பிரியா வண்ணம் ஜாக்கிரதையாக இருந்தேன். அவளோ எனக்கு அவள் மீது அன்பு மேலும் அதிகரித்து விட்டதாக நினைத்துக் கொண்டாள். இருக்கட்டுமே.

திரு ஸ்ரீதர் : தேன் நிலவுக்கு ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றோம். கணவன் மனைவி தனியாக அல்ல! எங்களுடன் அறுபத்தைந்து வயது மதிக்கத் தக்க எங்கள் குடும்ப நண்பர் ஒருவரும் வந்திருந்தார். ஸ்விட்சர்லாந்தில் எஸ்கலேட்டரில் தானாகவே நம்மை உயர்த்திச் செல்லும் படிக்கட்டில் — ஏறிய நண்பர் கால் தடுக்கிக் கீழே உருண்டு விழுந்து விட்டார். பலத்த அடி! எனக்கென்ன செய்வதென்றே தோன்றவில்லை. யாரையும் முன்பின் தெரியாத ஊர். எங்கே எப்படி யாரை அழைத்து உதவி கேட்பது? நான் இப்படித் தடுமாறி எண்ணி முடிப்பதற்கு முன்பே, ஏதோ மாயா ஜாலம் போல் ஆம்புலன்ஸ் வந்து விட்டது! அவரை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றது. அவருக்குத் தேவைப் பட்ட எல்லா சிகிச்சையும் தரப் பட்டது. மண்டையில் காயம் பட்ட இடத்தில் X Ray எடுத்து, சிறு ஆபரேஷன் செய்து தையலும் போட்டு அனுப்பினார்கள்! இதைச் செய்து முடிக்க அவர்களுக்கு எவ்வளவு நேரம் பிடித்திருக்கும் சொல்லுங்கள்? நம்பினால் நம்புங்கள், ஒரே ஒரு மணி நேரத்தில் இவ்வளவும் நடந்து முடிந்து விட்டன!

அமெரிக்கா செல்வதென்று முடிவு செய்தவுடனேயே ''ஓ கல்கட்டா'' பார்க்க வேண்டுமென்று என்னுள் முடிவு செய்து கொண்டேன். எனது அமெரிக்க நண்பர்களுக்கு முன்கூட்டியே எழுதி டிக்கட்டையும் வாங்கி வைக்கச் சொன்னேன். வெகுநாட்கள் முன்னதாக 'புக்' பண்ணா விட்டால் டிக்கெட் கிடைக்காது. மனைவியையும் அழைத்துக் கொண்டு தியேட்டர் சென்ற பிறகுதான் பிரச்னையே ஆரம்பம். வாசலில் ''ஓ கல்கட்டா'' விளம்பரப் பலகையைப் பார்த்தவுடன் மனைவி திகைத்து விட்டாள். உள்ளே வர மறுத்து விட்டாள். மிகவும் கஷ்டப்பட்டுச் சமாதானம் செய்தேன். உள்ளே போய் அமர்ந்தோம். காட்சி முடிந்து வெளியே வந்ததும் என்னவளைப் பார்த்தேன். ''நீங்கள் அப்படிப் பார்க்காதீர்கள்! உங்கள் பார்வையே சரியில்லை. உங்கள் கண்கள் எக்ஸ்ரே கண்களைப் போலிருக்கிறது!'' என்றாள் — குறும்பாக. அன்று முதல் நான் அவளைச் சாய்ந்து ஒரு மாதிரிப் பார்த்தாலே அது 'ஓ கல்கட்டா பார்வை' என்று அவளுக்குப் புரிந்துவிடும்!

பேட்டி: '**அசோக் குமார்**'



யுகங்கள் மாறும் போது...

வாஸந்தி

3

"நளினி!"

தொலைவிலிருந்து யாரோ கூப்பிடுகிற மாதிரி இருந்தது.

நளினியின் புலன்கள் விழிப்படையச் சிறிது நேரம் பிடித்தது. தூக்கத்தின் பாரம் இமைகளை விட்டு அகல மறுத்தது. சின்னக் குழந்தை மாதிரி சண்டித்தனம் செய்தது. அதற்குப் பணிந்து போகிற மாதிரி நளினி மறுபடியும் கண்களை மூடிக் கொண்டாள்.

"நளினி! காலேஜ் கிடையாதா இன்னிக்கு? நேரமாகல்லியா?"

அவள் சட்டென்று விழித்துக் கொண்டாள். கண்களைத் திறந்ததும் அறை வாயிலில் பாதியை அடைத்த மாதிரி அம்மா நின்றிருந்தது தெரிந்தது. ஜன்னலின் கனமான திரைகளினால் அறை இருட்டாக இருந்தது. திறந்த கதவின் வழியே அம்மாவுக்குப் பின்னாலிருந்து சூரிய ஒளி உள்ளே நுழைகையில் அம்மாவின் உருவம் நிஜ உருவமாகத் தெரியவில்லை. இடைக்கும் கீழே தொங்கின விரிந்த கூந்தலுடன் வெள்ளைப் புடவையில் ஒரு மோகினி மாதிரி...

"என்ன பார்க்கறே? எழுந்திரு. நாழியாயிடுத்து. அப்புறம் சாப்பிட நேரமில்லேன்னு ஓடுவே..."

"இதோ எழுந்துக்கறேன். ஒரு நிமிஷம் உன்னைக் கனவிலே பார்க்கறேனா நிஜம்மா பார்க்கறேனான்னு புரியல்லே."

அம்மா சிரித்தாள்.

"நான் ரொம்ப நிஜம்தான். உணர்ச்சிகளைக் காட்டத் தெரியாத ஜடமானாலும் நான் ரொம்ப நிஜம்தான். சீக்கிரம் தயாராகி ப்ரேக்ஃபாஸ்டுக்கு வா."

அம்மா படிகளில் இறங்கிச் செல்லும் ஓசை கேட்கும்போது, 'ஓ இந்த அம்மா நேற்று நாம் சொன்னதை மறக்கவில்லை' என்கிற நமைச்சல் மனசில் ஏற்பட்டது. அந்த மாதிரி ஒரு வார்த்தையை நாம் ஏன் சொன்னோம்? எவ்வளவோ நாட்களாக மனசில் அமுக்கி வைத்திருந்த அந்த எண்ணத்தை நேற்று எப்படி வெளியில் விட்டோம்? அம்மா ஏன் வாயை மூடிக் கொண்டிருக்கிறாள்? எல்லாவற்றையும் ஏன் விழுங்கிக் கொண்டிருக்கிறாள் என்கிற ஆத்திரம் எவ்வளவோ வருஷங்களாக மனசில் பொங்கிக் கொண்டிருக்கிறது. ஒன்றுமே நடக்காத மாதிரி கரணை கெட்டுப் போய் வேளை தவறாமல் மருந்தையும் ஆகாரத்தையும் அதற்கு எந்த வகையிலும் அருகதையில்லாதவருக்கு அம்மா கொடுத்ததைப் பார்க்கையில் அம்மாவுக்குள் ஏதோ ஒரு அமானுஷ்யமான சக்தி இருக்க வேண்டும் என்று தோன்றும். அல்லது பொருளாதார அடிமைத்தனம் என்பது ஒருத்தியை எத்தனை பலவீனப்படுத்துகிறது என்று ஆத்திரம் வரும். அந்தப் பலவீனத்தில் உணர்ச்சிகள் கூடவா மரத்துப் போகும்?

பல்லைத் துலக்கி விட்டு அவசரமாக உடையைக் களைந்து ஷவருக்கடியில் நிற்கையில் எதிர்த்த அறையிலிருந்து அப்பாவின் அசிங்கமான அநாகரீகமான கத்தல் கேட்கிற மாதிரி பிரமையேற்பட்டது.

"யூ டர்ட்டி உமன்! யூ வோர்!"

ஷவருக்கடியில் முதுகுத் தண்டில் ஒரு சிலிர்ப்பு ஏற்பட்டது. கண்களில் நீர் துளிர்த்தது. எத்தனை கேவலமான மனிதரின் மகள் நான் என்கிற அவமான உணர்வு ஒரு நிரந்தரமான உணர்வாக அப்பொழுதெல்லாம் இருந்தது. இவர் சீக்கிரம் செத்துப் போனால் தேவலை என்கிற ஆத்திரமான ஆயாஸமான எண்ணம் கூடத் தோன்றிக் கொண்டிருந்தது.

அப்படியென்ன கோபம் அவருக்கு அம்மாவின் மேல்? அவளுக்குக் கடைசி வரையில் புரியவில்லை. அப்பாவுக்கும் அம்மாவுக்கும் ஆண்டவன் எந்த வக்ரமான வேளையில் முடி போட்டான் என்று புரியவில்லை. அம்மா தேவதை மாதிரி இருந்தாள். அப்பா சைத்தானைப் போல் இருந்தார் — உருவத்திலும் குணத்திலும். அம்மாவின் அழகைக் கண்டு பெருமைப் படாமல் மிகக் கீழ்த்தரமாகப் பொறாமைப்பட்டார். அந்தப் பொறாமைக்குத் தவறாமல் தீனி போட்டு வளர்த்து விசுவரூபமாக்கி அதிலிருந்து மீள முடியாமல் அம்மாவின் வாழ்க்கையை அதில் பஸ்மமாக்கினார். அப்பாவின் ஒரே ஆயுதம் பணம். அதை வைத்துக் கொண்டு என்னவெல்லாம் ஆட்டம் ஆடினார். குடி, பெண்கள் என்று? மை காட்! அதற்கெல்லாம் அம்மாவால் எப்படிப் பேசாமல் இருக்க முடிந்தது? அப்பாவின் அத்தியாயமே முடிந்து போன போது அதைப் பற்றி அசை போடுவது உபயோகமில்லாத வேலை என்றுதான் தோன்றிற்று.

இன்றைக்கு நேரம் ஆகி விட்டதால் கவனமாகப் புடவை கட்டி கொள்ள நேரமில்லை


என்று தீர்மானித்து இஸ்திரி போட்டு வைத்திருந்த ஒரு ஸல்வார் கம்மீஸை அவசரமாக உடுத்திக் கொண்டாள். அவள் கீழே வருகையில் கஸ்தூரி இட்டிலியை மேஜை மேல் வைத்துக் கொண்டிருந்தாள். நளினிக்கு இட்டிலி பிடிக்காது. ஆகவே முகம் சுளித்தாள். தயிரோடு கலந்து சாப்பிட்டால் போகிறது என்றாள் அம்மா. ''தயிருக்கு மேலே காப்பியா? வேண்டாம்'' என்றாள் நளினி.

''குடிக்கல்லியானு க்ளாஸிலே தினமும் தூங்கற அரைகுறைத் தூக்கம் இன்னிக்கு நல்ல தூக்கமா இருந்துட்டுப் போறது.''

'இந்த' கஸ்தூரிக்கு வாய் ரொம்ப நீளம் என்று தினமும் நினைத்துக் கொள்வதை இன்றும் நினைத்துக் கொண்டு அவள் காப்பியை ஒருமடக்கு விழுங்கிவிட்டு,

''போயிட்டு வரேன்'' என்று ஓர் ஓட்டத்துடன் புஸ்தகங்களைத் தூக்கிக் கொண்டு விரைந்தாள். அப்படித்





தெருவில் விரைகையில் காலையில் மனசை அழுத்திய மனச் சூன்யம் வேகமாக விலகிப் போன மாதிரி இருந்தது.

தெருவில் அவர்கள் வீட்டு குல்மொஹர் மரம் நேற்றைய பூக்களைக் கொட்டியிருந்தது. எஜமானுக்குத் தெரியாமல் வீட்டுப் பொருளை யாருக்கோ பறி கொடுத்த மாதிரி.

பஸ் ஸ்டாப்பில் சசியும் ராதாவும் நிற்பதைப் பார்த்ததும் நல்லவேளை இன்னும் பஸ் போய் விடவில்லை என்கிற நிம்மதி ஏற்பட்டது.

''ஹாய் நளின்!''

''ஹாய்! பஸ் இன்னும் வரவில்லையா?''

''நீ லேட்டுன்னு அதுக்குத் தெரியும்.''

''ராத்திரி லேட்டாத் தூங்கினேன், கார்த்தாலே எழுந்திருக்க லேட்டாயிடுத்து.''

ரொம்பப் படிக்கிறே போலேயிருக்கு நளினி! உடம்பைக் கெடுத்துக்காதே!''

''போ இவளே, நாமெல்லாம் உடம்பைக் கெடுத்துக்கற அளவு படிக்கிற காலம் வரவே வராது.''

''என்னவோ யாருக்குத் தெரியும்?'' என்று சிரித்தாள் சசி. ''இப்ப நீ ரொம்ப மாறிப் போயிட்டியாம். தினமும் லைப்ரரிக்குப் போறியாம்!''

நளினி உஷாரானாள். கன்னங்களில் இலே சாகச் சூடேறிற்று. கண்களில் மையல் ஏறிற்று. உதடுகளில் லேசான புன்னகை அரும்பிற்று. ஏன் கோபம் வர மாட்டேன் என்கிறது?

''ஏதோ கொஞ்சத்துக்குக் கொஞ்சம் உங்களைப் பார்த்துக் கத்துக்கறேன். பரீட்சைக்கு இன்னும் நாலு மாசம்தானே இருக்கு?''

''பரீட்சை பத்தின நினைவே எங்களுக்கு வரல்லே. நீ அது எப்போ முடியப் போறதுன்னு காத்திண்டிருக்கிற மாதிரி பேசறியே. ஏதாவது விசேஷம் உண்டா?''

நளினி சிரித்தாள்.

''நீங்க ரெண்டு பேரும் பொறுப்பில்லாத அசட்டுப் பெண்கள்!''

''ஆமாம் இப்போ நாங்கள்ளாம் அசடாத் தெரிவோம்!''

''இப்போன்னு எப்போ?''

''லைப்ரரியிலே சொல்றோம்!''

பஸ் வந்து விட்டது. சிரித்துக் கொண்டே ஏறினார்கள். நளினி ஒரு தனியான இடத்தில் போய் அமர்ந்து கொண்டாள். உதட்டில் புன்னகை மாறாமல் அப்படியே இருந்தது. இந்த வாயாடிகளுக்கு விஷயம் தெரிந்து விட்டது என்கிற உணர்வும் இவர்களுக்குத் தெரிந்த பிறகு கல்லூரி முழுதும் தெரிய அதிக நேரமாகாது என்கிற நினைப்பும் அவள் மனசை வியாபித்தது. கூடவே 'ஸோ வாட்?' என்று ஓர் அலட்சியமான கேள்வி எழுந்தது. நான் அசோக்கை மனசார விரும்புகிறேன். அது வெட்கப்பட வேண்டிய விஷயமில்லே. அது ஓர் இயற்கையான உணர்வு. ஆரோக்கியமான உணர்வு. யாரோ இரண்டு பேர் வம்பு பேசுவார்களோ என்கிற பயத்தில் மனசில் பொங்கும் பிரவாகத்தை அடக்க முடியாது. அந்தப் பிரவாகத்தைக் கட்டுப்படுத்த முடியும். ஆனால் அடக்க முடியாது. அம்மா

'நேரங்க கழித்து வராதே; இருட்டில் அவனோடு சுத்தாதே' என்றால்தான் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியும். ஆனால் 'அசோக்கைப் பார்க்காதே; கல்யாணத்தைப்பற்றி நினைக்காதே' என்று சொன்னால் அது அசாத்தியமான காரியம்... அம்மா கடைசியில் என்ன முடிவெடுப்பாள்? தான் அனுபவிக்காத சந்தோஷத்தை மகளாவது அனுபவிக்கட்டும் என்கிற ஒரு பெருந்தன்மை அம்மாவுக்கு நிச்சயம் இருக்கும். கோபமே படத் தெரியாத அம்மா தன்னுடைய ஏக்கங்களை, வருத்தங்களை, புண்களை வெளியே காட்டாத ஒரு நாகரீகத்தை வளர்த்துக் கொண்டிருக்கும் அம்மா. அவளை எப்படி 'ஜடம்' மாதிரி வேஷம் போட்டாய்' என்று சொல்லத் தோன்றிற்று? நமக்கு ஏன் இப்படி சமய சந்தர்ப்பம் தெரியாமல் இப்படி ஒரு துடுக்குத்தனம் நாக்கில் வந்து உட்கார்ந்து விடுகிறது?

இத்தனை கஷ்டப்பட்ட அம்மாவைப் பார்த்து அப்படிப் பேச நம்மால் எப்படி முடிகிறது? அவளுக்குக் கண்களில் இலேசாக நீர் திரையிட்டது.

காலேஜ் வந்து விட்டது. அவள் சட்டென்று சுய நினைவு அடைந்து எழுந்தாள். காலேஜ் கேட்டுக்குள் நுழைந்ததுமே வேறு உலகத்துக்கு வந்து விட்ட மாதிரி இருந்தது.

இன்றைக்கு லைப்ரரிக்குப் போக முடியுமா? அசோக்கைச் சந்திக்க முடியுமா என்று சந்தேகமாக இருந்தது. இப்பொழுதெல்லாம் ஒரு நாள் கூட அவனைச் சந்திக்கா விட்டால் மனசு பேயாட்டம் ஆடிற்று. ஏதோ ஒரு போதைக்கு அடிமையாகிப் போன மாதிரி. இது எப்படிப்பட்ட போதை? எப்பொழுது ஆரம்பித்தது இது? அவளுக்கே சரியாக நினைவில்லை. எவ்வளவோ காலமான மாதிரி இருந்தது. அவள் தன் வழக்கமான அவசர நடையுடன் ஒரு நாள் பப்ளிக் லைப்ரரியிலிருந்து ஒரு புத்தகத்தை எடுத்துக் கொண்டு வெளியே வருகையில் உள்ளே நுழைந்து கொண்டிருந்த இந்த அசோக்கின் மீது முட்டிக் கொண்டாள். அவன் சட்டைப் பாக்கெட்டில் செருகியிருந்த கூலிங் க்ளாஸில் அவளுடைய மூக்கு நன்றாகப் பட்டு லேசான சிராய்ப்பு கூட ஆகி விட்டது. எக்கச்சக்கமாகப் பட்டு விட்ட வேகத்தில் அவன் நிலைகுலைந்து போனான். மூக்கு சுரீரென்று வலித்தது. கண்களில் நீர் தளும்பி விட்டது. அவன் பதறிப் போனான். கலவரத்துடன் ''ஐ ஆம் ஸாரி, ஐ ஆம் ஸாரி'' என்று திரும்பத் திரும்பச் சொன்னான். அவள் கூச்சத்துடன் தன்னைச் சமாளித்துக் கொண்டு வராந்தாவின் கைப்பிடியைப் பிடித்துக் கொண்டு மூக்கின் மேல் ஒரு கைக்குட்டையைப் பிடித்தபடி நின்றாள். அவன் எங்கிருந்தோ ஒரு குவளையில் நீர் கொண்டு வந்தான்.

''ப்ளீஸ் கர்சீஃபை ஈரம் செய்து வைத்துக் கொள்ளுங்கள்'' என்றான்.

அன்றைக்குப் பிறகு அவளைப் பார்க்கும் போதெல்லாம் ''மூக்கு எப்படியிருக்கு?'' என்று கேட்டுச் சிரிப்பான். ஒவ்வொரு சந்திப்பும் அவர்களிடையே ஒரு நெருக்கத்தை ஏற்படுத்திற்று —''நான் இப்பல்லாம் பாக்கெட்டிலே எதையும் வைச்சுக்கறதில்லே நளினி, நீ தாராளமான முட்டிக்கலாம்'' என்று சொல்லும் அளவுக்கு... சின்ன வயசிலேயே அம்மாவையும் அப்பாவையும் இழந்து சித்தப்பா வீட்டில் கஷ்டப்பட்டுப் படித்து இப்பொழுது பொறுப்பான உத்தியோகத்தில் சுதந்திர புருஷனாய் நிற்கும் கதையை அந்தரங்கமாகச் சொல்லும் அளவுக்கு... பதிலுக்கு அவள் தன் வீட்டு விவகாரங்களைப் பற்றிச் சொல்லும் அளவுக்கு... அப்பாவின் பலவீனங்களைப் பற்றி... அம்மாவின் குணங்களைப் பற்றி...


அந்த நெருக்கம் மிக இயல்பாக ஏற்பட்ட மாதிரி இருந்தது அவளுக்கு. இந்த நெருக்கம் பூரணமாக வேண்டுமானால் அது திருமணத்தில் முடிய வேண்டும் என்று அவள் உணர்ந்தாள். அவனாகவே அவளுடைய எண்ணத்தை எதிரொலித்தபோது மனத்தில் பொங்க ஆரம்பித்திருந்த பிரவாகம் பீறிட்டுக் கொண்டு கிளம்பிற்று. அம்மா புரிந்து கொள்வாளா? அவனை ஏற்பாளா? அவள் யோசனையுடன் காலேஜிலிருந்து வீட்டுக்குப் போனாள். அம்மா குளித்துக் கொண்டிருந்தாள். அவளுக்குச் கஸ்தூரி காப்பியைக் கலந்து கொடுத்துத் தட்டில் தேன்குழலை வைத்துக் கொடுத்தாள்.

வாசல் வராந்தாவில் போடப் பட்டிருந்த நாற்காலியில் உட்காருகையில் மனசு இருப்பே கொள்ளாமல் தவித்தது. இன்றைக்கு லைப்ரரிக்குப் போகிறேன் என்று சொன்னால் அம்மா என்ன சொல்வாளோ என்றிருந்தது. நீ தினம் தினம் லைப்ரரிக்குப் போகிறேன் என்று சொல்லிக் கொண்டு ஊர் சுற்றியது போதும் என்பாளோ? நான் ஒரு முடிவு எடுக்கும் வரை அவனைப் பார்க்காதே என்பாளோ? அவள் இருப்புக் கொள்ளாமல் எழுந்தாள்.

அசோக்கைப் பார்க்கா விட்டால் மண்டை வெடித்து விடும்போல் விநாடிக்கு விநாடி ஓர் ஆத்திரம் உடலையும் மனசையும் வியாபிக்கிற மாதிரி இருந்தது. காப்பிக் கோப்பையைச் சாப்பாட்டு மேஜைமேல் வைத்து விட்டு அவள் தன் அறைக்குச் சென்றாள். அவசரமாக முகத்தைக் கழுவிக் கொண்டு ஸல்வார் கம்மீஸை அவிழ்த்து விட்டு ஜீன்ஸும் டீ ஷர்ட்டுமாகக் கிளம்பினாள். நினை

அலகாபாத்தில் ஜவஹர்லாலின் ஆனந்த பவனுக்கு பிரதி திங்கட்கிழமை தோறும் விடுமுறை விட்டு விடுகிறார்கள். இதனால் திங்கட் கிழமையில் ஆனந்த பவனுக்கு வரும் எண்ணற்ற சுற்றுலாப் பயணிகள் ஏமாந்து திரும்ப வேண்டிய அவல நிலை ஏற்படுகிறது.

ஆமாம், ஆனந்த பவனுக்கு விடுமுறை தேவைதானா?... —மன்னை சம்பத்.



வாக லேப்ரரி புத்தகத்தை எடுத்துக் கொண்டான். அம்மாவை எங்கும் காணோம். அவள் கஸ்தூரியிடம் ''நான் கொஞ்சம் வெளியிலே போயிட்டு வரேன் கஸ்தூரி. சீக்கிரம் வந்துடுவேன்னு சொல்லு அம்மாகிட்டே'' என்று கூறி விட்டுப் பதிலுக்குக் காத்திராமல் வேகமாக நடந்து கேட்டைத் தாண்டினாள். ஏதோ குற்றம் செய்கிற மாதிரி மனசு இலேசாக அடித்துக் கொண்டது. அம்மாவிடம் சொல்லிக் கொள்ளாமல் கிளம்புகிறோம் என்று குறுகுறுத்தது. அவள் எவ்வளவோ முறை இப்படிக் கஸ்தூரியிடம் சொல்லிக் கொண்டு கிளம்பியிருக்கிறாள். ஆனால் அன்றைக்கு — அம்மா அப்படிச்சொன்னபிறகு இன்றைக்குப் பிய்த்துக் கொண்டு எந்த வேகத்தில் புறப்படுகிறோம் என்று அவள் திகைத்தாள். அந்த வேகத்தை அடக்காமல் இப்படிப் புறப்படுவது தப்பில்லையா என்று யோசித்தாள். பிறகு தெருவில் இவ்வளவு தூரம் நடந்து வந்த பின் இப்படியெல்லாம் தர்க்கம் செய்து என்ன லாபம் என்று சமாதானப் படுத்திக் கொண்டாள். அதுவும் தவிர இருட்டுகிற வரையில் தானே வெளியில் சுத்தக் கூடாது என்று அம்மா சொன்னாள்? அதற்குள் இன்றைக்கு நிச்சயமாக வந்து விட லாம் என்று தீர்மானித்துக் கொண்டு அவள் பஸ்ஸில் ஏறி லேப்ரரிக்குச் சென்றாள். அந்தப் பிரும்மாண்டமான லேப்ரரியின் கட்டிடத்தைப் பார்த்ததுமே மனசு துள்ளிக் கொண்டு எழும்பிற்று. கட்டிடத்தின் மாடியில் லேப்ரரி இருந்தது. மாடி வராந்தாவிலேயே அசோக் உட்கார்ந்திருந்தான். அவளைக் கவர்வதற்காகவே உடுத்திக் கொண்ட மாதிரி ட்ரிம்மாக இருந்தான். அவளைப் பார்த்ததும் பளிச்சென்று சிரித்தான். அவனுடைய நாபியிலிருந்து ஜில்லென்ற உணர்வு எழும்பி நெஞ்சை அடைத்தது. அவன் தலையில் தடவியிருந்த CODE 10 வின் நறுமணம் அவளைக் கிறங்க வைத்தது.

அவள் புத்தகத்துடன் வெளியே வருகையில் ''ஓ எவ்வளவு நேரம் என்னை நீ காக்க வெச்சுட்டே?'' என்று அவன் சொல்கையில் அவள் மனசில் உல்லாசம் பொங்கிற்று. அவள் அந்த இருண்ட படிகளில் வேகமாக இறங்கிப் போனாள்.

''என்ன அவசரம் உனக்கு? மெள்ளத்தான் இறங்கேன்?'' என்று அவன் அவளது இடையை அணைத்தபடி மெள்ள இறங்கினான். அவன் கைகளிலிருந்து உடலுக்குப் பரவிய சூடு அவளுக்கு இலேசான நடுக்கமேற்படுத்தியது. மார்பு வேகமாக அடித்துக் கொண்டது. இருட்டு அவனுக்குச் சௌகர்யமாக இருந்தது. அவன் கை பரவ ஆரம்பித்த போது அவள் சட்டென்று அவனது பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு வேகமாகப் படிகளில் இறங்கிப் போனாள். அவன் சற்று நிதானமாக இறங்கி வந்தான்.

''என்ன அப்படி ஓடி வந்தே?'' அவன் குரலில் இருந்த ஏமாற்றம் அவளுக்குக் கிளுகிளுப்பூட்டிற்று.

''யாரோ மேலே வர சப்தம் கேட்டது'' என்று அவள் புளுகினாள். அவர்கள் இருவரும் மௌனமாக லேப்ரரியை விட்டு வெளியே நடந்தார்கள். ரோட்டில் ஜன சந்தடியைப் பார்த்ததும் ஒரு நிம்மதி ஏற்பட்டது. இவனோடு தனியே போவது ஆபத்து என்று தோன்றிற்று. அவனது ஸ்பரிசம் பட்ட மாத்திரத்தில் அவளது மனமும் உடலும் பலவீனப் பட்டுப் போகிற ஆபத்து...

''என்ன ஆச்சு நேத்து? உங்கம்மா கிட்டே சொல்லப் போறேன்னியே, சொன்னியா?''

''சொன்னேன். யோசிக்கத் தனக்கு அவகாசம் வேணும்னு அம்மா சொன்னா.''

''உங்கம்மாவை எனக்கு ரொம்பப் பிடிச்சுப்போச்சு. ஷீ இஸ் சோ ஸ்வீட் அண்ட் கைண்ட்.''

''கல்யாணத்தைப் பத்தி நீ ஸீரியஸ்ஸாத் தான் இருக்கே இல்லே அசோக்?''

''எவ்வளவு சில்லியாக் கேட்கறே? வாட் டு யூ மீன்?''

''இல்லே அசோக், எனக்கு எங்கம்மா மாதிரிப் பொறுமையில்லே. ஏதாவது ஏமாத்தம்னு என்னாலே தாங்க முடியாது.''

''நீ ஒரு வடிகட்டின அசட்டுப் பெண்.''

அடுத்த நிமிஷம் அதைப் பற்றியெல்லாம் மறந்து போன மாதிரி அவள் அவனுடன் சிரித்துப் பேசினாள், பொதுவாக. அவனுடன் ஐஸ்கிரீம் சாப்பிட்டு விட்டு வீட்டுக்குத் திரும்புகையில் இருட்டி விட்டது நன்றாய். வரவேற்பறையிலேயே அம்மா உட்கார்ந்திருந்தாள். முகத்தில் யோசனை தெரிந்தது. உள்ளே நுழைந்த அவளை நிமிர்ந்து பார்த்த பார்வையில் கவலை தெரிந்தது. இதுவரை அவள் பார்த்திராத கோபம் தெரிந்தது.

ஓ! நிலைமையை மோசமாக்கிக் கொண்டோம். அம்மாவைக் கோபப் படுத்தி விட்டோம் என்று உணர்கையில் நளினி சமாதானத்துக்கு என்ன வழி என்கிற திகைப்புடன் அம்மாவின் அருகில் சென்றாள்.

(தொடரும்)




''நம்ப மனோகரன் தாஜ் மகால் பார்க்கப் போன போது ஒரு பை நிறைய அழுக்குத் துணியும், சோப்பும் கொண்டு போனானாம்!''

''மடையன், அங்கே எதுக்கு அழுக்குத் துணியைக் கொண்டு போனான்?''

''தாஜ்மகால் சலவைக் கல்லுலே செஞ்சதுன்னு யாரோ அவனுக்குச் சொல்லிட்டாங்க!'' முத்து தங்க ஐயப்பன்.

இயக்குனர் ப. நீலகண்டன்

பட்டணம் போன பச்சைக் கிளி



மணியக்காரர் வீட்டிலிருந்து வந்த கோமளம் காய்கறித் தட்டைக் கீழே வைத்து விட்டு ''அம்மா!'' என்றாள்.

''சொல்லேண்டி!'' என்றாள் சீதை. சீதைக்குக் கோபமல்ல. கசப்பான அனுபவங்களால் வாழ்க்கையில் ஏற்பட்ட அலுப்பு.

கோமளம் தயங்கித் தயங்கிச் சொன்னாள்!

''மணியக்காரர் வீட்டுக்குப் பட்டணத்திலே இருந்து ஒரு டாக்டர் வந்திருக்கார். அவரு என்னைப் பார்த்ததும், ''இந்தப் பொண்ணு யாரு''ன்னு கேட்டாரு. மணியக்கார மாமா என்னைப் பத்தி விவரமாகச் சொன்னதும், டாக்டர் கண் கலங்கிட்டாரு. 'ஒரு காசு கூட வரதட்சணை வேண்டாம். நானே இந்தப் பெண்ணைக் கட்டிக்கிறேன்'னு சொன்னாரம்மா.''

''போடி பைத்தியம்! எவனோ என்னமோ சொன்னானும்... அதை வந்து சொல்றியே?''

பெண்ணின் பேதைமையை நினைத்துப் பெருமூச்சு விட்டவாறே காய்கறிகளை எடுத்தாள், நறுக்குவதற்காக.

''அம்மா! என் கல்யாணத்துக்காக நான் அலையலேம்மா. உங்க தலையிலே இருக்கிற சுமையை இறக்கி வைக்கத்தான் அவசரப் படறேன். அம்மா! நான் ராசி இல்லாதவ. நான் போய்த் தொலைஞ்சாத் தான் என் தங்கச்சிங்களுக்கும் ஒரு வழி பிறக்கும்'' என்று தேம்பினாள்.

சீதை உற்றுப் பார்த்தாள்.

கோமளம், ''அம்மா! எப்படியாவது இந்தக் கல்யாணத்தை நடத்தி முடிச்சிடம்மா. இல்லேன்னா, இந்த அதிர்ஷ்டக் கட்டைக்கு விமோசனமே கிடைக்காதம்மா கிடைக்காது'' என்று தாயின் கால்களைக் கட்டிக் கொண்டு கதறினாள்.

அமைதியே உருவான கோமளமாவா இப்படிப் பேசுகிறாள்?

நேற்று நடந்த சம்பவம்தான் கோமளத்தின் இந்த முடிவுக்குக்காரணமோ? ஒரு விநாடி சிந்தித்தாள் சீதை.

நேற்று கோமளத்தைப் பார்ப்பதற்காக வந்திருந்தவன் பன்னிரண்டாவது மாப்பிள்ளை. இதற்கு முன்பு வந்த பதினொரு பேரும் நகை, நட்டு, பாத்திரம், பண்டம் வர தட்சணை இப்படிப்பட்ட ''கொடுக்கல்'' பிரச்னைகளால் திரும்பிப் போனவர்கள்.

வாத்தியார் வரதராஜன் வாழ்க்கையில் செய்த பெரிய தவறு, ''ஒரே ஒரு ஆண் குழந்தை வேண்டும்'' என்று ஆசைப்பட்டது தான். அதன் விளைவு ஐந்து பெண் குழந்தைகளில் முடிந்தது.

மாப்பிள்ளை வீட்டார் வந்து சேர்ந்தனர்.

பெண்ணை எல்லோருக்கும் பிடித்து விட்டது. மாப்பிள்ளையின் தாயார்தான் ஒரு புதுக் கதையைத் தொடங்கினாள். வருகிற வழியில் கேள்விப் பட்டாளாம். வாத்தியாரின் ஒன்று விட்ட சகோதரியின் மகள் யாருடனோ ஓடிப் போனாளாம்.

இந்தப் பிரச்னையிலிருந்து வரதட்சணையை அதிகப்படுத்தும் முயற்சி சுகப்பிரசவமாயிற்று. அடுத்த விநாடி வளர்ந்தது; உடனே விசுவரூபமெடுத்தது! இன்னும் கொஞ்சநேரம் இருந்தால் மணியக்காரர் மாப்பிள்ளை வீட்டாரை அடித்துநொறுக்கியிருப்பார்.

பெண் பார்க்க வந்தவர்கள் தப்பித்தோம பிழைத்தோம் என்று ஓடி விட்டார்கள்!

இரவு — வாத்தியாரும் சீதையும் திண்ணையில் பேசிக் கொண்டிருந்தனர். ''வருகிற இடமெல்லாம் இப்படித் தட்டிப் போகிறதே?'' என்று கலங்கினாள் சீதை.

''நான் செத்தாத்தான் என் பெண்களுக்கு நல்ல காலம் பொறக்குமோ என்னமோ?'' என்று தலையிலடித்துக் கொண்டார் வாத்தியார். ''ஐயோ! அப்படியெல்லாம் சொல்லாதீங்க'' என்றாள் சீதை. மாங்கல்யத்தை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

''கடவுளே! நீ கண்ணைத் திறக்க மாட்டியா? இந்தத் துரதிருஷ்டம் பிடிச்ச பெண்

னுக்குக் கல்யாணமே ஆகாதா?'' இன்னும் ஏதோ சொல்வதற்குள் கணவனின் வாயைப் பொத்தினாள் சீதை.

குழந்தையைப் போல் தேம்பித் தேம்பிக் கதறினார் வாத்தியார். பாவம்! நொந்து போன உள்ளம்.

இருபத்தைந்து வயதுப் பெண்ணின் காதில் இவ்வளவு விஷயங்களும் விழுந்திருந்தால்...?

கோமளம் சொன்ன மாப்பிள்ளையைப் பற்றி மணியக்காரரை விசாரித்தார்கள். டாக்டரை அவருக்கு நேரடியாகத் தெரியாவிட்டாலும், ''அறிமுகக் கடிதம் கொடுத்து அனுப்பியிருக்கும் 'கார்முகில் வண்ணன்' நல்லவன், யோக்கியன்'' என்று சொன்னார்.

கோமளத்துக்குத் திடீரென்று கல்யாணம் கூடிவிட்டதை அறிந்து கிராமமே மகிழ்ந்தது.

கோயிலிலே திருமணம்.

பட்டணம் போன கோமளம் அடிக்கடி கடிதம் எழுதினாள். பணமும் அனுப்பினாள்.

வாத்தியாரின் இரண்டாவது பெண்ணுக்குத் திடீரென்று ஒரு வரன் வந்தது.

இந்தச் செதியை வாத்தியாரே நேரடியாகப் பட்டணம் போய் மாப்பிள்ளையிடம் சொல்லி விட்டு வர வேண்டுமென்று சொன்னாள் சீதை.

கைச்செலவுக்கு நாற்பது ரூபாய் கொடுத்தாள். ஒரு வழியாகப் பட்டணம் வந்து சேர்ந்தார் வாத்தியார். விலாசத்தைக்கையில் வைத்துக் கொண்டு விசாரித்தார்.

யாருக்கும் புரியாமல் போய் விடக் கூடாதே என்பதற்காக டாக்டர் வசந்தன், கோமளம் என்று இருவர் பெயரையும் சொல்லி விசாரித்தார்.

''பாத்தா பெரிய மனுஷன் மாதிரி இருக்குது. கோமளத்தைத் தேடி வந்திருக்கியே? போய் நாலாவது விட்டில விசாரி, அதையும்



காலி பண்ணிட்டுஓடிட்டாளோ, என்ன கண்றாவியோ, போய்யா'' என்றான் ஒருவன்.

'பட்டணமே ஒரு மாதிரியாக இருக்கிறதே. தவறான விலாசத்தைக் கேட்டு விட்டோமோ? அல்லது கார்ப்பரேஷன் புது நம்பர் போடுவதால் ஏற்பட்ட குழப்பமோ?' வாத்தியாருக்கு ஒன்றும் புரியவில்லை.

நாலாவது வீட்டுக்கு வந்தார். தனிவீடு. யாரை விசாரிப்பது என்று தெரியாமல் விழித்தார். வராந்தாவில் ஏறி நின்றார்.

ஒரு பெண்ணின் விசும்பல் கேட்டது.

அதைத் தொடர்ந்து ''பட்டணத்துக்கு வந்தப்புறம் தான் எனக்கு நேர்ந்த விபத்து எவ்வளவு பயங்கரமானதுங்கறதைத் தெரிஞ்சிக்கிட்டேன்'' என்ற பேச்சுத் தொடர்ந்தது.

கோமளத்தின் குரல்தான்.

நெஞ்சைக் கிழித்துக் கொண்டு வெளி வந்தன, இந்த வார்த்தைகள்.

வாத்தியார் தலையில் இடி விழுந்ததைப் போலிருந்தது. நிற்பதற்குக் கூடச் சக்தி இல்லாமல் சுவரில் சாய்ந்தார்.

தலையைத் திருப்பிப் பார்த்தார். ஜன்னல் வழியாகப் படுக்கை அறை தெரிந்தது. கட்டிலில் அமர்ந்திருந்தாள் கோமளம்.

குடும்பப் பாங்கான வாத்தியார் மகள் கோமளம் எங்கே? இந்தக் கோமளம்?...

அவளுக்கு முன்னால் நாற்காலியில் ஓர் இளைஞன் உட்கார்ந்திருந்தான். கறுப்புக் கண்ணாடி. குங்குமப் பொட்டு. இடது தோளில் ஒரு கதர்ப்பை.

கோமளம் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

''அப்புறம் அந்த வசந்தன்...?'' என்று கதையை நிறுத்திய இடத்திலிருந்து தொடர்வதற்கு அடி எடுத்துக் கொடுத்தான் இளைஞன்.

''அவர் பேரு வசந்தனே இல்லை'' என்றாள் கோமளம்.

வாத்தியார் இதயமே நின்றுவிடும்போலிருந்தது.

கோமளம், கேவிக் கொண்டே கதையைத் தொடர்ந்தாள்.

''மாலை ஆறு மணி ஆனப் போதும்; மயக்க ஊசி போட்டுக்கறதுக்காக ஆண்களும் பெண்களும் ஏராளமான பேர் வருவாங்க. இன்னும் என்னென்னமோ ஊசிகள். எனக்குச் சொல்லத் தெரியலே. பல இளம் பெண்கள் கருச்சிதைவு ஊசி போட்டுக்க வந்தாங்க. அந்த வீடே ஒரு நரகம்...''

தேம்பித் தேம்பி அழுதாள்.

அவன் கொஞ்சம் ஓயுமட்டும் காத்திருந்தான். ''அப்புறம்?'' என்றான்.

''அவருடைய பணக்கார நண்பர் ஒருத்தருக்கு என்னை அறிமுகப் படுத்தி வச்சார். அவன் இங்கே வரும்போதெல்லாம் நான் 'சகஜமாப்' பழகணும்னு சொன்னார். மறுத்தேன். எதிர்த்தேன். அடிச்சார்...

''பல நாள் பட்டினி கெடந்தேன். திடீர்னு அவருக்கு என் மேலே இரக்கம் வந்துடுச்சி! தன் தவறுதலுக்காக வருந்தினார். நான் களைப்படைஞ்சிட்டேன்னு கவலைப்பட்டார். எனக்கும் ஊசி போட்டார். திருந்திட்டார்னு சந்தோஷப் பட்டேன். ஆனா, அவர் எனக்குப் போட்ட ஊசி...? அந்தப் பணக்காரன் என் மயக்கத்தைப் பயன்படுத்தி...

''கண் விழிச்சவுடனே நான் பதறினேன். 'வர தட்சணை இல்லாமக் கல்யாணம் பண்ணிக்கிறேன்னு சொன்னேனே, வாழ்நாள் பூரா உன்னை வச்சுக் காப்பாத்தணைக்குப் பணம் வேண்டாமா? அப்படீன்னு கேட்டான் எனக்குத் தாலி கட்டினவன்.''

வாத்தியார் தம் துக்கத்தையும் அழுகையையும் அடக்கிக் கொள்வதற்காக இரு கைகளாலும் வாயை மூடிக் கொண்டார். கண்கள் நீரைப் பொழிந்தன.

இளைஞன் கண்ணாடியை எடுத்து விட்டுக் கண்களைத் துடைத்துக் கொண்டே, ''கேட்கவே நாராசமா இருக்குது. கட்டின மனைவியை...'' என்றான்.

''அவருக்கு என்னைப் போல நாலு மனைவிகள்'' என்றாள் கோமளம்.

''அந்த டாக்டருக்கா?'' என்றான் இளைஞன்.

''அவர் டாக்டரே அல்ல'' என்றாள்.

தந்தையின் கால்கள் தள்ளாடின. தரையில் உட்கார்ந்தார்.

''ஒரு நாள் போலீஸ்காரங்க வந்து அவரைக் கைது பண்ணிக்கிட்டுப் போயிட்டாங்க. என்னுடைய பெற்றோருக்குத் தகவல் கொடுத்துடாதீங்கன்னு போலீஸ்காரங்க கால்லே விழுந்து கெஞ்சினேன்.''

''நீ சொந்த ஊருக்கே போயிருக்கலாமே'' என்றான் இளைஞன்.

''எந்த முகத்தோட ஊருக்குப் போவேன்? யார் முகத்திலே விழிப்பேன்?

''பெத்தவங்களுடைய தலைச் சுமையைக் குறைக்கறதாக நெனைச்சி என் தலையில் வெடிகுண்டைப் போட்டுக்கிட்டேன்.''

நெஞ்சைப் பிடித்துக் கொண்டு கதறினாள்.

அவனும் அவளுடைய துயரத்தில் பங்கெடுத்துக் கொள்பவன் போல் சிறிது நேரம்

யாத்திரை போகும்போது!

புரட்சிக் கவிஞர் பாரதி தாசன் யாத்திரை போகும் போது எடுத்துக் கொள்ள வேண்டிய பொருள்கள் என்ன என்ன என்பதைப் பற்றி ஒரு பாடலில் கூறியுள்ளார். அந்தப் பாடல் இதோ:

'சீப்புக் கண்ணாடி ஆடை நறுக்கத்தி
கூந்தல் எண்ணெய்
சோப்பு பாட்டரி விளக்குத் தூக்குக்
கூஜா தாள் பென்சில்
தீப்பெட்டி கவிகை சால்வை செருப்புக்
கோவணம் படுக்கை
காப்பிட்ட பெட்டி ரூபாய் கைக்கொள்க
யாத்திரைக்கே.'

—பாரதிதாசன் கவிதைகள்' முதல் தொகுதியிலிருந்து. —இரா. மோகன்.



மௌனமாக இருந்தான். பிறகு ''இந்தா!'' என்று ஒரு நூறு ரூபாய் நோட்டை நீட்டி ஞன்.

வாங்கிக் கொண்டாள். கண்ணீரைத் துடைத்துக் கொண்டு தலை நிமிர்ந்தாள்.

இளைஞன் போய்க் கொண்டிருந்தான்.

''நில்லுங்க! பணம் கொடுத்துட்டு...'' என்று எழுந்தாள் கோமளம்.

''எனக்குத் தேவையானது கிடைத்து விட்டது'' என்றான்.

''என்ன?'' என்றாள்.

''உன்னுடைய கதை.''

''ஐயையோ!'' என்று பதறினாள்.

''பயப்படாதே. உன்னுடைய பேரைச் சொல்ல மாட்டேன்'' என்றான்.

''நீங்க யாரு?'' என்றாள்.

இளைஞன் அனுதாபம் நிறைந்த குரலில் ஆரம்பித்தான். ''நான் ஓர் எழுத்தாளன். பெண்ணினத்தை எச்சரிக்கை செய்யறதுக் காகத்தான் உன்னைப் போல் விபத்துக்குள் ளான பெண்களுடைய கதைகளை யெல்லாம் உலகத்துக்குச் சொல்லறேன். சின்னப் பெண்கள் நடந்து போக வேண்டிய பாதை எவ்வளவு ஆபத்து நிரம்பியதுன்னு அவுங்க ளுக்குச் சொல்ல வேண்டாமா?

''வாழ்க்கைப் பாதை நெரிசலானது. நாகரீகத்தின் பெயராலே எங்கெங்கே எந்த மாதிரித் திமிங்கிலங்கள் வாயைத் திறந்து கிட்டிருக்கு. வரதட்சணை மாதிரி உள்ள சமூகக் கொடுமைகள் எவ்வளவு பேரை எங் கெங்கே கொண்டு போய்த் தள்ளுது. அந்த ஆபத்திலேயிருந்து எப்படித் தப்பிச்சிக்கிறது? இதையெல்லாம் நம்ம பெண்களுக்குச் சொல் லிக்கொடுக்கணுமின்னு நெனைக்கிறேன். நான் ஒருத்தன் நெனைச்சி என்ன ஆவப் போவுதுங் கிறியா? என்னுடைய எழுத்தைப் படிச்சி, யாராவது இரண்டு பெண்கள் கல்யாணத் துக்கு முன்னாலே காதல் கீதல்னு கெட்டுப் போவாம இருந்தா அதுவே போதும்.

''சிலராவது துரோகிகள் வலையிலே விழாம எச்சரிக்கையா இருந்தா அதுவே பெரிய வெற்றி'' என்றான்.

''உங்க பேரு?'' மரியாதையுடன் கேட் டாள் கோமளம்.

''நான்தான் எழுத்தாளர் கார்முகில் வண்ணன்.''

திடுக்கிட்டாள்.

''நீங்கதானே மணியக்காரருக்குக் கடுதாசி குடுத்து அனுப்பியது?'' என்றாள்.

''இல்லேம்மா, இல்லே. அந்தப் போலி டாக்டர் என்னுடைய பேரைப் போர்ஜரி பண்ணிட்டான் அப்புறம்தான் கேள்விப் பட்டேன்'' என்றான் 'கார்முகில் வண்ணன்'.

வாத்தியாரின் இடது முதுகில் சம்மட்டி யால் அடித்தது போலிருந்தது.

எழுந்தார். தள்ளாடியவாறு இறங்கினார்.

'கார்முகில் வண்ணன்' அவரைக் கடந்து வேகமாகப் போய்க் கொண்டிருந்தான்.



ரே ரோடு, சாண்டர்ஸ்ட் ரோடு, வடலா ரோடு, சார்னி ரோடு, கிராண்ட் ரோடு, எல் பின்ஸ்டன்' ரோடு, மாதுங்கா ரோடு, கார் ரோடு, மீரா ரோடு, வசாய் ரோடு, கர்ரி ரோடு, டாக்யார்டு ரோடு: இவையெல் லாம் பம்பாயில் இருக்கும் சாலைகளின் பெயர்கள் அல்ல. பம்பாய் நகரத்தில் உள்ள சுற்றுப்புற ரயில்வே ஸ்டேஷன்களின் பெயர்கள்தாம் இவை! —சுதாகரன்.

கோமளத்தின் கையிலிருந்த நூறு ரூபாய் நோட்டு அவனைப் பார்த்துச் சிரித்தது. அவன் கதறினான்.

பட்டணம் வந்த பச்சைக் கிளி சிவப்பாகி விட்டது.

வாத்தியார் ஊருக்கு வந்தார்.

சீதையும், பெண்களும் அவரைச் சூழ்ந்து கோமளத்தைப் பற்றி விசாரித்தார்கள்.

வாத்தியார் துணிப் பையைத் திறந்து கொண்டே ''கோமளம் சந்தோஷமா இருக் குது. இதோ, எல்லோருக்கும் என்னென்ன வாங்கிக் குடுத்திருக்குது பார்த்தீங்களா? அம்மாவுக்குப் புடவை. இது உனக்கு. இதோ, பாத்தியா எனக்குக் கோடி வேட்டி —'' என்று பிரித்துக் காட்டினார்.

''ஏதோ நல்ல இடத்திலே வாழ்க்கைப் பட்டாளே, அது வரையிலே சந்தோஷம்'' என்றாள் சீதை.

வாத்தியார் 'அப்பாடா!' என்று சாய்ந்தார்.

''இருங்க, காபி கொண்டு வரேன்'' என்று உள்ளே ஓடினாள் சீதை.

டாக்டருடைய வருமானத்தைப் பற்றியும் அக்காளும் அவரும் குடும்பம் நடத்தும் விதம் பற்றியும் நான்கு பெண்களும் மாறிக் மாறிக் கேட்டார்கள்.

''அவன் ஒரு மேதை...'' என்றார் கருக்க மாக.

சீதை காப்பி டம்ளரை நீட்டினாள். அதை வாங்கிக் கொண்டே மனைவியைப் பார்த்தார்.

'இந்த முப்பது வருட தாம்பத்திய வாழ்க் கையிலே முதல் தடவையா உங்கிட்டே பொய் சொல்லிட்டேன் சீதை. என்னை மன்னிக்க மாட்டியா?' என்பது போலிருந்தது அவ ருடைய பார்வை.

''அப்பா! எங்கப்பா கையிலிருந்த மோதி ரத்தைக் காணோம்?'' என்றாள் இரண்டாவது பெண்.

''பட்டணத்திலே பறி குடுத்துட்டேம்மா பறி குடுத்துட்டேன்!'' என்றார் வாத்தியார்.




கல்கி உல்லாசப் பயணச் சிறப்பிதழுக்காகத் தமிழக சுற்றுலாத் துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்களைப் பேட்டி கண்ட போது :

,அமெரிக்காவில் உள்ளதுபோன்று தமிழகத்தில் தனியார் துறையில் எவரேனும் 'டிஸ்னிலேண்ட்' அமைக்க முன் வந்தால், தமிழக அரசு எல்லா வித உதவிகளையும் அவர்களுக்கு அளிக்கும்' என்று சமீபத்தில் தாங்கள் ஒரு விழாவில் குறிப்பிட்டீர்கள். அம்மாதிரி தமிழகத்தில் 'டிஸ்னி லேண்ட்' அமைப்பதானால் அது சம்பந்தமாக அரசு எந்த விதத்தில் உதவும்? டிஸ்னிலேண்ட் அமைக்கும் முறையில் தங்கள் மனத்தில் ஏதேனும் திட்டங்கள் உள்ளனவா? 'டிஸ்னி லேண்ட்' அமைக்கப் படுமானால் அதனைச் சரிவர பராமரிக்கத் தமிழகத்தில் இயலும் என்று நம்புகிறீர்களா?

தமிழகம் பொலிகிறது, சுற்றுலா சிறக்கிறது!


எங்கே போகிறோம்?



'டிஸ்னிலேண்ட்' அமெரிக்காவின் மேற்குக் கரைப் பகுதியில் லாஸ் ஏஞ்ஜெல்ஸ் நகருக்கு அருகில் 1955—இல் வால்ட் டிஸ்னி என்னும் உலகப் புகழ் பெற்ற கார்ட்டூன் திரைப்படத் தயாரிப்பாளரால் தோற்றுவிக்கப்பட்டது. 200 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இந்த விந்தைப் பூமிக்குப் பல கோடி டாலர் செலவாயிற்று. சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் உற்சாகமூட்டும் வகையில் அமைந்துள்ள இந்த மாய பூமி உலகத்தின் எல்லாப் பகுதி மக்களையும் ஈர்க்கிறது. ஒருவருக்கு நுழைவுக் கட்டணம் ரூ. 28 (3.5 டாலர்) செலுத்த வேண்டும். எனவே சொந்த வருவாயில் நடத்தப்படுகிறது.

⌘ வேடந்தாங்கல்
⌘ பிச்சாவரம் லேக்
⌘ கடற்கரையில்
⌘ உதகை








தமிழகத்தில் சென்னை நகருக்கு அருகில் கடலோரத்தில் 'டிஸ்னிலேண்ட்' போன்றதொரு 'விந்தை பூமி' அமைக்கச் சூழ்நிலை நன்ருக உள்ளது. ஆனல் இதற்குச் செலவு மிகவும் அதிகமாகும். வி. ஜி. பி. நிறுவனத்தார் அவ்வாறு அமைக்க விரும்புவதாகவும், முயற்சி எடுப்பதாகவும் தெரிவித்தார்கள். அவ்வாறு முயற்சி செய்தால் அதனுடைய சாத்தியக் கூறுகளைப் பரிசீலித்துத்தமிழக அரசு தேவையான. இயன்ற உதவிகளைச் செய்யும். மத்திய அரசின் ஒத்துழைப்பும் தேவைப் படும். தமிழக அரசே இத்திட்டத்தை இப்பொழுது நிறைவேற்ற இயலாது. அதற்கான நிதி ஆதாரங்களைத் திரட்ட இயலாது. ''டிஸ்னி லேண்ட்' போன்று அமைக்கப் படுவதால் அதை நல்ல முறையில் நடத்த முடியும். தமிழ் நாட்டிலிருந்து மட்டுமல்ல, இந்தியாவின் மற்ற பகுதிகளிலிருந்து நுழைவுக் கட்டணம் செலுத்திப் பார்க்க வருவார்கள்.

தமிழகத்தின் கலை, கலாச்சாரம், பொருளாதார வளர்ச்சி போன்று பல அம்சங்களையும் சிறப்பாக வெளிப்படுத்தும் வகையில் ஆண்டு முழுவதும் இருக்கும்படியான ஒரு நிரந்தர பொருட்காட்சியைத் தமிழக அரசு நடத்தி அந்நிய நாட்டுப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் வகையில் அதனைப் பராமரிப்பது என்கிற திட்டம் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

தமிழகத்தின் பழம் பெருமையையும், வரலாற்றுச் சிறப்பையும் கலை, பண்பாடு, பொருளாதார வளர்ச்சியையும் எடுத்துக் காட்டும் வகையில் ஆண்டு முழுவதும் பார்க்கும் வகையில் ஒரு நிரந்தரப் பொருட்காட்சியை அமைக்க வேண்டுமென்ற கருத்து அரசுக்கு உள்ளது. இதற்கு முன்ளேடியாகச் சென்னையில் பொங்கல் விழாவின் போது இரண்டு மாதங்களுக்குப் பொருட்காட்சி நடத்தப் படுகிறது. அயல் நாட்டுப் பயணிகள் இந்தியாவுக்கும், தமிழகத்துக்கும் அதிகம் வரும் நேரம் இதுதான். அப்படி வருகின்ற சுற்றுலாப் பயணிகள் பொருட்காட்சிக்கு வருகை தருகிருர்கள். அவர்கள் அந்த நேரத்தில் தகுந்த மரியாதையுடன் வரவேற்கப் படுகிருர்கள். மற்றும் மதுரை சித்திரை



✖ ஹோகனகேல்
✖ ராணிப்பேட்டை மோட்டல்
✖ மாமல்லபுரம்
✖ பூம்புகார்

சுற்றுலாப் பொருட்காட்சி, ஒன்றரை மாதத்துக்கு நடத்தப் படுவதோடு, சேலம், கோவை போன்ற மாவட்டத் தலைநகரங்களிலும் பொருட்காட்சி நடத்தப்படுகின்றன. ஆண்டு முழுவதும் தமிழகத்தின் தலை நகரில் பொருட்காட்சி நடத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் ஆரம்ப நிலையில் உள்ளது.

> ஐந்து நட்சத்திர ஓட்டல்களில் தங்குவது என்பது பொருளாதார நிலையில் மிகவும் வசதி படைத்தவர்களால் மட்டுமே முடியும். மேனாடுகளிலிருந்து வரும் பெரும்பாலான பயணிகள் மத்தியதர வகுப்பைச் சார்ந்தவர்களாக உள்ளனர். இவ்வர்க்கத்தினரை உபசரிக்கும் அளவுக்குப் போதிய ஓட்டல்கள் தமிழகத்தில் இல்லை என்று நிச்சயமாகக் கூறிவிடலாம். இக்குறையைப் போக்க அரசு ஏதேனும் திட்டங்கள் வைத்துள்ளதா?

சென்னை நகரில் உள்ள, மூன்று, நான்கு, 'ஐந்து நட்சத்திர ஹோட்டல்களைத் தவிர மூன்று நட்சத்திர ஹோட்டல்கள் பல நடத்தப்படுகின்றன. சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோவை, சேலம், உதகமண்டலம் ஆகிய நகரங்களில் மூன்று நட்சத்திர ஹோட்டல்களைத் தனியார் பலர் நடத்தி வருகிறார்கள். இங்கு வாடகை, இதே வசதிகள் படைத்த மற்றெந்த நாட்டு ஹோட்டல்களையும் விடக் குறைவாகவே உள்ளது.

மாமல்லபுரத்தில் உள்ள கடற்கரைச் சுற்றுலா விடுதிகளிலும் குறைந்த வாடகையே வசூலிக்கப்படுகிறது.

மேலும், தமிழக அரசுச் சார்பு நிறுவனமாகிய தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திருச்சி, மதுரை, சிதம்பரம், தஞ்சை, திருச்செந்தூர், இராமேசுவரம், கன்னியாகுமரி, கோடைக்கானல், ஏர்க்காடு, ஹோகனேகல், உதகமண்டலம் ஆகிய இடங்களில் நவீன வசதிகளுடன் விடுதிகள் நடத்தி வருகின்றது. சென்ற ஆண்டு இராணிப் பேட்டையில் பெருவழிச்சாலை விடுதியொன்று தொடங்கி நடத்தப்பட்டு வருகின்றது. இந்த எல்லா விடுதிகளிலும் அயல் நாட்டவர் வசதிக்கேற்ப எல்லா வசதிகளும் மூன்று நட்சத்திர ஹோட்டல்களில் உள்ளபடி அமைந்துள்ளன. வாடகை மிகமிகக் குறைவு. இவ்விடுதிகளில் அயல் நாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் தங்குகிறார்கள். இதுவரை அயல் நாட்டு சுற்றுலாப் பயணிகள் யாரும் தங்குமிடம் கிடைக்கவில்லையென்றோ, வாடகை அதிகமாக உள்ளதென்றோ குறைப் பட்டுக் கொள்ளவில்லை.

> மேனாட்டு உல்லாசப் பயணிகளால் மத்திய அரசுக்கு நிறைய அன்னியச்செலாவணி கிடைக்கிறது. இவ்வருமானத்திற்குத் தமிழகமும் உதவி புரிகிறது. இவ்வாறு மத்திய அரசு சம்பாதிக்கும் அன்னியச் செலாவணியில் தமிழகத்துக்கும் ஒரு பங்கு தரப்படுகிறதா? இல்லாவிடின் தமிழக அரசு, மத்திய அரசிடம் முயன்று இதனைப் பெற்றுத் தனது சுற்றுலாத் துறையை வளப்படுத்திக் கொள்ளலாமே!

சுற்றுலா மூலம் அந்நியச் செலாவணி கிடைப்பது உண்மைதான். ஆனால் அது ஒவ்வொரு துறைக்கும் தனித் தனியாகவென்று ஒதுக்கப் படுவதுமில்லை, மாநிலங்களுக்குப் பங்கு கொடுப்பதுமில்லை.

தமிழகத்தைப் பொறுத்த மட்டில் விளம்பரங்கள் கொடுக்கத்தான் அந்நியச் செலாவணி தேவைப்படுகிறது. வெளிநாட்டுச் சுற்றுலா இதழ்களில் விளம்பரம் கொடுக்க அந்நியச் செலாவணி தேவைப்படும் போது மத்திய அரசு உடனே கொடுத்து விடுகிறது.

குறிப்பாக அந்நியச் செலாவணியைப் பங்காகப் பெறுவதற்கான தேவையோ, அவசியமோ இல்லை.

> தமிழகத்தில் மதுவிலக்கு அமுலில் இருப்பதால் மேனாட்டுப் பயணிகள் இங்கு வருவதன் எண்ணிக்கை மற்றைய மாநிலங்களைவிடக் குறைவாக உள்ளதா?

தமிழகத்துக்கு வர வேண்டிய அளவுக்கு மேல்நாட்டுப் பயணிகள் வந்து கொண்டிருக்கிறார்கள். மதுவிலக்குக் கொள்கைக்கும், இதற்கும் சம்பந்தமே இல்லை. சென்னையில் உள்ள எல்லாப் பெரிய ஹோட்டல்களிலும் இடம்போதாத அளவுக்கு மேல்நாட்டுப் பயணிகள் இவ்வாண்டு வந்து தங்கியுள்ளனர். காரணம் அவர்களுக்கு எந்த விதத் தொல்லையும் ஏற்படாதவாறு 'பர்மிட்டுகள்' வழங்கப்படுகின்றன. தமிழகத்தில் எத்தனை நாட்கள் தங்கப் போகிறார்கள் என்று அறிந்து அதற்கேற்ப 'பர்மிட்டுகள்' வழங்கப்படுகின்றன.

விமான நிலையத்தில் மது அனுமதிச் சீட்டுகள் பெற்றுக் கொள்ளாதவர்கள் மத்திய சுற்றுலாத் துறை அலுவலகத்திலும் சென்னை வருவாய்த் துறை அலுவலகத்திலும் இவைகளைப் பெற்றுக் கொள்ளலாம். மாவட்ட ஆட்சித் தலைவர்களும், சுற்றுலா அலுவலர்களும் இந்த அனுமதியை வழங்குவார்கள்.

கடந்த நான்கு ஆண்டுகளாகத் தமிழ் நாட்டுக்கு வரும் வெளிநாட்டுப் பயணிகளின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டு வருகிறது. இந்தியாவுக்கு வரும் வெளிநாட்டுப் பயணிகளில் சராசரியாக முப்பது சதவீதம் பேர் தமிழ் நாட்டுக்கு வருகிறார்கள். 1975-ல் தமிழ்நாட்டுக்கு வந்த வெளிநாட்டுப் பயணிகளின் எண்ணிக்கை ஒரு லட்சத்து நாற்பதாயிரம். இதுவே 1978-ல் இரண்டேகால் இலட்சமாக அதிகரித்திருக்கிறது. இதிலிருந்து வெளிநாட்டுப் பயணிகள் தமிழகத்துக்கு வருவதற்கும்... மதுவிலக்குச் சட்டத்துக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை: இந்தச்

'சஞ்சய் காந்தி 2 ரூபாயாக மாற்றிய தாஜ் மஹாலின் நுழைவுக் கட்டணத்தை ஜனதா அரசினர் திரும்பவும் பழைய படியே 50 பைசாவாக மாற்றி விட்டார்கள்.

—மன்னை சம்பத்.



சட்டத்தால் பயணிகள் சிறிதளவும் பாதிக்கப் படுவதில்லை என்பது தெளிவாகும்.

> மெரீனா கடற்கரை உலகத்திலேயே இரண்டாவது சிறப்பானது என்று பெயர் பெற்றது. தற்போது மெரீனா கடற்கரையில் சிலைகளைத் தவிர வேறு எந்த விதமான அழகு அம்சமும் இல்லையே? மெரீனாக் கடற்கரையைச் சிறப்பாக அழகு படுத்தி மேனாட்டு உல்லாசப் பயணிகளை ஈர்க்கும் விதமாக அரசு ஏன் மாற்றக்கூடாது?

மெரீனா கடற்கரை உலகில் உள்ள கடற்கரைகளில் இரண்டாவது எனக் கருதப்படுகிறது. இந்தியாவிலேயே பெரிய கடற்கரையும் இதுதான். ஆனால் இங்கு சிலைகளைத் தவிர வேறு ஒன்றும் இல்லையென்ற கேள்வியே பொருளற்றது. ஒருவேளை நாள்தோறும் நீங்கள் பார்த்துக் கொண்டேயிருப்பதால் அதன் அழகையும் வளர்ந்து வரும் சிறப்பையும் உணரவில்லையெனக் கருதுகிறேன். பார்த்துப் பார்த்துப் பழகிய கண்களுக்கு இமயமலை கூட உயரம் குறைந்துதான் தெரியும். இக்கடற்கரை நகர மக்களின் பொழுது போக்குக்குப் பெரிதும் பயன்படுகிறது. சுற்றுலா வரும் வெளிநாட்டுப் பயணிகளின் கருத்தைக் கவரும் இந்த இடத்தைப் பேணிக் காப்பதில் அரசு தனிக் கவனம் செலுத்தி வருவதால், திலகர் கட்டத்தில் இருந்த படகு கட்டும் இடத்தை ராயபுரம் பகுதிக்கு மாற்றி 'மெரீனா' கடற்கரை நெடுகிலும் உள்ள மணற் பரப்பை ஒட்டிப் புல் தரைகளும், பூங்காக்களும் அமைத்து மேலும் பொலிவு படுத்தியிருக்கிறது.

பேரறிஞர் அண்ணா தலைமையில் நடந்த தமிழக அரசு, உலகத் தமிழ் மாநாட்டை மிகப் பெரிய அளவில் கோலாகலமாக நடத்தியது. அம்மாநாட்டை ஒட்டி மெரீனா கடற்கரை அழகு படுத்தப்பட்டுச் செயற்கரிய செய்தோருக்கு, சிலைகள் வைக்கப்பட்டன. தமிழ்ப் பெரியோர்களும், என்றுமுள செந்தமிழை இயம்பி இசை கொண்ட மேலை நாட்டவரும் இடம் பெற்றனர். இன்று பேரறிஞர் அண்ணா துயில் கொள்ளும் சதுக்கம் மெரீனாவில் சுற்றுலாப் பயணிகளைப் பெரிதும் ஈர்க்கும் யாத்திரைத் தலமாக விளங்கி வருகின்றது.

எனினும், மாமல்லபுரம் கடற்கரையைப் போல வெளிநாட்டுப் பயணிகள் பல நாட்கள் தங்கி மகிழ மெரீனா கடற்கரை ஏற்றதல்ல. ஏனெனில் மெரீனா கடற்கரை நகரை ஒட்டியுள்ளதாலும், மக்கள் கூட்டம் அதிகம் உள்ள பகுதியாதலாலும் வெளிநாட்டுப் பயணிகளுக்கேற்ற வசதிகளை இந்தக் கடற்கரையில் செய்ய இயலாது.

> 'வள்ளுவர் கோட்டம்' தற்போது ஒரு சிறப்பான உல்லாசப் பயணிகளை ஈர்க்கும் இடமாகச் சிறப்புற்று வருகிறது. வள்ளுவர் கோட்டத்தை ஒட்டிய இடத்தில் கழிவிடைப் பொருள்களும் அகத்தங்களும் மலை போல் குவிக்கப்பட்டு வள்ளுவர் கோட்டத்தின் சிறப்பைப் பாதிக்கின்றனவே. இவ்விஷயம் ஏன் அரசின் பார்வையில் படவில்லை?

'வள்ளுவர் கோட்டம்' கட்டப்பட்டுள்ள இடம் சமீப காலம் வரை நுங்கம்பாக்கம் ஏரியாக இருந்தது. அங்கிருந்த பெரும்பள்ளம் தூர்க்கப்பட்டு வள்ளுவர் கோட்டம் கட்டப் பட்டது. வள்ளுவர் கோட்டத்தை ஒட்டியது போல் இப்பொழுதும் பெரும் பள்ளம் உள்ளது. இதை நிரப்பிச் சமமாக்கினால்தான் அதை அழகு படுத்த முடியும். அதனால்தான் அந்தப் பள்ளங்களை நிரப்பி வருகிறார்கள். விரைவில் சமப்படுத்தி நல்லதொரு பூங்கா அமைக்கவும், வள்ளுவர் கோட்டத்தைச் சுற்றிலும் அழகிய சூழ்நிலைகளை உருவாக்கவும் திட்டம் உள்ளது. விரைவில் நீங்களெல்லாம் மகிழத்தக்க வகையில் அந்த இடம் புதுப் பொலிவுடன் விளங்கும்.

> மேனாட்டிலிருந்து வரும் உல்லாசப் பயணிகளுக்குப் போதுமான போக்குவரத்து வசதி இல்லை என்றதோர் குறை கூறப்படுகிறது. இதற்குத் தங்கள் கருத்து என்ன?

தமிழகத்தைப் பொறுத்தவரை இக்கூற்றை ஏற்க இயலாது. எல்லா சுற்றுலா இடங்களும் நல்ல சாலைகளால் இணைக்கப்பட்டுள்ளன. எல்லா இடங்களுக்கும் விரைவுப் பேருந்துகள் தினமும் செல்கின்றன. இது தவிர தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சொகுசுப் பேருந்துகளில் தமிழகம் வரும் சுற்றுலாப் பயணிகள் எளிதில் எல்லா இடங்களையும் சென்று காணப் பல வகையான சுற்றுலாக்களுக்கு ஏற்பாடு செய்து வருகிறது. தனியார் துறையிலும் பல சொகுசுப் பேருந்துகள், ''டூரிஸ்ட்



டில்லி 'பதேபூர் சிக்ரி'யில் நானும் எனது நண்பரும் சுற்றிக் கொண்டிருந்தோம். இரண்டு சிறுவர்கள் எங்களையே சுற்றிச் சுற்றி, வந்து தமிழில் வற்புறுத்தினார்கள்.

''சார்... சார்... ஒரு போட்டோ எடுத்துக் கொள்ளுங்கள் சார்.''

''எவ்வளவு ரூபாய்?'' என்றார் எனது நண்பர்.

ஐந்து ரூபாயிலிருந்து பேரம் பேசி அரை ரூபாய்க்குச் சம்மதித்தார்கள்.

''போட்டோவை எப்போ தருவே?''

''உங்க வீட்டு அட்ரஸுக்கே அனுப்பிடுவோம் சார் - ஒரு வாரத்தில்.''

பளாரென்று அவனைப் பிடரியில் அறைந்தார் நண்பர்.

''திருட்டு ராஸ்கல்! 50 பைசாவுக்கு போட்டோவும் எடுத்து, தபாலிலுமா அனுப்பறே...'' என்றபடியே அவன் தோளில் தொங்கிய காமராவைப் பிடுங்கித் திறந்தார்.

உள்ளே பிலிமே இல்லை.!

இம்மாதிரிப் பேர்வழிகள் அக்பரின் கல்லறையிலும் தாஜ் மஹால் வாசலிலும் கூட அலைகிறார்கள். —மன்னை சம்பத்.

★ இந்த இதழ் மேலட்டை வண்ணப் படங்களையும் உள்ளே இடம்பெற்றுள்ள பல புகைப் படங்களையும் தந்துதவிய மத்திய அரசின், மாநில அரசின் சுற்றுலாத் துறையினருக்கு நன்றி.

கார்கள்'' முக்கிய நகரங்களில் இருக்கின்றன. தேவை ஏற்பட்டால் இவற்றின் எண்ணிக்கையை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்கும். இரயில் பாதைகள் மூலமும் எல்லா முக்கிய இடங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

விமானப் போக்குவரத்தைப் பொறுத்த வரை தமிழகத்தில் சென்னை, திருச்சி, மதுரை, கோவை ஆகிய நகர்களில் விமானத் தளங்கள் இருந்தாலும் போக்குவரத்து இன்னும் விரிவாக்கம் பெறலாம் என்பதே பொதுவான கருத்து. முக்கியமாக அயல் நாட்டு விமானங்கள் போதுமான அளவில் சென்னை விமான நிலையம் வழியாகச் செல்ல அனுமதிக்கப்படவில்லை. இக்குறைகளை இந்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி வருகிறோம். இன்னும் தக்க பதில் கிடைக்கவில்லை. இது பல வருடங்களாக உள்ள ஒரு முக்கியமான குறையாகும். இதனாலேயே தென்னகம் வரும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. தென்னகம் ஒதுக்கப்படுகிறது என்ற எண்ணமும் இதனாலேயே ஏற்பட்டது எனலாம்.

இவை தவிர சிறிய விமானங்களை உபயோகித்துக் குறுகிய தூரங்களில் உள்ள நகரங்களை இணைக்கும் கருத்தும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

தற்போதுள்ள மிருகக் காட்சி சாலையை வண்டலூருக்கு மாற்றப் போவதாகச் செய்திகள் வந்தன. இன்றுவரை செயலளவில் நிறைவேற்றப் படவில்லை. மிருகக் காட்சி சாலை பராமரிப்பை அரசே ஏற்றுத் திருவனந்தபுரம், ஹைதராபாத், போன்ற இடங்களில் உள்ளது போல் சிறந்த முறையில் ஏன் அமைக்கக் கூடாது?

மிருகக் காட்சி சாலையை வண்டலூருக்கு மாற்றும் திட்டம் வெறும் செய்தி அல்ல. இது முடிவெடுக்கப்பட்ட திட்டம். சென்டிரல் இரயில் நிலையம் விரிவு படுத்தப் படுவதால் மிருகக் காட்சி சாலை வண்டலூருக்கு மாற்றப் படுகிறது. 300 ஏக்கர் நிலப்பரப்பில் இயற்கை எழில் சூழ்ந்த கானகத்தில் இந்த விலங்கினக் காட்சிச் சாலை தொடங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மூன்று கோடி ரூபாய் முழுத் திட்டத்துக்கு ஒதுக்கப்பட்டு முதல் கட்டமாக ரூ. 105 இலட்சம் செலவிடத் திட்டமிட்டுள்ளது. இதற்கான வேலைகள் வனத்துறை மூலம் விரைவாக நடந்து வருகின்றன.

ஹைதராபாத், திருவனந்தபுரம் வன விலங்கினக் காட்சி சாலைகளை விடச் சிறப்பாக அமைப்பதோடு, சிங்கங்கள் சரணாலயம் ஒன்றும் சேர்ந்தாற்போல் அமைக்க யோசிக்கப் படுகின்றது.

மத்திய சுற்றுலாத் துறை அமைச்சர் இதற்காக நிதி உதவி செய்வதாகவும் உறுதி அளித்துள்ளார்.

உல்லாசப் பயணிகளை மேலும் ஈர்க்கும் விதத்தில் தமிழக சுற்றுலாத் துறை எதிர்காலத் திட்டங்கள் எவையேனும் வைத்துள்ளதா?

தமிழகத்தில் எல்லா வகையான சுற்றுலாச் சிறப்புகளும் உள்ளன. சுற்றுலா வளர்ச்சி ஒரு நாட்டின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கும் பண்பாட்டு வளத்திற்கும் தோழமை உணர்விற்கும் உதவும் ஒரு சாதனமாக அமைந்து உலக அளவில் பெரிய தொழிலாக வளர்ந்துள்ளதை யாவரும் அறிவர். எனவே தமிழகமும் சுற்றுலா வளர்ச்சியில் தனிக் கவனம் செலுத்தி வருகிறது.

சுற்றுலா வளர்ச்சிக்கு முக்கிய இரு தேவைகள் தங்குமிட வசதியும் போக்குவரத்து வசதியுமாகும். சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பேணிக் காப்பதும் தமிழகத்தின் சுற்றுலாச் சிறப்புக்களை வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பலரும் நன்கு அறியும் வகையில் விளம்பரம் செய்தலும் கவனிக்கப்பட வேண்டும்.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு தமிழகத்தில் சுற்றுலா வளர்ச்சிக்காக ஒருங்கிணைந்த திட்டம் ஒன்று தீட்டப்பட்டுள்ளது. ரூ. 4 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டுள்ள இத்திட்டம் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் வெளிநாடுகளில் தமிழகத்தின் சுற்றுலாச் சிறப்புகளைச் சிறந்த முறையில் விளம்பரம் செய்யவும், சுற்றுலா இடங்களை அவற்றின் முக்கியத்துவத்துக்கு ஏற்றாற்போல் பாகுபாடு செய்து அதன் அடிப்படையில் மேம்பாடு செய்யவும், சாலை மற்றும் போக்குவரத்து வசதிகளை மேலும் பெருக்கவும்; எல்லாச் சுற்றுலா இடங்களிலும் தேவையான தங்குமிட வசதிகளைச் செய்து கொடுக்கவும் இவ்வரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

பேட்டி: **நாயகன்**

பாட்னா போன்ற நகரங்களையெல்லாம் பார்த்து விட்டு ஜம்ஷெட்பூர் செல்ல விருந்தோம். ''நாளைக்கு ஜம்ஷெட்பூருக்குக் கிளம்புகிறோம்'' என்றார் மாமா எங்களிடம். உடனே அவருடைய ஏழு வயதுச் சிறுமி ''வேண்டாம்பா! நம்ம பெட்டியையெல்லாம் அங்கே திருடிக்கொள்வார்கள்!'' என்றாள்.

புரியாமல் விழித்தோம், நாங்கள். பிறகு தான் புரிந்தது. அவள் Steel City என்பதை Steal City என்று நினைத்துக்கொண்டிருக்கிறாள்.

இப்போது கூட என் மாமா இதைச் சொல்லி, தம் பெண் படுசுட்டி என்று சொல்லிக் கொண்டேயிருக்கிறார்.

—மு. செல்வ பாண்டியன்.



எப்போதுமே அந்தப் பெட்டி ஒரு தலை வேதனையாகத்தான் இருந்தது ஸ்ரீதருக்கு. முக்கியமாக சியாமளா அதைச் சுட்டிக் காட்டிக் குத்தலாகப் பேசும் போதெல்லாம் ஸ்ரீதருக்கு எரிச்சல் எரிச்சலாக வரும். இப்படி ஒரு பெட்டியைத் தலையில் கட்டி விட்டுப் போய் விட்டானே அந்த ராம்கோபால்! ஓரிரண்டு மாதங்களில் வந்து எடுத்துக்கொண்டு போவதாகச் சொன்னான். இப்போது வருஷங்கள் இரண்டாகியும் பெட்டி நகரும் வழியாகக் காணோம். ராம்கோபாலும் அவன் மனைவியும் எத்தனையோ தடவை வந்து போயிருக்கின்றார்கள். ஒவ்வொரு தடவையும் ஸ்ரீதர் ராம்கோபாலிடம் பெட்டியைப் பற்றி நினைவு படுத்துவான்.

''பரவாயில்லே; இங்கேயே இருக்கட்டும். இன்னொரு தடவை வரும்போது எடுத்துப் போகிறேன்'' என்று கூறித் தட்டிக் கழித்து விடுவான் ராம்கோபால்.

சிறிய சூட் கேஸ்தான். ஆனாலும் நல்ல கனம். போதாக் குறைக்குக் கனமான நல்ல பூட்டு வேறு. சமயம் கிடைத்த போதெல்லாம் சியாமளா ஸ்ரீதருக்கு அந்தப் பெட்டியின் கனத்தைப் பற்றி நினைவு படுத்தத் தவறுவதில்லை.

'இந்தத் துருப் பிடிச்ச இரும்புப் பெட்டியைக் கட்டிக் காக்கும் பொறுப்பை ராம்கோபால் என் தலையில் ஏன் சுமத்த வேண்டும்?' என்று ஸ்ரீதர் மனத்துக்குள் ஆத்திரப்படுவான். 'அவன் எப்போதாவது வரட்டும் சொல்கிறேன். இதை எடுத்துக் கொண்டு போய்த்தான் ஆக வேண்டும் என்று கண்டிப்





பெட்டி

உமா சந்திரன்

பாகச் சொல்லி விடப் போகிறேன்'' என்று நினைத்துக் கொள்வான்.

ஆனால் ராம்கோபாலை நேரில் பார்க்கும்போது அவனுடைய கண்டிப்பெல்லாம் எங்கோ பறந்து விடும்.

கடைசியில் ஸ்டோர் ரூம் பரணில் அதற்கு அடைக்கலம் கிடைத்தது. தினசரி உபயோகத்தில் இல்லாத பாத்திரங்களைப் போட்டு வைத்திருந்த டெல்லி ட்ரங்கின் மேல் அதை ஏற்றி வைப்பதென்ற முடிவு இருவராலும் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அந்தப் பெட்டி ஸ்டோர் ரூம் பரணுக்கு மாறிய பிறகு தான் ஸ்ரீதர் நிம்மதியாக இருக்க முடிந்தது. அவ்வப்போது அதை நகர்த்தி வைக்க வேண்டிய தொல்லையிலிருந்து மட்டுமல்ல, சியாமளாவின் குத்தல் பேச்சிலிருந்தும் அவனுக்கு விடுதலை! ஓரிரண்டு மாதங்களில் அந்தப் பெட்டியைப் பற்றி மறந்து கூடப் போய் விட்டான்.

கோகுலாஷ்டமிக்காகச் சியாமளா பட்சணங்கள் பண்ண முனைந்தபோது அதற்கு வேண்டிய சில பாத்திரங்களை டெல்லிப் பெட்டியிலிருந்து எடுக்க வேண்டியிருந்தது. ஸ்டோர் ரூமுக்குப் போய்ப் பார்த்ததும் அங்கிருந்தே ஸ்ரீதருக்குக் குரல் கொடுத்தாள். —

''கொஞ்சம் இங்கே வாங்களேன்! உங்க சிநேகிதரோட பெட்டியைக் கீழே இறக்கினாத்தான் நான் டெல்லிப் பெட்டியைத் திறக்க முடியும்!''

ஸ்ரீதர் அவசரம் அவசரமாக வந்து அந்தப் பெட்டியை அண்ணாந்து பார்த்தான். பின்பு ஓர் உயர ஸ்டூலைக் கொண்டு வந்து பரணுக்கு நேராகப் போட்டு அதன் மேல் ஏறிய அவன் அந்தப் பெட்டியைத் தூக்க முயற்சி செய்த போது, ஸ்டூல் அவனைக் காலைவாரி விடுவது போல் கீழே சாய்ந்தது. சியாமளா பாய்ந்து அந்த ஸ்டூலைப் பிடித்துக்கொண்டிரா விட்டால் ஸ்ரீதர் பெட்டியைப் போட்டுக்கொண்டு கீழே விழுந்திருப்பான்.

''பெட்டியை மேலே ஏத்தி வைக்கறதுக்கு ரெண்டு ஆட்கள் இருந்தாங்களே, இப்ப நீங்க ஒருத்தரே இதை எப்படி இறக்கி வைக்க முடியும்?'' என்றாள் சியாமளா.

நல்லவேளையாக அப்போது பேப்பர் பையன் பணம் கேட்க வந்தான். ஸ்ரீதரின் சங்கடத்தைப் பார்த்து விட்டு அவன் தானாகவே முன்வந்து ஸ்ரீதருக்கு உதவி செய்தான். பெட்டியைக் கீழே இறக்கி வைத்த கையோடு ஸ்ரீதருக்கு இன்னொரு யோசனையும் தோன்றியது. அந்தப் பையனையே அனுப்பி ஒரு டாக்ஸி கொண்டு வரச் சொன்னான். டாக்ஸி வந்ததும் அந்தப் பையனுடைய உதவியுடன் பெட்டியை டாக்ஸியின் டிக்கியில் ஏற்றினான். மீட்டருக்கு மேல் இரண்டு ரூபாய் லக்கேஜுக்காகக் கொடுக்க வேண்டும் என்று டிரைவர் கேட்டதையும் அவன் பொருட்படுத்தவில்லை.

ராம்கோபாலின் வீடு நுங்கம்பாக்கத்தில் இருந்தது.

என்ன ஏமாற்றம்! நுங்கம் பாக்கத்தில் ராம் கோபாலின் வீடு பூட்டியிருந்தது. பக்கத்துப் பங்களாவில் விசாரித்தான். அன்று காலைதான் ராம்கோபாலும் சாந்தாவும் காரில் புதுச்சேரிக்குப் புறப்பட்டதாகத் தகவல் கிடைத்தது. நிராசையுடன் அதே டாக்ஸியில் வீடு திரும்பிய ஸ்ரீதர் டாக்ஸி சார்ஜ் முப்பது ரூபாய் கொட்டி அழுதான். அப்படியும் கூட பெட்டியை ஸ்டோர் ரூம் வரை எடுத்து வருவதற்கு அந்த டிரைவரின் உதவி கிடைக்கவில்லை. ஸ்ரீதர் தான் எப்படியோ மூச்சைப் பிடித்துக் கொண்டு அதை ஸ்டோர் ரூமுக்குத் தூக்கிச் சென்று வைக்கும்படி ஆயிற்று.

''இப்ப மறுபடியும் இந்தப் பெட்டியை எப்படிப் பரண் மேலே ஏத்தப் போறீங்க? கீழே இருந்தா போக வர என் காலைதான் இடிக்கும். இந்தத் துருப்பிடிச்ச இரும்பு காலைக் கிழிச்சதுன்னா தொலைஞ்சது. நான் டெடனஸுக்கு பலியாக வேண்டியதுதான்!'' என்று அங்கலாய்த்தாள் சியாமளா.

''கொஞ்சம் பொறுத்துக்க சியாமளா. ராம்கோபால் புதுச்சேரியிலிருந்து திரும்பி வந்ததும் முதல் காரியமா இதை எடுத்துக் கிட்டுப்போகச் சொல்லிடறேன், போதுமா!'' என்றான் ஸ்ரீதர்.

ஆனால் ஸ்ரீதர் தம்பதிகள் சற்றும் எதிர்பாராத அதிசயம் நிகழ்ந்தது. புதுச்சேரியிலிருந்து திரும்பிய கையோடு ராம்கோபால் தானாகவே ஸ்ரீதரைத் தேடி வந்து விட்டான்.

''ஸ்ரீதர், அந்தப் பெட்டி ஸேஃபாத்தானே இருக்கு? இப்பவே எடுத்துப் போறேன்!'' என்றான் அவன்.


''நானே டாக்ஸி செலவு பண்ணி அதை உன் வீட்டுக்குக் கொண்டு போயிருந்தேன்.''

''ஸாரி ஸ்ரீதர், எவ்வளவு கஷ்டம் உனக்கு! அந்த டாக்ஸி சார்ஜை வேணும்னா நானே குடுத்துடறேன்...'' என்று ராம்கோபால் கூறியதும் ஸ்ரீதர் அதற்குச் சம்மதிக்கவில்லை. ''ஸில்லி! ஒரு ஃபிரண்டுக்காக முப்பது ரூபாய் கூடச் செலவு செய்யக் கூடாதா என்ன?'' என்றான் ஜம்பமாக. எப்படியோ, பெட்டியிலிருந்து விடுதலை கிடைக்கப்போகிறதே என்ற சந்தோஷம் அவனுக்கு. ஸ்ரீதருடைய உதவியுடன் ராம்கோபால் அந்தப் பெட்டியைக் காரின் டிக்கியில் ஏற்றிக் கொண்டு அங்கிருந்து விரைந்தான்.

அரைமணி நேரம் பொறுத்து ராம்கோபாலின் கார் மறுபடியும் வாசலில் வந்து நிற்பதைக் கண்டு ஸ்ரீதருக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவனுடைய பீதியைக் கண்டு

அண்டப் புளுகன்: நான் பயணம் செய்த ரயில் நடுக்காட்டில் நின்று விட்டது. நான் இறங்கித் தள்ளித்தான் எஞ்சின் ஸ்டார்ட்டானது.

ஆகாசப் புளுகன்: நான் பயணம் செய்த பிளேன் விண்வெளியில் நின்று விட்டது. நான் இறங்கித் தள்ளிய பிறகு தான் ஸ்டார்ட்டானது. —தேவாதி ராஜன்.



ராம்கோபால் சிரித்தான். ''கவலைப்படாதே. பெட்டி சேர வேண்டிய இடத்தில் சேர்ந்துடுத்து!'' என்று கூறியவாறு உள்ளே வந்து உட்கார்ந்து கொண்ட அவன் ஸ்ரீதரின் இரு கைகளையும் தன் கைகளில் எடுத்துக் கொண்டான்.

''ஸ்ரீதர், ரெண்டு வருஷமா அந்தப் பெட்டியைக் கட்டிக் காத்தாயே, உனக்கு எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியலே!'' என்றான் ராம்கோபால்.

''ரெண்டு வருஷமா நான் தவிச்ச தவிப்பு எனக்கில்லே தெரியும்!'' என்று பெருமூச்செறிந்தான் ஸ்ரீதர்.

''நான் அளவுக்கு மீறித்தான் உன் கிட்டே உரிமை எடுத்துக்கிட்டேன். உண்மையில் அந்தப் பெட்டி என்னுடையதே இல்லே. என் அண்ணு ராஜ சேகருடையது!''

''ஆனா அந்தப் பெட்டியில் உன்னோட அபூர்வமான தொழில் நுணுக்கப் புத்தகங்கள் இருந்ததாகச் சொன்னயே!''

''உனக்கு நம்பிக்கை ஏற்படுத்தத்தான் அப்படிச் சொல்ல வேண்டியிருந்தது. உண்மையில் அந்தப் பெட்டியில் என்ன இருந்ததென்றே எனக்குத் தெரியாது. இப்பக் கூடத்தான்!''

''உன் அண்ணனைப் பத்தி நான் ஏதேதோ கேள்விப் பட்டிருக்கேனே!''

''நீ கேள்விப் பட்டது தவறில்லேதான். ராஜசேகர் ஒரு தீவிரவாதி. வன்முறையால் தான் சமூகப் புரட்சி ஏற்படமுடியும்னு நம்பறவன். நாலஞ்சு வருஷங்களா தலைமறைவாகவே இருந்து வரான். ரெண்டு வருஷத்துக்கு முன்னாலே அந்தப் பெட்டியை என்னிடம் கொண்டு வந்து ஒப்படைத்தான், ''இதைப் பத்திரமா பாதுகாத்து நான் கேட்கும் போது கொடுக்கணும். ஆனா இதை உன் கிட்டே வச்சிருந்தாப் போலீசார் உன் வீட்டைச் சோதனை போட்டு இதைக் கைப்பற்றிக் கொண்டு போனாலும் போயிடுவாங்க. அதனால் யாராவது நம்பிக்கையானவர் பொறுப்பில் இதை வச்சிருந்து நான் வந்து கேட்கும் போது என் கிட்டே சேர்த்திடு'' — அப்படின்னு சொல்லிட்டுப் போயிருந்தான். அதனால்தான் உன் பொறுப்பில் அதை விட்டு வெச்சிருந்தேன்....''

''கனமான பொறுப்புதான்! ஒவ்வொரு தடவையும் அந்தப் பெட்டியை நகர்த்தி வைக்க நான் பட்ட பாடு!..''


''அவனுடைய போராட்டம் பற்றிய பிரசாரப் புத்தகங்கள், துண்டுப் பிரசுரங்கள்... இப்படி ஏதாவதுதான் அந்தப் பெட்டியில் நிறைஞ்சிருந்ததுன்னு நினைக்கிறேன்...''

''உன் அண்ணனிடம் அந்தப் பெட்டியை ஒப்படைத்தாயிற்று, இல்லையோ?''

''ஸ்டேஷனுக்கே கொண்டு போய் அவன் கிட்டே சேர்த்திட்டேன். ஒரு மௌல்வி வேஷத்தில் செகந்திராபாத்தில் பிரயாணம் ஆனான் அவன்!''

''அப்படியா?''

அவன் புறப்பட்டுச் சென்ற பிறகு அவன் கூறிய விஷயங்களை ஸ்ரீதர் சியாமளாவிடம் எடுத்துரைத்த போது அவள் திக்பிரமை



விஜயவாடாவுக்கும் பத்து மைல் தொலைவிலுள்ள ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமி கோயிலில் ஒரு விசேஷம். இதுவும் மலையின் மேல் தான் இருக்கிறது. இந்த ஸ்வாமியின் வாயில் 'ஒரு லிட்டர் பானகம் ஊற்றினால் கரெக்டாக அரை லிட்டர் சாப்பிட்டு விட்டு, மீதி அரை லிட்டர்வெளி வருகிறது. இதைப் பிரசாதமாக எடுத்துக் கொள்கிறார்கள். ஒரு ஸ்பூன் பானகம் விட்டால், பாதி ஸ்பூன் பானகம் வெளி வருகிறது. ஒரு கால்ன் ஊற்றினாலும் அரை காலன் பானகம் வெளி வருகிறது. சரியாகப் பாதி அளவு.

—பொல்லாரம் சுந்தரி.

பிடித்தாற் போல் கேட்டுக்கொண்டிருந்தாள்.

''நல்ல காலம்! போலீஸில் மாட்டிக் கொள்ளாமல் தப்பினோம்!'' என்றாள் ஒரு பெருமூச்சுடன்.

இதற்கு மூன்றாவது நாள் காலை பேப்பரில் கட்டம் கட்டி வெளியாகியிருந்த செய்தி ஸ்ரீதரை உலுக்கியெடுத்து விட்டது.

''சியாமளா, இங்கே வாயேன்! இந்த நியூஸைப் பாரேன்!'' என்று கத்தினான்.

உள்ளிருந்து விரைந்து வந்த சியாமளா, பரபரப்புடன் பேப்பரைக் கையில் வாங்கிப் படித்தாள். —

''நான்கு வருஷமாகத் தலைமறைவாக இருந்த பயங்கரவாதி ராஜசேகரை இன்று போலீஸார் செகந்தராபாத் ஸ்டேஷனில் கைது செய்தனர். மௌல்வி வேஷத்திலிருந்த ராஜசேகர் வெடி குண்டு நிரம்பிய ஒரு பழைய டிரங்குடன் பிடிபட்டார். அந்த ட்ரங்கைத் தூக்கிச் சென்ற போர்ட்டர் அதன் கனத்தைத் தாங்க முடியாமல் அதைக் கீழே தவற விட்டதில் பெட்டியின் மூடி கழன்று கொண்டு அதில் நிரம்பியிருந்த வெடி குண்டுகள் நாலா பக்கமும் சிதறி விழுந்தன. தப்பி ஓட முயற்சி செய்த 'மௌல்வி'யைப் போலீஸார் வளைத்துப் பிடித்ததும் தான் அவர் பயங்கரவாதி ராஜசேகர் என்ற உண்மை வெளியாயிற்று. பெட்டி கீழே விழுந்த அதிர்ச்சியில் ஏதாவது ஒரு வெடி குண்டு வெடிக்க நேர்ந்திருந்தால் பெருத்த சேதம் ஏற்பட்டிருக்கும். அப்படி ஆபத்து நேராமல் தப்பியது தெய்வாதீனம்தான்!''

படித்து முடித்ததும் சியாமளா பேயறைந்தாற் போல் நின்றாள்.

''சியாமளா, அந்தப் பெட்டி, ... ரெண்டு வருஷமா... நம்ம வீட்டில்...'' — நடுக்கத்தால் மேலே பேச முடியாமல் திணறினான் ஸ்ரீதர்.

பேயறைந்த தோற்றம் சியாமளாவின் முகத்திலிருந்து மறைவதற்குச் சிறிது நேரம் பிடித்தது.



-பகவத்சிங் அன்பரசு

“வாங்கோ! வாங்கோ!”

கிருஷ்ணன் வந்ததும் வராததுமாய், கமலா அவனை மலர்ந்தமுகத்துடன் வரவேற்றாள்.

“ஏன் லேட் ஆபீஸ்லே ரொம்பவேலையா?”

“ம்... ம்”...”

அவன் சட்டையைக் கழற்றி ஸ்டாண்டில் மாட்டினான். முகம் மாறியிருந்தது. மலர்ச்சியில்லே. கடந்த பத்து நாட்களாக அவனுக்குள் பிரச்சினை.

“களைச்சுப் போயிருக்கேளே...; முகம் அலம்பிண்டு வாங்கோ காப்பி தரேன்.”

“ம்...”

“எல்லாத்துக்கும் ‘உம்’ தானா?”

அவள் அவனை ஏற இறங்க ஒரு முறை பார்த்தாள். அவன் மிகவும் சோர்வாகக் காணப்பட்டான்.

அவள் சமையலறைக்குக் கிளம்பினாள்.

அவனுக்கு மனத்துக்குள் ஏதோ செய்தது.

கிருஷ்ணன் குழாயடிக்கு வந்து தொட்டியில் நிரம்பியுள்ள நீரை வெறித்துப் பார்த்தவாறு விரல் நகத்தைக் கடித்துக் கடித்துத் துப்பிக் கொண்டிருந்தான்.

அவன் மனம் எதையோ அசை போட்டுக் கொண்டிருந்தது. மனசுக்குள் குழப்பம்.

முகத்தைத் துடைத்துக் கொண்டு வந்தான்.

நாற்காலியில் உட்கார்ந்தவாறு அவன் யோசனையில் ஆழ்ந்திருந்தான்.

துணிச்சலும் குற்ற உணர்வும் மாறி மாறித் தன்னை ஆட்கொள்வதை நினைத்துக் குழம்பினான்.

‘தன் வழி சரியா? தவறானதா? தான் செய்வது துரோகம் ஆகாதா?’

அவன் மனம் அலைந்தது.

என்ன நினைத்தானோ? திடீரென்று எழுந்து கழற்றி மாட்டியிருந்த தன் சட்டைப் பையிலிருந்து கடிதத்தை எடுத்துக் கிழிக்கப் போனான்...

ஒரு கணம் யோசித்தான். கிழிக்கவில்லை. அப்படியே வைத்து விட்டான்.

அவனுக்குக் குழப்பம். விரல் நகத்தைக் கடித்துக் கடித்துத் துப்பினான். மனசில் மனைவியின் பரிவு...?

ஓ... அவள் பரிவு தான்...

ஒரு வாரத்துக்கு முன்...

ஞாயிற்றுக் கிழமை...

கிருஷ்ணனும் கமலாவும் சிரித்துச் சிரித்துப் பேசி விளையாடிக் கொண்டிருந்தனர்.

“ஏதோ ரகசியம்னேளே சொல்லுங்கோ.”

“சொன்னா நோக்குக் கோபம் வரும்.”

“நான் ஏன் கோவிக்கக்கப் போறேன்?”

“நோக்குப் பாதகமா இருந்தா.”

“என்ன பயமுறுத்தறேளா?”

“பயமுறுத்தலே... நான் சொன்னா நோக்கு நிஜமாவே கோபம் வரும்.”

“நேக்குக் கோபமா? குழந்தையாட்டமா இருக்கிற உங்களண்டே கோவிச்சா பாவமாச்சே.”

அவள் கொஞ்சினாள்.

அவனுக்குத் தைரியம் வந்தது. தலையை உலுக்கிக் கொண்டான்.

“சோமன் கோவில் தெருவிலே சாம்பசிவய்யர் தெரியுமோ?”

அவள் கலகலவென்று வாய்விட்டுச் சிரித்தாள்.

“ஏன் சிரிக்கறே.”

“என்ன சொல்லப் போறேன்னு தெரியறது...”

“நோக்குத் தெரியுமா?”

“தெரியுமே... இதுக்குப் போய் ரொம்ப அலட்டிக்கிறேளே. நீங்க குழந்தைன்னா குழந்தைதான்... உங்களுக்குச் சாம்பசிவய்யர் பொண்ணு ஹேமாவைக் கேட்டா... அவா தர மாட்டேன்னுட்டா... இதானே... இது பெரிய ரகசியமோ?... என்னை அசடுன்னு நினைச்சிண்டேளா?”

மீண்டும் சிரித்தாள்.

“இல்லே கமலா.”

“என்ன இன்னும் உளறப் போறேளா?”

“சொல்லவிட மாட்டேங்கிறியே.”

“சொல்லுங்களேன்.”

“ஹேமாவும் நானும் காதலிச்சோம்.”

அவள் விழித்தாள்.

“என்ன காதலிச்சேளா!” அவள் குரல் கொஞ்சம் கம்மியது.

“ஆ... மா...”

“எப்படிக் காதலிச்சேள்?” கேலியாகச் சிரித்தாள்.

''...''

''அப்புறம்.''

''அத்தை சொல்லியிருப்பாளே... பொண் கேட்டதுக்குத் தர மாட்டேன்னுட்டா. நான் ரொம்ப வேதனைப் பட்டேன்... தாங்க முடியாம துடிச்சேன்... அவளை நினைச்சு நினைச்சுச் சாப்பிடாம இருந்தேன்... பைத்தியம் பிடிச்ச மாதிரி திரிஞ்சேன்... நேக்கு செத்துப் போயிடலாம்னு கூடத் தோணித்து...''

சோகம் ததும்பிய முகபாவத்துடன் சொன்னான்.

''நல்லாக் கதை சொல்றேளே... இப்படிச் சொன்னா நேக்குக் கோபம் வரும்னு சொல்லிப் பாக்கறேளாக்கும்... நிஜமா அப்படி இருந்தாலும் நான் கோவிச்சுக்க மாட்டேன்.. தெரிஞ்சிக்கோங்கோ...''

''நிஜம் கமலா.''

உடனே அவள் முகம் மாறியது.

''ஹேமாவாம்... பேய்... பிசாசு...''

''என்ன கமலா இது.''

''பிசாசு... பிசாசு...!''

அவளுக்குக் கோபம் முழுவதும் ஹேமாவின் மீது திரும்பியது.

''இதுக்குத்தான் அடிக்கடி அவ நினைப்பு வந்து உம்னு ஆயிடறேளா?... இப்பத்தான் புரியறது... உங்க மனசைத் துடிக்க விட்டிருக்காளே... அவ உருப்படுவாளா? விளங்குவாளா? கல் நெஞ்சுக்காரி... இனிமே நீங்க கவலையே படக் கூடாது... சந்தோஷமா இருக்கணும்.''

''கமலா அவளைத் திட்டாதே... நல்லாயிருக்கட்டும்.''

''நல்லாயிருக்கட்டுமா? இதோ பாருங்கோ. உங்க சந்தோஷத்தைக் கெடுக்கிறது யாராயிருந்தாலும் நேக்குப் பிடிக்காது.''

அவளுக்கு அழுகை பொங்கியது.

''கமலா!''

அவனும் அழுது விட்டான்.

''நீங்க ஏன் அழறேள்?... ஹேமாவைத் திட்டுறேனேன்னு அழறேளா? திட்டல்லே அழாதீங்கோ...''

ஆறுதலா அது...

பரிவின் வெளிப்பாடல்லவா?...

அவன் நாற்காலியிலிருந்து அசையவில்லை. திருதிருவென்று விழித்துக் கொண்டிருந்தான்.

அதிர்ச்சி தரும் ரகசியத்தைச் சொல்லிய பின்பும் தன் மீது மனைவிக்குள்ள பரிவு... மறக்க இயலாத ஹேமாவின் காதல்...

அவன் மனம் இங்கும் அங்குமாக மாறி மாறித் தாவிக்கொண்டிருந்தது.

சிறிது நேரத்தில் அவள் பலகாரத் தட்டையும் காப்பி டம்ளரையும் கொண்டுவந்து மேஜையில் வைத்து விட்டு நிமிர்ந்தாள்.

அவன் முகம் வெளிறி இருந்தது.

அவள் சூள் கொட்டிக் கொண்டாள்.

''ஏன் ஹேமா நினைப்பு வந்துடுத்தா?... ஏன் அவளை நினைச்சு வேதனைப் படறேள்?...''

அவன் சுயநினைவு வந்தவன் போல் தலையை உலுக்கிக் கொண்டான்.

சிறிது நேரத்தில் அவன் சாப்பிட்டு முடித்தான். அவள் காலித் தட்டும் டம்ளரும் எடுத்துக் கொண்டு திரும்பினாள்.

அவன் பத்து நிமிடத்துக்குள் உடைமாற்றிக்கொண்டு வெளியே வந்தான்.

சமையலறைக்குள் அவள் வேலையாயிருந்தாள். அவன் ஏதோ சொல்ல வாயெடுப்பதும் தயங்குவதுமாகத் தடுமாறினான்.

''கமலா வெளியே போயிட்டு வர்றேன். சலவைக்காரனை வரச் சொல்லிட்டுப் போறேன்... வெளுக்கப் போட்டுடு... போடறப்ப... பையிலே காசு பணம் இருக்கான்னு ஒரு தடவை பார்த்துக்கோ.''

அவன் மனசில் வெற்றியின் மின்னல்... பின் கருமேகங்கள்.

''ம்... சரி... கும்பகோணத்தையே சுத்தாதீங்கோ... கால் வலிக்கப் போறது... சீக்கிரமா வந்துடுங்கோ.''

''சரி வர்றேன்.''

''வாங்கோ.''

அவன் வாசலுக்குச் சென்று ஒரு கணம் தயங்கினான். பிறகு வெளியே நடந்தான்.

மூன்று நாட்களுக்கு முன் ஆபீஸில் கிருஷ்ணன் கம்பீரமாய் உட்கார்ந்திருந்தான். கோமதி அவனுக்கு எதிரில் நின்றிருந்தாள்.

''கோமதி... நேக்கு ஓர் உதவி செய்வியா?''

''ஓ.''

''இது பர்சனல்.''

''...''

அவள் முகத்தைப் பின்னும் இழுத்துக் கொண்டு தலையாட்டினாள்.

''ஹேமாவை நோக்குத் தெரியுமா?''

''தெரியும் சார்.''

நாணிக் கொண்டாள்.

''அவ விஷயமாத்தான்.''

தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு கல்லூரிகளைச் சார்ந்த மாணவ மாணவியரான நாங்கள் சுமார் 40 பேர் காந்திய சுற்றுப் பயணத்தில் கலந்து கொண்டு வடநாடு சென்றிருந்தோம். ஒவ்வொரு இடத்தைப் பார்த்து விட்டு வந்த பின்னும், அடுத்த ஊருக்குச் செல்லும் போதும் எல்லோரும் இருக்கிறார்களா என்று சரி பார்ப்பார்கள். கல்கத்தாவிலிருந்து பாட்னாவுக்குப் புறப்படுகையில், எங்களை முன்னின்று அழைத்துச் சென்றவர், 'யாராவது 'மிஸ்' ஸாகி விட்டார்களா?' என்று கேட்டுச் சிலரது பெயரையும் குறிப்பிட்டார். நான் மெதுவாக ''எல்லோருமே 'மிஸ்'தான் ஸார்! இனித்தான் ஸார் 'மிஸ்ஸஸ்' ஆக வேண்டும்''என்றேன். எல்லோரும் சிரித்து விட்டார்கள். அவருந்தான். வேறு வழி?

—தேவி சகுந்தலா.



''புரியலியே சார்.''

''ஹேமா நேக்கு எழுதின மாதிரி ஒரு லெட்டரை நானே எழுதி வச்சிருக்கேன்... அதை நீ ஒங்கையாலே காபி பண்ணிக் கொடுக்கணும்... ஒரு பெண் எழுதின லெட்டரா இருக்கணும்... அதுக்குத்தான்...''

''எதுக்கு சார்.''

''ம்... எதுக்கா... நீ காப்பி பண்ணித் தர்ற லெட்டரை நேக்குத் தெரியாம என் பத்னியைப் படிக்கவைக்கணும். அதைப் படிச்சிட்டான்னு அவளுக்கு என்மேலே கோபம் வரும்... அப்... ஆத்துக்குப் போயிடுறேன்னு கிளம்பிடுவா அவளை அடியோடு கைகழுவிடணும்...''

அவனுக்கு அதிர்ச்சி.

''மெட்ராஸ் டிரான்ஸ்பர் பத்து நாள்லே கிடைச்சிடும்... உடனே எல்லா ஏற்பாடும் பண்ணிண்டு ஹேமாவை ரிஜிஸ்டர் பண்ணிக்கப் போறேன்... ம்... லெட்டர்லே லேடி ஹேண்ட் ரைட்டிங் இருக்க வேணுமில்லையோ? அதுக்குத்தான்...''

''அப்படின்னு ஹேமாவையே எழுதச் சொல்லலாமே... ஏன் அவ சம்மதம்...''

''அவ வந்து... எழுதி... அப்புறம் நாளாயிடும்... டிரான்ஸ்பர் வேறே... கஷ்டப்பட வேண்டியதாயிடும்... ஹேமாதான் ரிஜிஸ்டர் பண்ணிக்கலாம்னு சொன்னு...''

''ம்...''

''கோமதி நீ நேக்கு வேண்டப்பட்ட பொண்... அதனுலே தான் தைரியமா கேட்டுண்டேன்... யார் கிட்டேயும் சொல்லிடாதே... மானம் போயிடும்...''

அவள் ஒன்றும் சொல்லாமல் கடிதத்தைக் காப்பி பண்ணிக் கொடுத்துவிட்டு விடை பெற்றுச் சென்று விட்டாள்.

அவள் நடையின் வேகம் அவனுக்கு அவள் நிலைகுலைந்து போயிருந்தாள் என்று புரிய வைத்தது.

அவன் முகம் சற்று மாறியது

அவன் வீட்டுக்கு வந்தான். சுற்றுமுற்றும் பார்த்தான். அவள் சமையலறையில் வெறுந் தரையில் படுத்திருந்தாள். உள்ளே போய் ஸ்டாண்டைப் பார்த்தான். சட்டையில்லை.

''தன் கடிதத்தைப் படித்து விட்டாளா? அதனால்தான் படுத்து விட்டாளோ? என்ன ஆகப் போறதோ?''

அவனுக்கு மனசு அடித்துக் கொண்டது.

''ஏன் கமலா படுத்துட்டே?''

குரல் கேட்டு அவள் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள். அவள் முகம் மிகவும் வாடியிருந்தது.

''இப்பத்தான் வர்றேளா?''

''ம்...'' என்று மென்று விழுங்கினான்.

''நீங்க இப்படிச் செய்யலாமா?''

அவள் குரல் கம்மியது.

அவன் வெலவெலத்துப் போய் விட்டான்.

''நீங்க போனப்பறம். கோமதி வந்து சொல்லிட்டு அழறு...''



நாகர் கோவிலில் பஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள உணவு விடுதி ஒன்றில் ''Express Service'' என்று அறிவிப்புக் கொண்ட தனிப் பகுதி உண்டு. அவசரமாக பஸ்ஸுக்குச் செல்ல வேண்டியவர்களை, அந்த அறையில் அமர்த்தி உடனுக்குடன் அவர்களுக்கு வேண்டியதை அளித்து, அனுப்பி வைக்கின்றனர்.

—பி. நாராயணன்.

நிமிர்த் தாக்குதல்.

அவனுக்கு அதிர்ச்சி மேல் அதிர்ச்சி...

''இதோ பாருங்கோ... இந்த ஒரு வருஷம் உங்களோட வாழ்ந்திருக்கேன்... நான் ஏதாச்சும் தப்பு பண்ணியிருக்கேனு? உங்களுக்குக் குறை வச்சிருக்கேனு? உங்க மனசு கோணும் படியா நடந்திருக்கேனு? சொல்லுங்கோ... கண்ணுக்குக் கண்ணு உயிருக்கு உயிரா... உங்களைப் பூ மாதிரி வச்சிண்டிருந்தேன்... உங்க சந்தோஷம்தான் பெரிசுன்னு இருந்தேன்... ம்... நீங்க விரும்பலேன்னு நான் பொறந்தாத்துக்குப் போயிடுறேன். கை கழுவிடுங்கோ.''

அவனுக்குக் கண்களில் நீர் முட்டியது.

அவன் நிமிர முடியாமல் நிலைகுலைந்திருந்தான்.

''ஹேமாவுக்கு உங்களைப்பத்தி என்ன தெரியும்? அவளாலே உங்க மனசறிஞ்சு உபசரிக்க முடியுமா? உங்களைப் புரிஞ்சிண்டு நோகாம வச்சுக்குவாளா? குழந்தையா இருக்கேள்! உங்களைப் புரிஞ்சுக்காத அவ கிட்டே உங்களை எப்படி விட்டுட்டுப் போகறதுன்னு தெரியலே... அதை நினைச்சா நேக்கு வயத்தைக் கலக்கறது... என்னைப் பத்தி ஒண்ணுமில்லே.. நான் போனப்பறம்... 'இவ என்னை விட்டுட்டுப் போயிட்டாளேனு' என்னை நினைச்சு நீங்க வேதனைப் படுவேளோன்னுதான் நேக்குக் கவலையா இருக்கு... சொல்லுங்கோ... வேதனைப் பட மாட்டேன்னு நான் போறேன். போயிடறேன்.''

அவனுக்கு உயிரே போவது போல் இருந்தது. திடீரென்று கதறி அழுதுகொண்டே வேகமாய் அவளை அணைத்துத் தழுவித் தழுவிப் புலம்பினான்.

அவள் பொங்கிய அழுகையுடன் தேற்றினாள். ''ஏன் குழந்தை மாதிரி அழறேள்? நான் இருக்கேன். தைரியமா இருங்கோ.''

அவனுக்கு அவள் அன்பைத் தாங்க முடியவில்லை. அழுது அழுது புலம்பினான். குழந்தையாய்த்தான் ஆகி விட்டான்.

அவள் மட்டும் என்னவாம்?



என்னடாது
அம்பாப் போச்சு!
இந்த ஐயனர்
கோவில்
குதிரையை
கடத்திக்கிட்டு
போகணுமாம்!
OW! INDIAN APPLE!
..ONLY FIFTY
RUPEES!...
DAMN CHEAP!
ரிஸ்குகள்
ஜாக்கிரதை!
?
ரிஸ்ட் ஜோக்ஸ்
சாதாலிஸ்க்ஸ்
!
ஸ்னேக் ஸ்கின்
பெல்ட்
ஸார்!
ஸ். ஸ்
என்ன கட்டை அப்படிப்பாக்குது!
எல்லாரும் என் அமெரிக்க-
சிஷ்யர்கள்!



கதிர்காம க்ஷேத்திரம் முன்புறத் தோற்றம்



வேளாங்கண்ணி திருவிழா



காசி

பத்ரிநாத் யாத்திரை :

திருமதி சரோஜினி சுவாமிநாதன், திரு எஸ். சுவாமிநாதன்:

ஹரித்வார் போய் அங்கிருந்து ரிஷிகேசம் போனேம். ரிஷிகேசத்தில் திருப்பதி தேவஸ்தானத்துக்குச் சொந்தமான பெரிய சத்திரம் உள்ளது. அங்கு இரவு தங்கினேம். குறைந்த விலையில் நல்ல வசதியோடு அறைகள் கிடைக்கின்றன.

பத்ரிக்கு அங்கிருந்து பஸ்ஸில் செல்ல வேண்டும். காலை ஆறு மணிக்குப் பஸ் புறப்பட்டது. போகும் வழி முழுதும் மலைப்பாதைதான். அந்தப் பாதையின் நிர்வாகம் முழுதும் ராணுவத்தினர் பொறுப்பில் உள்ளது.

வழி முழுவதும் இயற்கைக் காட்சிகள் எழில் கொஞ்சின. உலகப் பிரசித்தி பெற்ற இமயமலைச் சாரலில் பயணம் செய்கிறேம் என்ற எண்ணமே மகிழ்வை அளித்தது.

ஒவ்வொரு மலையும் ஒவ்வொருவண்ணத்தில் இருக்கிறது. சில இடங்களில் கங்கை மிக அருகிலும், சில இடங்களில் அதள பாதாளத்திலும் ஓடுகிறது.

இரவு ஜோஷி மடத்துக்கு வந்தோம். ரொம்பக் குளிராக இருந்தது. பஸ் போய் நிற்குமுன்பே பலர் ஓடிவந்து 'எங்கள் ஹோட்டலில் தங்குங்கள்' என்று நம்மைச் சுற்றிக் கொள்கிறார்கள்.

காலையில் ராணுவம் உத்தரவு கொடுத்த பிறகே பஸ் புறப்படுகிறது. பிற் பகலுக்கு முன் பத்ரி போய்ச் சேர்ந்தோம். ஆங்காங்கு ஏற்படும் மலைச் சரிவுகளை ராணுவத்தினர் சரி செய்கின்றனர்.


எத்தனை கம்பளி உடுப்புப் போட்டாலும் குளிருக்குத் தாங்கவில்லை. நெருப்பு கொஞ்சம் கூட உறைப்பதில்லை. கம்பளிப் போர்வைகள் பயன் படவில்லை. அங்கேயே கொடுக்கப்படும் ''ரஜாய்'' என்ற கனமான படுக்கைகள் தாம் ஓரளவுக்குக் குளிரைத் தடுக்கின்றன. படுக்க ஒன்றும் போர்த்திக் கொள்ள ஒன்றுமாகப் பயன்படுத்துகிறேம்.

நினைத்தாலே இனிக்கிறது

திருச்செந்தூர் கோயில்



அழகர் திருவிழா மதுரை









ராமேஸ்வரம் கோயில் அக்னிதீர்த்தம்

கேதார்நாத்

ஸ்ரீரங்கம் குதிரை சிலை

நெஞ்சமெல்லாம் மணக்கிறது!

பத்ரிநாதர் ஆலயம் சிறியதுதான். உயரத்தில் அமைந்துள்ள அதை அடையப் படிகள் உள்ளன. பத்ரி நாதரின் உருவம் நீரில் பல வருடங்கள் இருந்ததால் கல்லில் விரிசல்கள் ஏற்பட்டுள்ளன. ஆதிசங்கரர் அதனை மீண்டும் பிரதிஷ்டை செய்ததாகக் கூறுகிறார்கள்.

அவ்வளவு குளிரிலும் அங்கு வெந்நீர் ஊற்று உள்ளது. அதில் நீராடி விட்டுத்தான் தரிசனத்துக்குச் செல்கிறார்கள். அந்த ஸ்நானத்தில் குளிர் பறக்கிறது.

ராணுவத்தினர் தங்கள் காணிக்கையாகக் கோயில் வாயிலில் பெரிய மணி பதித்துள்ளார்கள்.

கோவிலில் மஹாலக்ஷ்மி சந்நிதி உள்ளது. ஸ்ரீபத்ரிநாதர், நரநாராயணர், குபேருடன் காட்சி தருகிறார். முழுதும் வெள்ளிக் கவசம். அங்கு நம் நகைகள், மணிபர்ஸ், பேனா எதைக் கொடுத்தாலும் தெய்வத்தின் பாதத்தில் வைத்துக் கொடுக்கிறார்கள். கோயிலை ஆறு மாதம் மூடி வைத்து விட்டு மீண்டும் திறக்கும் போது ஏற்றி வைத்து விட்டுப் போன தீபம் எரிந்து கொண்டே இருக்கிறது!

இக்கோயில், மீது ராணுவத்தினருக்கு எல்லையில்லாப் பக்தி இருக்கிறது. எல்லையைக் காக்கும் ராணுவ வீரர்களைக் காப்பதும், அந்தப் பத்ரி நாதன்தானே!



திரு ஸ்வாமிநாதன்
திருமதி சரோஜினி



திரு லக்ஷ்மண் திருமதி பாரதி லக்ஷ்மண்



திரு பிரான்ஸிஸ் சேவியர்
திருமதி பியோனா சேவியர்
மகன் ஜெரால்டு,
மகள் ஜெர்ரியுடன்





திருமதி நிர்மலாபதிலால் திரு ரூபசந்திரலால்



திருமதி சீ...
திரு ஜெயராம்


தலை தப்பியது!

நாலைந்து வருடங்களுக்கு முன்னால் நாங்கள் கேரளாவிற்கு உல்லாசப் பயணம் போனோம்.

இரவு இரண்டு மணி இருக்கும். டிமார் என்று வண்டி குலுக்கலுடன் நின்றது. காப்பி சாப்பிடத்தான் வண்டி நிற்கிறது என்று நினைத்துக் கொண்டு இறங்கிப் போய்ச் சோடா குடித்துக் கொண்டு இருந்தேன்.

டிமார் என்று பஸ் புறப்பட்டு விட்டது. பாதி சோடாவை அப்படியே போட்டு விட்டு காசு கூடக் கொடுக்காமல் ஓடி வந்தேன். பஸ் வேகமாகப் புறப்பட்டு விட்டதால் பின் பக்கம் உள்ள கேரியரில் தொத்திக் கொண்டேன். புட்போர்டு வழியாக உள்ளே போகலாம் என்றால் கதவு மூடப்பட்டு விட்டது. பஸ்ஸோ வேகமாகப் போய்க் கொண்டிருந்தது. குளிர்க் காற்று வேறு உடம்பைத் துளைத்துக் கொண்டு இருந்தது.

என்னால் கம்பியைப் பிடித்துக் கொண்டு நிற்க முடியவில்லை. பின் பக்கம் கண்ணாடியில் ஓங்கி, ஓங்கி தட்டிப் பார்த்தேன். பலன் இல்லை. எல்லோரும் சுகமான தூக்கத்தில் இருந்தார்கள். மேலே ஏறி டாப்பிற்குப் போய் விடலாம் என்றால் தாழ்வான மரக் கிளைகள் பயமுறுத்தின. இப்படியே இன்னும் 10 நிமிடம் பஸ் போய் இருந்தால் நான் கீழே விழ வேண்டியதுதான் என்னும் அளவுக்குக் கை பழுத்துப் போய் விட்டது.



நான் என்ன செய்வது என்று நினைத்துக் கொண்டு இருக்கும் பொழுது பஸ் நின்று விட்டது. தொப்பென்று கீழே குதித்தவன் ஆயாசமிகுதியால் ரோட்டிலே அப்படியே படுத்து விட்டேன்.

பஸ்ஸில் இருந்தவர்கள் ஒவ்வொருவராகக் கீழே இறங்கினார்கள். அவர்கள் கீழே நான் கிடந்த நிலையைப் பார்த்ததும் பதறிப்போய் என்னிடம் ஓடி வந்தார்கள். டிரைவர் என் அருகே ஓடிவந்தார். நான் நடந்தவற்றைச் சொன்னதும் டிரைவர் "அந்தத் தெய்வம் தான் உன்னைக் காப்பாற்றியது. டயர் பஞ்சர் ஆகாவிட்டால் நான் வண்டியை இங்கே நிறுத்தி இருக்க மாட்டேன். அப்போது உங்கள் கதி என்ன ஆகி இருக்கும்?" என்றார். நிலைமையை உணர்ந்து நான் சிலிர்த்துப் போனேன்.

நான் சோடாக் குடிக்க இறங்கிய இடத்தில் அவர்கள் காப்பி சாப்பிட வேண்டி நிறுத்தவில்லையாம். முதல் டிரைவர் ஷிப்ட் முடிந்து மறு டிரைவர் மாறி வண்டி ஓட்டுவதற்காக நிறுத்தினார்களாம்.

எப்படி இருந்தால் என்ன? நான் போன இந்த உல்லாசப் பயணம் மறக்க முடியாதது. மு. அனுசுயா ராமலிங்கம்.

ஜெய் விசால் பத்ரி என அங்கு முழங்கும் பக்தியொலியை இப்பிறவியில் மறக்கவே முடியாது.

காசி யாத்திரை

திருமதி பாரேதி லக்ஷ்மண், திரு லக்ஷ்மண் :

நாங்கள் காசிக்குப் போகும் தீர்மானத்தைக்கொண்டுவந்தபோது நெருங்கிய நண்பர்களும், உறவினர்களும் சேர்ந்து கொண்டார்கள்.

ரயிலில் போகும் போது பஜனைப் பாடல்களைப் பாடிக் கொண்டே சென்றதால் பொழுது இனிமையாகச் சென்றது. ஒவ்வொருவரும் தங்கள் குடும்பத்தில் தங்கள் முன்னோர்கள் காசிக்குப் போய் வந்ததை விவரித்தனர்.

காசியை அடைந்ததும் எங்களையும் மீறி ஒரு பரபரப்பு. கங்கையில் நீராடப் புறப்பட்டோம். நாங்கள் ஏற்கெனவே கடிதம் போட்டிருந்ததால் புரோகிதர் தயாராக வந்திருந்தார். சங்கல்பம் செய்து கொண்டு நீராடினோம். அமைதியாகக் கம்பீரமாகக் கங்கை ஓடுவதே கண்ணுக்கு இனிமையான காட்சி. ஒரு படகில் ஏறிச் சுமார் பன்னிரண்டு கட்டங்களுக்குச் சென்று நீரைப் பிரோக்ஷணம் செய்து .கொண்டோம்.

கொண்டு வந்திருந்த பாத்திரங்களில் கங்கை நீரை நிறைத்துக் கொண்டோம். மண் பானைகளும் விற்கிறார்கள். பெண்கள் அதில் நீரை நிரப்பிக் கொண்டனர். அங்கிருந்து பல சந்துகளைக் கடந்து ஸ்ரீ விசுவநாதர் ஆலயத்துக்கு வந்தோம். கொண்டு வந்திருந்த நீரால் அபிஷேகம் செய்தோம். வலம் வந்தோம். விசுவநாதருக்கு ஒரு நொடி கூட இடைவெளியின்றி அபிஷேகம் நடந்து கொண்டே இருக்கிறது.

விசாலாக்ஷி அம்மன் கோயிலுக்குச் சென்று அர்ச்சனை செய்தோம். ஸ்வர்ண அன்ன பூரணி கோவிலைத் தரிசித்தோம்.

துளசிதாசர் உட்கார்ந்து எழுதிய இடத்தையும் அவர் வழிபட்ட ஹனுமாரையும் தரிசித்தோம்.

காசி யாத்திரை செய்து திரும்பியதிலிருந்து மனத்தில் என்றுமில்லாத அமைதி நிலவுகிறது.

கதிர்காம யாத்திரை :

திருமதி திரௌபதி லால், திரு ஜகத் பிரசாத் லால்:

கதிர்காமக் கந்தனைத் தரிசிக்க வேண்டும் என்ற நீண்ட நாள் ஆசையால் இலங்கைப் பயணத்தை மேற்கொண்டோம்.

கதிர்காமத்தில் முருகன் சந்நிதியில் ஒரு திரைதான் உண்டு. அதைத்தான் தரிசனம் செய்ய வேண்டும். ஆனால் அந்த இடத்துக்குச் சென்றாலே புல்லரிக்கிறது.

அம்மன் சந்நிதிக்கு வந்தோம். பிரசாதமாக விபூதி தந்தார்கள். 'இது என்ன? அம்மன் சந்நிதியில் விபூதி தருகிறீர்களே!' என்றோம்,

காஷ்மீர் விநோதங்கள்!



சமீபத்தில் நாங்கள் காஷ்மீருக்கு உல்லாசப் பயணம் சென்றிருந்த போது, காஷ்மீரில் சில அதிசயங்களைக் கண்டோம்.

காஷ்மீர் 'டீ' கடைகளில் டீக்கு உப்பு போட்டுத் தருவார்கள்.

காஷ்மீரில் இங்கு போல் மிளகாய் உதிரியாக விற்பனை செய்வதில்லை. மிளகாயை மாலையாகக் கட்டித்தான் கடைகளில் விற்கிறார்கள்!

காஷ்மீர் மார்க்கட்டில் வெங்காயம் செடியுடனேயே கிடைக்கும்!

காஷ்மீரில் பிணத்தைத் தூக்கிச் செல்லும் போது, பிணத்துக்கு வெயில் படாமலிருக்க, குடை பிடிக்கிறார்கள்!

—சம்பத் குமாரி.

'இந்த ஊரில் எல்லாம் குங்குமம் கிடைக்காது' எனக் கூறி விட்டார் அர்ச்சகர்.

இதென்ன வேடிக்கை என்று எண்ணிய போது என் முதுகை ஒருவர் தட்டினார். திரும்பிய போது வயதான முதியவர் ஒருவர் 'இந்தா!' எனக் குங்குமம் கொடுத்தார்.

நல்ல சகுனமாகத் தோன்றவே பவ்யமாகப் பெற்றுக் கொண்டோம்.

''அதோ அந்த இடத்துக்கும் போய்விட்டுக் கிளம்பு. உனக்குச் சம்பந்தப்பட்டது தான் அந்த இடம்'' என்றார் பெரியவர்.

அங்கு போய்ப் பார்த்தோம். தத்தாத்ரேயர் சந்நிதி! அவர் படத்தை வைத்துக் கொண்டு, நான்கு ஐந்துபேர் இருந்தனர்.

தத்தாத்ரேயர் காசி மடத்துக்கு நாங்கள் காணிக்கை செலுத்துவது வழக்கம். அது தான் எங்கள் குல தெய்வம். ஆகவே அங்கு தத்தாத்ரேயரைப் பார்த்ததும் ஆச்சரியமாகி விட்டது.

'ஆரம்பத்தில் இந்த முருகன் கோவில் காசி தத்தாத்ரேயர் மடநிர்வாகத்தில் இருந்தது. அப்போது வந்தவர்களின் வம்சத்தினர் நாங்கள். இந்தச் சந்நிதியை நிர்வகிக்கிறோம்' என்றனர். வெளியே வந்தபோது எங்களுக்குக் குங்குமம் கொடுத்து அனுப்பிய பெரியவரைக் காணோம். எங்கள் குல தெய்வத்தின் சந்நிதியைக் காண்பித்தாரே, ஒரு நன்றி கூடச் சொல்லவில்லையே என்று ஏங்கினோம்.

வேளாங்கண்ணி யாத்திரை :

திருமதி பியானு சேவியர், திரு பிரான்ஸிஸ் சேவியர்:

வேளாங்கண்ணிக்குச் செல்லும் போது உறவினர்களுக்குச் சொல்லி விட்டுச் செல்வது வழக்கம். அவர்களும் தங்கள் காணிக்கையைப் போகிறவர்கள் மூலம் செலுத்துவார்கள். பயண நாட்களில் அசைவம் உண்ணுவது, மனச்சுமை இல்லாமல் இருப்பது வழக்கம்.

நாகப்பட்டினத்துக்குச் சென்று இறங்கினோம். அங்கிருந்து கடற்கரை வழியாகக் கோயிலுக்குச் சென்றோம்.

காலைப் பிரார்த்தனையுடன், மகன் ஜெரால்டின் முடியைக் காணிக்கையாகச் செலுத்தினோம். பின்பு எல்லோரும் கடலில் குளித்தோம். உப்புத்தண்ணீரானாலும் இனிமையாக இருந்தது. மீண்டும் பிரார்த்தனை செய்து கொண்டோம்.

பக்தர்களின் காணிக்கை கொண்ட பொருட்காட்சி ஒன்று உள்ளது. ஸ்டெதாஸ்கோப், மாங்கல்யம் முதலியன கூடக் காணப்பட்டன. வெள்ளி மனித உருவங்களும் இருந்தன. பக்தர்கள் பெயர் பொறித்த காணிக்கைத் தேங்காய்கள் வெளி நாடுகளிலிருந்து கடலில் மிதந்து பத்திரமாக வந்து சேர்கின்றன!

கடலோசையுடன் மனத்துக்கு அமைதி தரும் பைபிள் பாடலை, கோயிலில் இசைக்கும் போது, ஏற்படும் இன்பம் அலாதிதான்!

பிரசாதமாகத் தரப்படும் அரிசிப் பொரியையும், தாலிக் கயிற்றையும் ஊர் திரும்பியதும் உறவினர்களுக்கும் விநியோகித்தோம்.

ராமேஸ்வர யாத்திரை :

திருமதி சீதா ஜெயராம், திரு ஜெயராம்:

ராமேஸ்வரத்தின் புகழ்பெற்ற பிராகாரங்களைப் படத்தில் பார்க்கும் போதெல்லாம் ஒரு முறையாவது அந்த அழகிய வேலைப்பாட்டை நேரில் பார்க்க வேண்டும் என்று ஆவல் ஏற்படும். அந்த ஆவல் நிறைவேறியதும் மகிழ்ச்சிக்குக் கேட்கவா வேண்டும்?

ராமேசுவரத்தில் வண்டி நின்றதும் புரோகிதர்கள் சூழ்ந்து கொள்கிறார்கள்.

முதலில் கடலில் நீராடல். பின்பு கோயிலில் உள்ள சுமார் 22 தீர்த்தங்களிலும் நீராடினோம். ஒவ்வொரு தீர்த்தமும் வெவ்வேறு சீதோஷ்ண நிலையில் உள்ளது. ஈரத்துடன் சுவாமியைத் தரிசிக்கும் போது எங்களுக்குப் பசி தாகமே தெரியவில்லை. கோயில் நுழைவாயில் அருகில் விவேகானந்தர் இந்தக் கோயிலுக்கு வந்ததாகப் பொறித்திருக்கிறார்கள்.

இரவே புறப்படுவதாக ஏற்பாடு. திடீரென்று காற்று வேகமாக அடிக்கவே வண்டி போகாது எனக் கூறி விட்டனர். காற்றின் வேகத்தைப் பார்த்த போது முழுசாக ஊர் திரும்புவோமா எனக் கிலி வந்து விட்டது!

இரவெல்லாம் பிரார்த்தனைதான்! மறுநாள் பன்னிரண்டு மணிக்கு நிலைமை சீராகி விட்டது. வண்டி புறப்பட்டது.

வெள்ளைச் சங்கும் ஓலைக் கூடைகளும் நினைவாக வாங்கி வந்தோம்.

பேட்டி: **''சிக்கி''**

பயம்-கவலை-பிரமிப்பு-அதிசயம்

மீரா கூறுகிறார் :

முதல் தடவையாக நான் வெளி நாட்டுக்குக் கிளம்பினேன். சிங்கப்பூர், கோலாலம்பூர், பினங் முதலிய பல ஊர்களுக்குச் சென்றேன். கோலாலம்பூரில் ஒரு பன்னிரண்டு மாடிக் கட்டிடத்தில் நான் என் அம்மா வேறு சிலருடன் லிப்டில் இறங்கிக் கொண்டிருந்தேன். ஐந்து மாடிகளைக் கடந்து கீழிறங்கிய லிப்ட் திடீரென்று நின்று விட்டது. உள்ளே இருந்த எங்களுக்கு வியர்க்க ஆரம்பித்தது. காற்று இல்லை. மூச்சுமுட்ட மிகவும் கஷ்டப்பட்டோம். என் அம்மா 'சென்னையிலிருந்து வந்து இங்கேதானா சாக வேண்டும்? என்று பயந்து பதற ஆரம்பித்து விட்டாள். அரைமணி நேரம் அவதிப் பட்டபிறகு லிஃப்ட் கதவை உடைத்துத்தான் எங்களை வெளியேற்ற முடிந்தது. அதை நினைத்தால் இப்போதும் பயமாயிருக்கிறது.

மலேசியா சிங்கப்பூரில் வீதிகளில் குப்பை போடக் கூடாது என்று எல்லாருக்கும் தெரியும். எனக்கும்தான். ஆனால் தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் என்பார்களே, அந்தப்படி சில சமயத்தில் மறந்து போய்ப் பழத்தைச் சாப்பிட்டு விட்டு தோலை வெளியே எறிந்து விடுவேன். துணைக்கு வந்து கொண்டிருந்த அவ்வூர்க்காரர் அலறிப் புடைத்துக் கொண்டு வண்டியை நிறுத்தச் சொல்லி இறங்கி நான் எறிந்த தோலைப் பொறுக்கி எடுத்துக் காருக்குள்ளேயே போட்டுக் கொள்வார். அபராதம் போட்டால் யார் கட்டுவது என்று அவருக்குக் கவலை! ஓர் ஊரிலிருந்து இன்னொரு ஊர் போவதற்குள் காரில் ஏகப்பட்ட குப்பை சேர்ந்து விடும்! என் கவனத்தைக் கவர்ந்து கண்ணைக் கவர்ந்த காட்சிகள் பல என்றாலும் மறக்க முடியாத ஓர் அம்சம் என்று கேட்டால் ரப்பரால் ஆன வழுவழுப்பான சாலைகள் என்னைப் பிரமிப்பில் ஆழ்த்தியதைத் தான் சொல்வேன். அவ்வூர் டெலிவிஷனை முதன் முதலாக நான் பார்த்த போது அதில் ஓர் அதிசயம்! என்னை நானே பார்த்துக் கொண்டேன்! நான் நடித்த படத்தைத் தான் காண்பித்துக் கொண்டிருந்தார்கள்.

பேட்டி: **ருக்மிணி ராமச்சந்திரன்**





கலைஞரின் இரு கொள்கைகள் படமெடுத்து ஆடுகின்றன. (1) எம். ஜி. ஆர். எதிர்ப்பு. (2) குருட்டு நம்பிக்கைகள் மூடப் பழக்க வழக்கங்களுக்கு எதிர்ப்பு. இரண்டிலும் சீற்றமிருக்கிறது. விஷம் இல்லை. முன்னதில் நையாண்டித் திறனும் பின்னதில் கதை சொல்லும் ஆற்றலும் பளிச்சிடுகின்றன.

தமிழக அரசின் தகவல் துறை படத்துக்கு முன்பாக அமைச்சர்களையும் அரசின் சாதனைகளையும் செய்திப் படத்தில் வரிசையாக முன் நிறுத்தியும் கூடப் பிரதான படத்தில் கலைஞரின் குத்தல் மொழிகளின் முனை மழுங்கவில்லை.

நாத்திக பகுத்தறிவு வாதியான இளைஞன் விபூதி குங்குமம் துலங்க ஆத்திகனாக மாறுவது படத்தில் ஒரு புரட்சி. உண்மையைக் கண்டு பிடிக்க அவன் வேஷம்தான் போடுகிறான் என்றாலும் கடைசியில் பலாத்காரத்தால் கற்பிழந்த ஒரு பெண்ணுக்கு வாழ்வளிக்கத் தயங்காது முன் வரும் போது ஆத்திகனாக மட்டுமல்ல தெய்வமாகவே மாறி விடுகிறான். எல்லாருமே இவனையொத்த மனித தெய்வங்களாக இருந்து விட்டால் கடவுள் கோயில் என்றெதுவும் தேவையில்லைதான். ஆனால் கலைஞர் படத்தில் சித்திரித்திருப்பது போன்ற பேராசைக் காரர்கள், பணப்பேய்கள் காமாதுரர்கள் வேடதாரிகள் ஆகியோர் ஆத்திகர் என்று சொல்லிக் கொள்வோர் இடையேயும் உண்டு. நாத்திக வாதம் செய்வோரிடையேயும் உண்டு. எனவேதான் கடவுள் கோயில் பயபக்தி எல்லாம் தேவைப் படுகிறது. படத்திலும் கூட வெற்றிமேல் வெற்றி பெற்று வரும் வில்லன் கடைசியில் பாம்பு கடித்துத் தானே இறந்து போகிறான்? அதை விதி என்றால் என்ன? தெய்வத்தின் தீர்ப்பு என்றால் என்ன? வாய்மையே வெல்லும் என்றால்தான் என்ன?

'இங்களை கங்கையைத் தாங்கிய

சங்கரன் திருமுடிமேலே ஆடும்பாம்பே'

என்று சீர்காழியின் குரல் கணீரென்று ஒலிக்கும் போது, மெய்சிலிர்க்கிறதே அது தூய உள்ளங்களில் தோன்றும் இறையுணர்வின் வெற்றி.

அமிர்தத்தின் சிறப்பான டைரக்ஷனில் எல்லா நடிக நடிகையருமே திறம்பட இயங்கியுள்ளனர். ஒருவரைச் சொல்லி ஒருவரை விடுவானேன்?

பாம்பைக் கழுத்திலே சுற்றிக் கொண்டு ஊரை ஏமாற்றிய சாமியார் பற்றிய சமீபத்திய செய்தி கலைஞர் முன்னுரை படிக்கவும் தமது இமேஜைப் பதிய வைக்கவும் பயன் பட்டிருக்கிறது.

கிராமத்துக்கு ஒரு பள்ளி, ஒரு மருத்துவமனை, ஒரு தபால் நிலையம் — படத்தின் லட்சியமாக மட்டுமின்றி மக்களின் — ஆட்சியின் லட்சியமாகவும் இருக்க வேண்டியதுதான்.

சிவசமுத்திரம் நீர் வீழ்ச்சிக்கருகே உச்சகட்டக் காட்சிகள் ஆற்றலுடன் படமாக்கப் பட்டுள்ளன.


கவர்ச்சி நடனம், குளியல் காட்சிகள், டிஷ்யூம் சண்டை — அதில் சில வேடிக்கைகள் என்றிப்படி. ஜனரஞ்சக அம்சங்கள் தாராளமாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

இரட்டை இஞ்சின் பூட்டிய தமிழ்நாடு எக்ஸ்பிரஸ்!

- இ. ராஜேந்திரன்







Printed by V. Murali and published by V. Vaidyanathan on oehalf of Messrs Bharathan Publications Private Ltd., at the Bharathan Press, Guindy, Madras - 600 032. Editor: K. Rajendran

புதிய நோக்குடன் திட்டங்கள்

ஆந்திரப் பிரதேசத்தை வளமாக்கும் ஐந்தாண்டுத் திட்ட காலமான 1974-79ல் செலவிடப்படுவதற்காகத் திட்டமிடப்பட்ட தொகை 1500 கோடி ரூபாய்கள் ஆனல் இத்திட்டத்தின் மத்திய காலத்தில் இது 3966 கோடியாக உயர்த்தி திட்டமிடப்பட்டுள்ளது.

ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதையே தனது தலையாய பணியாக ஆந்திரப் பிரதேசம் கருதிச் செயல் படுகிறது. ஆகவே எங்களது சமீபத்திய திட்டக் குறிக்கோள் வேலை வாய்ப்புக்கான சாத்தியக்கூறுகளைத் தோற்றுவிப்பது, குறைந்த தேவைகளை உடனடியாகப் பூர்த்தி செய்யும் விதமாக திட்டத்தை மாற்றியமைத்து அமுல்படுத்துதல் ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன. ஏழை எளிய மக்கள் பலனடைய என்று பொதுவாக இருந்தாலும், குறிப்பாக ஷெட்யூல்டு காஸ்ட், ஷெட்யூல்டு டிரைப்ஸ் மற்றும் பாக்வேர்டு கிளாஸஸ் - ஆகியவர்களை மனதில் கொண்டு இவை அமுல் படுத்தப்படுகிறது.

இதன் முதல் படியாக 13 கோடி ரூபாய் செலவில் வேலையில்லாத 15,000 பேருக்கு வேலைக்கான வாய்ப்புக்களையும் அத்துடன் வேலைகளைப் பெறுவதற்கு உபயோகமாகப் பல்வேறு துறைகளில் பயிற்சியும் அளிக்கப் படுகிறது.

எங்கள் திட்டம்—
புதிய வாய்ப்புகளுக்கு
வழி வகுக்கிறது!

D. I. P. R. 55

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப் பதிப்பு) 60 மலேசியக் காசு

